
சுவடி : 43
ஏடு : 2
ஆகத்து 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**72992 14554**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# வெள்ளையன் திணித்த ஆங்கிலம் கோலோச்சுகிறது 15.08.1947-இல் வெள்ளையன் வெளியேறிவிட்டான்: தமிழன் தாய்மொழி வழியில் கல்வி பெறவில்லை; எந்த இந்தியனும் அவனவன் தாய்மொழி வழியில் உயர்கல்வி பெறவில்லை; ஆங்கில வழியில் கற்கிறான்!



வெள்ளையன். 15-8-1947இல் இந்தியாவை விட்டு வெளியேறினான். அதை “இந்திய விடுதலை நாள்” என எல்லோரும் கொண்டாடினர்.

தந்தை பெரியார் மட்டும், “15-8-1947 திராவிடருக்குத் துக்கநாள்” என்று அறிவித்தார். திராவிடர் கழகத்தார் அனைவரும் அன்று துக்கம் கொண்டாடினோம். ஏன்?

“வெள்ளையன் பார்ப்பனிடமும் - பனியா விடமும் இந்தியாவை ஒப்படைத்துவிட்டுப் போகிறான். திராவிடரைப் பார்ப்பானும் பனியாவும் அடிமையாகவே வைத்திருப்பார்கள்; சூத்திரனாகவே வைத்திருப்பார்கள்” என்று உறுதிபடச் சொன்னார், பெரியார். அது உண்மையாகிவிட்டது.

வெள்ளையன் காலத்தில், 1835இல். பொதுப் பள்ளிகள் திறக்கப்பட்டன. அவரவர் தாய்மொழி வழியில் 1 முதல் 5 வகுப்பு வரை எல்லோரும் படித்தனர்; எல்லா இந்தியரும் அவரவர் தாய்மொழி வழியில் 5ஆம் வகுப்பு வரை படித்தனர். தமிழனும், தெலுங்கனும், மலையாளியும், கன்னடத்தானும், மராட்டியனும், வங்காளியும் - அதாவது ஒவ்வொரு இந்தியனும் 6ஆம் வகுப்பு முதல் ஆங்கில மொழி வழியில் கல்வி கற்பிக்கப்பட்டான். வெள்ளையன் ஆட்சியில், 1865இல் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சிமொழி ஆயிற்று. நிற்க.

பின்னர் 6ஆம் வகுப்பு முதல் 10 மற்றும் 12ஆம் வகுப்பு வரை அவரவர் தாய்மொழி வழியில் கல்வி கற்பிக்கப்பட்டது.

**அதற்கு மேற்பட்ட உயர்கல்வி - பட்டக் கல்வி, மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி முதலானவை இந்தியா முழுவதிலும் ஆங்கில வழியில் கற்பிக்கப்பட்டன.**

1990க்குப் பிறகு, இந்தியா முழுவதிலும் தனியார் கல்வி பெருகியது,

மாநில அரசுப் பள்ளிகள், மய்ய அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் எல்லாவற்றிலும் இந்தியர்கள் எல்லோருக்கும் 5ஆம் வகுப்புக்கு மேற்பட்ட கல்வியை அவரவர் தாய்மொழி வழியில் கற்பிக்காமல் ஆங்கில மொழி வழியில் கற்பிப்பது விரைந்து பரவியது. உலகத்தில், மக்களாட்சி நடைபெறும் எந்த நாட்டிலும் இந்த ஈனப்போக்கு இல்லை.

வெள்ளையன், 1922இல், உலகின் 5இல் 1 பகுதியை ஆட்சி செய்தான். படிப்படியாக, 1947க்குப் பிறகு பல்வேறு பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் விடுதலை பெற்றன. இந்தியாவும் அப்படி விடுவிக்கப்பட்டது.

அப்படி விடுவிக்கப்பட்ட இந்தியாவில், இன்று, ஏறக்குறைய 789 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றின் ஆளுகையின்கீழ் ஏறக்குறைய 37,204 கல்லூரிகள் உள்ளன. இவ்வகையில் 260 தனியார் பல்கலைக்கழகங்கள், 47

மய்ய அரசுப் பல்கலைக் கழகங்கள், 303 மாநில அரசுப் பல்கலைக்கழகங்கள், 123 மய்ய அரசால் ஏற்கப்பட்ட நிகர்நிலை பல்கலைகள் (Deemed), 74 தேசிய முதன்மை வாய்ந்த பல்கலைக் கழகங்கள் ஆகியவை உள்ளன.

இவற்றின் ஆளுகையின்கீழ் உள்ள 37,204 கல்லூரிகளிலும் 12ஆம் வகுப்புக்கு மேற்பட்ட எல்லா வகைப் படிப்புகளும் ஆங்கில மொழி வழியில் கற்பிக்கப்படுகின்றன. இது அடிமை நாடா?

விடுதலை பெற்ற நாடா?

விடுதலை பெற்ற ஒரு நாட்டில் உள்ள அரசு, எல்லோருக்கும் எல்லா நிலைக் கல்வியையும் இலவசமாகத் தரவேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்திலேயே அந்த உரிமை வழங்கப்படவில்லை; எந்தக் கட்சியும், இன்று வரையில் அந்த உரிமையை அரசிடம் கோரவில்லை; கோரிப் போராடவில்லை.

இது அன்னியில், அரசு எல்லோருக்கும் இலவச மருத்துவம், தூய்மை செய்யப்பட்ட இலவசக் குடிநீர் கட்டாயம் வழங்க வேண்டும்.

உலக மக்கள் தொகை நாள் உலகம் முழுவதிலும் 11-7-1989 முதல் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசு 11-7-2018இல் உலக மக்கள் தொகை நாள் கொண்டாடியது. இன்று உலக மக்கள் தொகை 763 கோடி. உலகில் பேசப்படும் தாய்மொழிகள் 6,000. 21ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் 5,700 மொழிகள் உலகில் பேச்சுவழக்கு இழந்துவிடும்; மீதம் உள்ள 300 மொழிகள் மட்டும் பேசப்படும்.

இந்திய மக்கள் தொகை இப்போது 135.4 கோடி. 135.4 கோடி மக்கள் 1652 தாய்மொழிகளைப் பேசுகிறார்கள்; சராசரியாக ஒரு இலட்சம் பேர்களால் பேசப்படும் மொழிகள் இதில் 1619. மீதி உள்ள 33 மொழிகள் ஒவ்வொன்றும் 10 இலட்சம் மக்களுக்கு மேல் பலகோடி மக்களால் பேசப்படுகின்றது. இதில் தமிழும் ஒன்று. தமிழ், தமிழ்நாட்டில் 7.5 கோடி மக்களால் பேசப்படுகிறது.

**ஆனால், தமிழ்வழியில் எல்லாப் படிப்பும் தரப்படவில்லை; அன்றாட நடப்பில் மாநில அரசில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லை; மத்திய அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழியாக இல்லை; உயர் நீதிமன்ற வழக்குரை மொழியாக தமிழ் இல்லை; வழிபாட்டு மொழியாக தமிழ் இல்லை.**

**இந்நிலை இப்படியே நீடித்தால், 2101ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலேயே பெருமளவு மக்களால் பேசப்படும் மொழயாகத் தமிழ் இருக்க முடியாது. மக்களின் எல்லா வகைப் பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படும் மொழியே 22ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் உயிர் வாழும். இது உறுதி.**

**எல்லா நாடுகளிலும் 21.2.2000 முதல் 'உலகத் தாய்மொழி நாள்' கொண்டாடப்படுகிறது. நாமும் - தமிழர்களும், இந்தியர்களும் 21-2-2019ஆம் நாள் 'உலகத் தாய்மொழி நாளைக்' கொண்டாடுவோம்.**

**இது ஒரு சடங்குத்தனமாகச் செய்யப்படாமல், தமிழர்களும் எல்லா மொழி இந்தியர்களும்**

**இந்திய அரசே! இந்திய அரசே! எல்லா நிலைக் கல்வியையும் அவரவர் தாய்மொழி வழியில் கொடுக்க வகை செய்!**

**தமிழக அரசே! தமிழக அரசே! தமிழ்நாட்டில் எல்லா நிலைக் கல்வியையும் தமிழ்வழியில் தர உடனே ஆவன செய்! ஆவன செய்! எனக் கோரி, அனைத்துத் தரப்புத் தமிழரும் ஒருங்கிணைந்து போராடுவோம், வாரீர்! வாரீர்!**

**1-8-2018** **- வே. ஆனைமுத்து**

## காவேரி மருத்துவமனையில் கலைஞரின் உடல்நலம் குறித்து வே.ஆனைத்து உசாவல்



29.7.18 அன்று மாலை தோழர்கள் வே.ஆனைமுத்து, ஆனை.பன்னீர்செல்வம், இரா.திருநாவுக்கரசு, தி.துரை சித்தார்த்தன், வடக்குமாங்குடி பா.மோகன், ப.ஆசுபள் ஆகியோர் திராவிட இயக்கத்தின் முதுபெருந் தலைவரும், அய்ம்பது ஆண்டுகளாக தி.மு.க.வின் தலைவராகத் திகழ்பவருமான கலைஞர் கருணாநிதி அவர்களைப் பார்க்க காவேரி மருத்துவமனைக்குச் சென்றனர். வே.ஆனைமுத்து மருத்துவமனையில் கனிமொழி, ஆ.இராசா ஆகியோரைச் சந்தித்து கலைஞரின் உடல் நலம் குறித்து உசாவினார். கலைஞர் விரைவில் முழு உடல் பெற வேண்டும் என்ற உள்ளார்ந்த விழைவை அவர்களிடம் தெரிவித்தார். அப்போது வே.ஆனைமுத்து அவர்களின் பெயர்த்தி ப.ஆசுபள் உனிருந்தார்.

# மக்களுக்கு எதிரான எட்டுவழிச் சாலையும் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியின் ஒடுக்குமுறைகளும்

- க. முகிலன்

**தூ**த்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராட்டம் நடத்திய மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் கொல்லப்பட்டவர்கள் சிந்திய குருதி காய்வதற்குள் படுகாயமடைந்தவர்களின் புண் ஆறுவதற்குள் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி, எட்டுவழிச் சாலைக்காக நிலத்தைப் பறிகொடுக்கும் உழவர்கள் மீதும், இத்திட்டத்திற்கு எதிராகக் கருத்துரைப்போர் மீதும் கொடிய அடக்குமுறைகளை ஏவி வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடியின் கனவுத் திட்டங்களில் ஒன்றான ‘‘பாரத்மாலா திட்டத்தில்’’ ரூ.5.35 இலட்சம் கோடி செலவில், நாட்டின் 500 மாவட்டத் தலைநகரங்களைச் சாலை வழியாக இணைக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ.10,000 கோடி செலவில் சென்னை-சேலம் இடையே 277.3 கி.மீ. தொலைவுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 70 மீட்டர் அகல 8 வழிச்சாலை அமைப்பதற்குத் தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 59.1 கி.மீ., திருவண்ணாமலையில் 123 கி.மீ., கிருட்டிணகிரியில் 2 கி.மீ., தருமபுரியில் 56 கி.மீ., சேலத்தில் 36.3 கி.மீ. நீளத்திற்கு இந்த எட்டுவழிச் சாலை அமைய உள்ளது. இச்சாலை அமைப்பதற்காக 2350 எக்டர் (6800 ஏக்கர்) நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இதன் விளைவாக 7,237 சிறு, சிறு நடுத்தர உழவர்கள் தங்கள் நிலத்தை இழந்து வெளியேற வேண்டியிருக்கும். 20,000 கூலி விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்படும். எண்ணற்ற கிணறுகள், பம்ப்செட்டுகள், உழவர்களின் வீடுகள், நீர்நிலைகள் அழிக்கப்படும்.

சென்னையிலிருந்து உளுந்தூர்ப்பேட்டை வழியாகவும், வேலூர் வழியாகவும் சேலம் செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலையின் இரண்டு வழித்தடங்கள் நான்குவழிச் சாலைகளாக உள்ளன. இதுதவிர இரண்டு மாநில நெடுஞ்சாலை வழித்தடங்கள் இருக்கின்றன. தொடர் வண்டியில் ஜோலார்ப்பேட்டை வழியாகவும், விருத்தாசலம் வழியாகவும் செல்ல இருப்புப் பாதை உள்ளது. ஒரு மணிநேரத்தில் சேலத்திலிருந்து சென்னையைச் சென்றடைய வானூர்திப் போக்குவரத்தும் இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் அரியானூர் தொடங்கி தருமபுரி மாவட்டத்தையொட்டியுள்ள மஞ்சுவாடி கணவாய் வரை உள்ள 37 கி.மீ. தொலைவுக்கு எட்டுவழிச் சாலை அமையுள்ள பகுதி முழுவதும் தென்னை, பாக்கு, மா ஆகியவற்றின் தோப்புகளும், நெல், கரும்பு, வாழை முதலானவை விளையும் வளமான வயல்களும் நிறைந்திருக்கின்றன. இந்த நிலங்கள் காவிரிப் படுகையின் நிலங்களைப்போல் வாழையடி வாழையாக ஆற்றுநீர்ப் பாசனம் பெற்றவை அல்ல. கடந்த ஒரு நூறு ஆண்டுக்காலத்தில் இந்த உழவர்களும் இவர்களின் அப்பாமார்களும், பாட்டன்மார்களும் கடும் உழைப்பை நல்கி, அரும்பாடுபட்டு, காட்டை-மேட்டைத் திருத்திக் கழனியாக்கினார்கள். இந்த நிலம்தான் இவர்களின் மூச்சாகவும். உயிராகவும். வாழ்வாகவும் விளங்குகிறது.



சேலம் பாரப்பட்டி பகுதியில் தாங்கள் வசிக்கும் வீடு, நிலத்தை வருவாய் துறையினர் கணக்கெடுத்துக் கொண்டிருக்க, துக்கம் தாளாமல் தன் மகளின் தோளில் சாய்ந்து கதறி அழும் பெண்

சூன் மாதத்தின் தொடக்கத்தில் இந்த உழவர்களுக்கு எந்தவொரு முன்னறிவிப்பும் செய்யாமல், உழவர்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் எதுவும் நடத்தாமல், படையெடுப்பு நடத்துவதுபோல், நூற்றுக்கணக்கான காவல்துறையினருடன். வருவாய்த் துறை அதிகாரிகள் எட்டுவழிச்சாலை அமைப்பதற்காக உழவர்களின் நிலங்களில் அளவீடு செய்து குறியீட்டுக் கற்களை நடும் வேலையில் ஈடுபட்டனர்.

கையகப்படுத்தப்படவுள்ள நிலத்தின் சொந்தக்காரர்களான ஆண்களும், பெண்களும், ஊரில் உள்ள மற்ற உழவர்களும் அரசின் நில அளவீட்டுப் பணியைக் கடுமையாக எதிர்த்தனர். கைகூப்பித் தொழுது இறைஞ்சினர்; அதிகாரிகளின் கால்களைப் பிடித்துக்கொண்டு மன்

றாடினர்; நிலத்தில் புரண்டு அழுதனர்; தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு கதறினர்; சிலர் தம்மீது மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றனர்; சிலர் தம் கிணற்றில் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ள முனைந்தனர்.



படையெடுப்பது போல் காவல்துறையினரும் வருவாய்த் துறையினரும் அதிரடியாக உழவர்களின் நிலங்களை அளவிட்டுக் கல் நட்டனர்

நிலத்துக்கும் உழவர்களுக்கும் இடையிலான உயிரான பிணைப்பைச் சற்றும் மதிக்காத வகையில், காவல் துறையினர், கையறு நிலையில் அழுது புலம்பிய உழவர்குடி ஆண்களையும், பெண்களையும் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தியும், தளைப்படுத்தியும் வருவாய்த் துறையினர் அளவீடு செய்து கல் நடும் பணியை முடிக்குமாறு செய்தனர்.

எட்டுவழிச் சாலையை அமைப்பதற்காக எடப்படி பழனிச்சாமியின் தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி, அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள பேச்சுரிமை, கருத்துரிமை, கூட்டம் நடத்தும் உரிமை முதலான சனநாயக உரிமைகளைத் தன்காலில் போட்டு நசுக்கும்படியான கொடிய ஒடுக்குமுறைகளை ஏவிவிடுகிறது. சல்லிக் கட்டுப் போராட்டம் தொடங்கி, நெடுவாசல், கதிராமங்கலம், காவிரி ஆற்றுநீர் உரிமை, தூத்துக்குடி வரையிலான போராட்டங்களில் மக்கள் ஒரு இடத்தில் கூடுவதற்கு அனுமதித்ததால்தான் அவை மாபெரும் மக்கள் திரள் போராட்டங்களாக மாறின. மேலும் இப்போராட்டங்களில் சமூகச் செயற்பாட்டாளர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், மக்கள் அதிகாரம், புரட்சிகர சனநாயக இளைஞர் முன்னணி போன்ற பல்வேறு அமைப்புகள் கலந்துகொள்வதால்தான் மக்கள் தெளிவும் ஊக்கமும் பெற்று அஞ்சாமல் வலிமையுடன் போராடுகின்றனர் என்று எடப்பாடி ஆட்சி உறுதியாக நம்புகிறது. ஆதலால், இந்நிலையை முறியடிக்க முடிவு செய்தது.

எனவேதான், தூத்துக்குடியில் அமைதியாகப் போராடிய மக்கள் மீது துப்பாக்கியால் சுட்டு 13 பேரைக் கொன்றது. துப்பாக்கிக் குண்டுகளைப் பாய்ச்சியும் தடியடி நடத்தியும் நூற்றுக்கணக்கானவர்களைப் படுகாயப்படுத்தியது எடப்பாடி ஆட்சி. 2002ஆம் ஆண்டில் குசராத்தில் கோத்ரா இரயில் பெட்டி எரிப்புக்குப்பின் அப்போது குசராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, முசுலீம்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்பதற்காக, காவல் துறையின் துணையுடன் சங்பரிவாரங்களை ஏவி ஆயிரத்துக்கு மேற்பட்ட முசுலீம்களைக் கொன்று குவித்ததுடன், அவர்களின் வீடுகளும், சொத்துகளும் சூறையாடப்பட்டு பல ஆயிரம் முசுலீம்களை அகதிகளாக்கினார். ‘‘குசராத் இந்துத்துவத்திற்கான ஆய்வுக்கூடம்’’ என்று அப்போது கூறப்பட்டது. நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமரான பின், ‘‘இந்தியாவையே இந்துத்துவத்தின் ஆய்வுக்கூடமாக’’ வேகமாக மாற்றி வருகிறார். இந்த வேலைத் திட்டத்தில் ஒன்றுதான் சங்பரிவாரங்களால் முசுலீம்களும், தலித்துகளும், தபோல்கர், கல்புர்கி, கோவிந்த் பன்சாரே, கவுரிலங்கேஷ் போன்ற பகுத்தறிவாளர்களும் கொல்லப்பட்டதாகும்.

இதுபோல், எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி, கட்சியிலும் ஆட்சியிலும் ஒரு சர்வாதிகாரிபோல் செயல்பட்ட செயலலிதாவையும் விஞ்சும் வகையில், தூத்துக்குடியை ‘‘அரச பயங்கரவாதத்திற்கான ஆய்வுக்கூடமாக’’ மாற்றினார். அதனால்தான் தூத்துக்குடியில் துப்பாக்கியால் சுடுவதற்கு ஆணையிட்டது யார் என்று கூறாமல் இருக்கிறார். துப்பாக்கிச்சூடு நடத்திய மே 22 அன்றிரவு முதல் தூத்துக்குடி நகரில் நூற்றுக்கணக்கான இளைஞர்களைக் கைது செய்து அவர்கள்மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்து, சிறையில் அடைத்துள்ளது, அ.தி.மு.க. ஆட்சி. ஸ்டெர்லைட் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் என்று அரசு கருதுகின்ற இயக்கத்தினரையும், தனிநபர்களை




எட்டுவழிச் சாலை தொடர்பாக உழவர்களைச் சந்திக்கச் சென்ற தி.வேல்முருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பாலபாரதி, தில்லிபாபு சூழலியல் செயற்பாட்டாளர் பியூஸ் மனுஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

யும் கைது செய்துள்ளது. மக்கள் அதிகாரம் அமைப் பைச் சேர்ந்த ஆறுபேர் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தளைப்படுத்தப்பட்டுள்ளனர். போராட்டக்குழுவுக்கு ஆலோசகராகச் செயல்பட்ட வழக்கறிஞர் வாஞ்சிநாதன் கைது செய்யப்பட்டார். உயர்நீதிமன்றம் பின்னர் இவரைப் பிணையில் விடுவித்துள்ளது. தூத்துக்குடி யில் துப்பாக்கிச் சூட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காகச் சென்ற தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகனை வழியிலேயே கைது செய்து சிறையில் அடைத்தது. **எடப்பாடி அரசின் நடவடிக்கைகளின் நோக்கம் அரசுக்கு எதிராக எவரும் போராட முன்வரக்கூடாது; போராடுவோருக்கு எவரும் எந்தவகையிலும் ஆதரவு அளிக்கக்கூடாது என்று எச்சரிப்பதே ஆகும்.**

நூறு நாள்கள் நடந்த ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டம் வெளியூர்களிலிருந்து வந்து ஊடுருவிய "சமூக விரோதிகளால்" தான் மாபெரும் மக்கள் திரள் போராட்டமாக வீறுகொண்டெழுந்தது என்று எடப்பாடி அரசு நம்புகிறது. எட்டுவழிச்சாலை அமைப்பதற்காக முதற்கட்டமாக நிலத்தை அளந்து கல் புதைக்கும் பணி நடக்கும்போது நிலத்தை இழக்கும் உழவர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்பது அ.தி.மு.க. ஆட்சியாளர்களுக்குத் தெரியும். எனவே நிலம் அளவீடு செய்யும் ஊரில் உள்ள உழவர்கள்கூட ஒன்றுதிரண்டு எதிர்க்க முடியாதவாறு காவல்துறை யினரைப் பெரும் எண்ணிக்கையில் குவித்து அச்சுறுத்தியது. அளவீட்டுப் பணியின்போது, நிலத்தின் உரிமையாளர் தவிர, மற்ற உழவர்களை நிலத்தின் அருகில்கூட வரவிடாமல் - அவர்களை அயலாராக - வெளியூர் ஆட்கள் போல் கருதி விரட்டியடித்தது.

செய்தியாளர்கள், தொலைக்காட்சி நிறுவன ஆள்கள் உள்ளிட்ட எவரும் நிலம் கையகப்படுத்தப்பட உள்ள ஊரில் உழவர்களைச் சந்திக்கவிடாமல் தடுத்தது. "சேலம் மக்கள் குழு"வின் சூழலியல் செயல்பாட் டாளர் பியூஸ் மனுஷ், போராளியாகத் திகழும் மாணவி வளர்மதி, சி.பி.எம். கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி, நாம் தமிழர் கட்சியின் நிறுவனர் சீமான், இயக்குநர் வ.கவுதமன் முதலானோர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ள பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்திக்க முயன்ற போது கைது செய்யப்பட்டனர். பாட்டாளி மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அன்பு மணி சேலம் மாவட்டத்தில் அவருடைய தொகுதிக்குட் பட்ட பகுதிக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தை நாடி அனுமதி பெற்ற பின்னர் அவர் செல்லும் நிலை அவருக்கு நேரிட்டது.

சேலத்தில் மட்டுமின்றி, திருவண்ணாமலை மாவட்டத்திலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலும் கருத் தரங்கம் நடத்த முயன்றவர்கள், துண்டறிக்கை வழங்கி யவர்கள், உழவர் சங்கத்தினர் என்று பல்வேறு தரப்பினரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"தி இந்து" வெளியீட்டுக் குழுமத்திலிருந்து மாதம் இருமுறை இதழாக ஆங்கிலத்தில் வெளிவரும் - 2018 ஆகத்து 3 நாளிட்ட "ஃபிரண்ட் லைன்" இதழில் "போலீஸ் ராஜ்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில், "இன்று தமிழ்நாட்டில், அரசுக்கு விரோதமாக மாறுபட்ட கருத்தைக் கூறுகின்றவர்கள் மீது சட்டத்தின் பேரால் கடும் நடவடிக்கை எடுக்கும் நிலை இருக்கிறது. சமூகச் செயற்பாட்டாளர்கள், வழக்கு ரைஞர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரி கையாளர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், பாதிக்கப்படும் உழவர்கள், அநீதி இழைக்கப்பட்ட குடிமக்கள் என எவராகயிருந்தாலும் எடப்பாடி பழனிச் சாமியின் தலைமையிலான அ.தி.மு.க. அரசின் நடவடிக்கைகளையோ, பெரும் கட்டுமானத் திட்டங் களையோ எதிர்த்துக் கேள்வி கேட்டால், அவர்மீது பல்வேறு சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்படும். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 147 பிரிவு (கலவரம் செய்தல்) தொடங்கி தேசியப் பாதுகாப்புச் சட்டம் வரை பல்வேறு பிரிவுகளின் கீழ்

வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. எந்தவொரு அமைப்புடனும் எத்தகைய தொடர்பும் இல்லாதவர் களையும், சனநாயக நாட்டின் ஒரு குடிமகன் என்ற எண்ணத்தில் அரசின் மீதான அதிருப்தியைத் தெரி விப்பவர்களையும்கூட எடப்பாடி அரசு விட்டுவைப்ப தில்லை'' என்று அ.தி.மு.க. ஆட்சி கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டியுள்ளது.

இதேபோல், இந்தியாவில் மட்டுமின்றி உலக அளவில் மதிக்கப்படும் - மும்பையிலிருந்து வெளிவரு கின்ற ''அரசியல் பொருளாதார வார ஏட்டில்'' (Economic and Political Weekly) 2018 சூலை 14 நாளிட்ட இதழின் ஆசிரியவுரையில், அரசின் கட்டுமானத் திட்டங்களை எதிர்ப்பவர்களை எப்படியெல்லாம் அச் சுறுத்தி ஒடுக்கலாம் என்பதற்கு மற்ற மாநிலங் களுக்குத் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்களின் கருத்துரிமையை, வாழ்வுரி மையை, சனநாயக உரிமையை மறுத்து, ஒடுக்கு முறைகளை ஏவி, ரூ.10,000 கோடியில் அமைக்கப் படவுள்ள சென்னை-சேலம் எட்டுவழிச் சாலையால் ஏற்படக்கூடிய பயன்கள் 1. பயண நேரம் குறையும், 2. எரிபொருள் மிச்சமாகும், 3. சாலையோர தொழிற் சாலைகள் (Industrial Corridor) உருவாகும்; அதனால் வேலை வாய்ப்புகள் பெருகும். 4. வேளாண் விளை பொருள்கள் பெரிய நகரங்களுக்கு விரைவாகக் கொண்டு செல்ல முடியும். 5. சாலையில் ஊர்திகளின் நெரிசலைக் குறைக்கும் என்று தமிழக அரசின் சார்பில் கூறப்படுகிறது. இக்காரணங்கள் எந்த அளவுக்கு உண்மை என்றும், இதனால் யாருக்கு நன்மை என்றும் பார்ப்போம்.

முதலில், சென்னை-சேலம் எட்டுவழிச் சாலை தேவை என்று மக்களோ, மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத் திலோ கேட்கவில்லை; இது ஆளும் வர்க்கத்தால் திணிக்கப்படும் திட்டம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது சென்னையிலிருந்து சேலம் செல்வதற்கு அய்ந்தாறு மணிநேரமாகிறது. சேலம் அரியானூரி லிருந்து சென்னை வண்டலூர் வரை அமைக்கப்படும் 277 கி.மீ. எட்டுவழிச் சாலையை 2¼ மணிநேரத்தில் பயணம் செய்யலாம் என்று முதலமைச்சர் பழனிச்சாமி 11.6.2018 அன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார். வண்டலூரிலிருந்து சென்னை நகருக்குள் செல்வதகு குறைந்தது 1½ மணிநேரம் தேவைப்படும். மொத்தத்தில் பயண நேரம் இரண்டு மணிநேரம் குறைவதாகவே ஒத்துக் கொள்வோம். இதனால் யாருக்கு நன்மை? மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய மகிழுந் தில் பயணம் செய்ய வாய்ப்புள்ளவர்களுக்கே இது பயனாக இருக்கும். தமிழ்நாட்டு அரசுப் போக்கு வரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளில் பாதிக்கும் மேற்பட்டவை சாலையில் இயக்குவதற்குத் தகுதியற்ற வைகளாக இருக்கின்றன. நல்ல நிலையில் இருப்ப தாகச் சொல்லப்படும் அரசுப் பேருந்துகளால் நான்கு வழிச்சாலைகளில் கூட மணிக்கு 65 கி.மீ. வேகத் தைத் தாண்ட முடிவதில்லை. எனவே பேருந்தில் பயணம் செய்யும் பொது மக்களுக்கு நேரம் குறையும் என்பது வெற்று வாய்ச்சவடாலே! எட்டுவழிச்சாலை, மகிழுந்தில் செல்லக்கூடிய வசதி படைத்தவர்களுக்கும், இரவு நேரத்தில் சொகுசுப் பேருந்துகளை இயக்கும் தனியார் பேருந்து முதலாளிகளுக்கும் நன்மையும் இலாபமும் தருவதாக இருக்கும். இதற்காக, பொது மக்களின் வரிப்பணத்தில் ரூ.10,000 கோடியில் சாலை அமைக்க வேண்டுமா? என்று எவரும் கேள்வி கேட்கக்கூடாது என்று எடப்பாடி ஆட்சி அச்சுறுத்துகிறது.



நில அளவீட்டுப் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்த பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆண்டிற்கு எரிபொருள் (டீசல், பெட்ரோல்) செலவு ரூ.700 கோடிக்கு மிச்சமாகும் என்று எட்டுவழிச் சாலையின் ஆதரவு அறிவாளிகள் கணக்குப் போட்டுச் சொல்கிறார்கள். ஊர்திகளுக்கான எரிபொருள் தேவை யில் 70 விழுக்காடு அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்காக, பெருந்தொகை அந்நியச் செலாவணியாக ஒதுக்கப்படுகிறது. இந்நிலையில், மக்கள் நலனில் உண்மையான அக்கறையுள்ள ஒரு அரசு, தனியொருவர் அல்லது அவரின் குடும்பத்தினர் பயணம் செய்வதற்கான மகிழுந்து தயாரிப்பைக் குறைத்து, பொது மக்கள் பயணம் செய்யும் பேருந்து களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும். ஆனால் இந்தியாவிலோ இது தலைகீழாக இருக்கிறது. பெரு முதலாளிகளுக்குக் கொள்ளை இலாபம் தரும் மகிழுந்து உற்பத்திக்கே அரசுகள் முதன்மை தந்து பலவகை யான சலுகைகளை அளித்து வருகின்றன. மகிழுந்து களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதால், சென்னை போன்ற பெருநகரங்களில் உச்சக்கட்ட பயண நேரங்

களில் மணிக்கு அய்ந்து கி.மீ. கூட கடக்க முடிய வில்லை. எட்டுவழிச் சாலையில் மட்டும் எடப்பாடி சொல்வது போல் மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் செல்வதால் மக்களுக்கு என்ன பயன்?

வேளாண் விளைபொருள்களை எட்டுவழிச் சாலை மூலம் விரைவாக எடுத்துச் செல்ல முடியும் என்று கூறுவதைப் போல பித்தலாட்டம் வேறொன்று மில்லை. எட்டுவழிச்சாலை நெடுகிலும் இருபுறமும் மதில்சுவர் எழுப்பப்பட உள்ளது. 277 கி.மீ. தொலை வுள்ள இச்சாலையில் நான்கு இடங்களில் மட்டுமே நகரங்களுடனான இணைப்புச் சாலை இருக்கும். இந்நிலையில் சிற்றூர்களிலிருந்து வேளாண் விளை பொருள்களை இச்சாலைக்கு எப்படிக் கொண்டுவர முடியும்? சிற்றூர்களுக்கும் அருகில் உள்ள நகரங் களுக்கும் இணைப்புப் பாலமாக இருப்பது இருசக்கர வாகனங்கள்தாம். ஆனால் எட்டுவழிச் சாலையில் இரு சக்கர வாகனங்கள், டிராக்டர்கள், மாட்டு வண்டிகள், கால்நடைகள் ஆகியவற்றுக்குத் தடைவிதிக்கப்பட் டுள்ளது என்பதிலிருந்தே இது நகர்ப்புற பணக்காரர் களுக்கான சாலை என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

எட்டுவழிச்சாலையையொட்டி தொழிற்சாலைகள் அமையும்; அதனால் வேலை வாய்ப்புப் பெருகும் என்பது பொய் என்பதை சென்னை - மதுரை நான்கு வழிச் சாலையும், சென்னை - பெங்களூர் ஆறுவழிச் சாலையும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன. வாஜ் பாய் ஆட்சிக் காலத்தில் பெரும் விளம்பரத்துடன் தங்க நாற்கர சாலைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இதனால் எந்தவொரு பகுதியிலும் தொழில் வளர்ச்சியோ, வேலை வாய்ப்போ உண்டாகவில்லை. தமிழகத்தில் தொழில் நகரங்களாகக் கருதப்படும் கோவை, மதுரை, சிவகாசி, தூத்துக்குடி, திருச்சி, சென்னை போன்ற நகரங்களில் நான்குவழிச் சாலைகள் அமைவதற்கு முன்பே தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. அரசின் முயற்சியால் பல இடங்களில் தொழிற்பேட் டைகள் அமைக்கப்பட்டமை இதற்கு உறுதுணையாக இருந்தது.

நரேந்திரமோடி 2014 நாடாளுமன்றத் தேர்தலின் போது, ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தரப்படும் என்று வாக்குறுதி அளித்தார். இதன்படி இந்த நான்கு ஆண்டுகளில் 8 கோடி வேலை வாய்ப்புகள் உருவாகியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை 50 இலட்சம் புதிய வேலை வாய்ப்பு கூட உண்டாகவில்லை. மாறாக, பணமதிப்பிழப்பு நடவடிக்கை சரக்கு - சேவை வரி அமலாக்கம் ஆகியவற்றால் கடந்த ஓராண்டில் தமிழகத்தில் மட்டும் 50,000 சிறுகுறு தொழில்கள் அழிந்துபோயின. 5 இலட்சம் பேர் வேலை இழந் துள்ளனர் என்று சட்டமன்றத்திலேயே தெரிவிக்கப் பட்டது. திருப்பூர் போன்ற நகரங்களில் பத்து பேருக்கு



உத்திரமேரூரில் நடைபெற்ற நிலம் அளவீட்டுப் பணியின்போது வாக்குவாதத்தில் ஈடுபட்ட அப்பகுதி மக்கள்

வேலை தரும் அளவில் தொழில் நடத்தியவர்கள் இன்று கூலியாள்களாகிவிட்டனர். இந்நிலையில் பல்லாயிரக்கணக்கில் வேலை தரும் வேளாண் நிலங்களை அழித்து எட்டுவழிச் சாலை அமைப்பது கொடுமையல்லவா?

எட்டுவழிச் சாலை அமையவுள்ள நிலப்பகுதியில் 6,400 மரங்கள் மட்டுமே வெட்டப்படும் என்றும், வெட்டப்படும் ஒரு மரத்திற்கு ஈடாக பத்து மரங்கள் நடப்படும் என்றும் சொல்லப்படுகிறது. 10 இலட்சம் மரங்கள் வெட்டப்படவுள்ளன என்று சூழலியல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். பல ஆண்டுகளாக ஓங்கி வளர்ந்துள்ள மரங்களையும் வளமான வயல்ளையும் அழிக்கும் இச்சாலைக்குப் பசுமை வழிச்சாலை என்று பெயரிட்டிருப்பது பெருங்கொடுமையாகும். இவ்வாறு பல இலட்சம் மரங்கள் வெட்டப்பட்டு அமைக்கப்பட்ட சென்னை-மதுரை, சென்னை-பெங்களூர் நான்கு வழிச் சாலைகள் பொட்டல் வெளியாகக் காட்சியளிக் கின்றன. ஆனாலும் அரசு தொடர்ந்து அதே பொய்யைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. எட்டுவழிச் சாலைக் காக 300 ஏக்கர் அடர்ந்த காட்டுப் பகுதி அழிக்கப்பட வுள்ளது.

உழவரின் தலையைக் கோடாரியால் இரண்டாகப் பிளப்பதுபோல், உழவரின் நிலத்தை எட்டுவழிச் சாலைப் பிளக்கும். அதனால் அழிக்கப்படும் கிணறுகள் போக எஞ்சிய கிணறுகளில் பல பாதையின் ஒரு புறமும், அவற்றால் பாசனம் பெற்ற நிலம் மற்றோர் புறமும் இருக்கும். அந்நிலையில் வேளாண்மை செய்வது எப்படி? பாதையின் இருபுறமும் நிலம் அமைந் துள்ள நிலையில் இடுபொருள்களை, விளைபொருள் களை எப்படி எடுத்துச் செல்லமுடியும்? 277 கி.மீ. தொலைவுக்கு 22 இடங்களில் மட்டுமே கீழ்வழிச்சா லைகள் அமைக்கப்படவுள்ளன. நிலத்தை மட்டுமின்றி, ஊர்களை, மக்களை எட்டுவழிச் சாலைப் பிளவு படுத்துகிறது.



எட்டுவழிச் சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவி வளர்மதி கைது செய்யப்பட்டார்

**எதற்காக 8 வழி சாலை?**

எட்டுவழிச் சாலையின் உண்மையான நோக்கம், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வேடியப்பன் - கவுத்தி மலை, சேலத்தில் உள்ள கஞ்சமலை, சேர்வராயன் மலை, உள்ளிட்ட பல மலைப் பகுதி களில் உள்ள இரும்பு, பாக்சைட், மாங்கனீசு முதலான கனிமங்களை வெட்டியெடுத்து, அவற்றைப் பெரிய பெரிய ஊர்திகளில் துறைமுகத்துக்கு விரைவாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே ஆகும். இதற்காக ஜிண்டால் நிறுவனம் எட்டுவழிச் சாலைக்கு 75 விழுக்காடு நிதி உதவி அளிப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் நான்குவழி - ஆறு வழி - எட்டு வழிச் சாலைகளின் முதன்மையான நோக்கம் முதலாளிய நிறுவனங்களின் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தொழிற்சாலைகளுக்கு விரைவில் கொண்டு வருவதும் உற்பத்தி செய்த இருசக்கர வாகனங்கள், மகிழுந்து, கணினி, தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனங்கள் போன்றவற்றைப் பாது காப்பாகவும், விரைவாகவும் நகரங்களுக்கு எடுத்துச் செல்வதும் ஆகும். எனவே இச்சாலைகள் முதலாளி களின் சுரண்டலுக்கும், கொள்ளை இலாபத்துக்கும் வழியமைப்பனவாகும். இச்சாலைகளின் சுங்கச்சாவடி களில் தனியார் நிறுவனங்களின் வரிக்கொள்ளை நடக்கிறது.

சிற்றூர்களிலும், நகரங்களிலும் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் ஒருவழிச்சாலைகள், இருவழிச் சாலை கள் கடந்த பல ஆண்டுகளாகக் குண்டும் குழியுமாகச் சீரழிந்து கிடக்கும் நிலையில், ரூ.10,000 கோடியில் எட்டுவழிச் சாலை ஏன் என்று கேட்போரை வளர்ச்சிக்கு எதிரானவர்கள், சமூக விரோதிகள், தேச விரோதிகள், நக்சலைட்டுகள் என்று முத்திரை குத்தி அ.தி.மு.க. ஆட்சி ஒடுக்குகிறது. ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைகளை மென்று விழுங்கியே வரலாற்றில் மக்கள் நாயகம் வென்று வந்திருக்கிறது. இன்றைய ஆட்சியாளர்களுக்கும் இது ஓர் எச்சரிக்கை!

## பயிர்க்காப்பீட்டுத் திட்டமும் காப்பீட்டு நிறுவனங்களின் கொள்ளையும்

2016ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி, உழவர்களின் வாழ்வை உய்விக்கப் போவதாகக் கூறி புதிய பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்தார். வழக்கம் போல் நமக்குப் புரியாத மொழியில் இத் திட்டத்திற்குப் ‘‘பிரதம மந்திரி பாசல் பீமா யோஜனா’’ என்று பெயரிடப்பட்டது.

புயல், வெள்ளம், வறட்சி, பூச்சிநோய்த் தாக்குதல் போன்றவற்றால் பெருமளவில் சேதம் ஏற்படும் போது, உழவர்களுக்கு ஏற்படும் இழப்பை ஓரளவுக்கு ஈடுகட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டதே பயிர்க்காப்பீடு திட்டம். நீண்டகாலமாக இத்திட்டம் நடப்பில் இருந்த போதிலும் உருப்படியாக இது உழவரின் துயரைத் துடைப்பதில்லை. மாறாகப் பயிர்க் காப்பீட்டு நிறுவனங் களே கொழுத்த வருவாய் ஈட்டி வருகின்றன.

நடுவண் அரசின் வேளாண்மை அமைச்சகம் இதுகுறித்து அண்மையில் ஒரு அறிக்கை வெளியிட்டது. அதன்படி, 2017-2018ஆம் ஆண்டில் காப்பீட்டு நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட பயிர்க் காப்பீடு பிரீமியம் தொகை ரூ.17,796 கோடி. இழப்பீடாக உழவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.2,767 கோடி. எனவே காப்பீட்டு நிறுவனங்களுக்கு ரூ.15,029 கோடி இலாபம் கிடைத்தது. பயிர்க்காப்பீட்டுத் திட்டத் தில் 3,31,96,239 உழவர்கள் இணைக்கப்பட்டனர்.

2016-2017ஆம் ஆண்டில் காப்பீட்டு நிறுவனங்கள் பெற்ற பிரீமியத்தொகை ரூ.15,735 கோடி. உழவர்களுக்கு இழப்பீடாக வழங்கிய தொகை ரூ.8,862 கோடி. இந்நிறுவனங்கள் பெற்ற இலாபம் ரூ.5,029 கோடி.

பயிர்க்காப்பீட்டில் மொத்தம் 17 நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 5 பொதுத்துறை நிறுவனங்கள்; 12 தனியார் காப்பீட்டு நிறுவனங்களாகும். இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் என்பது பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் இணைப்பு நிறுவனமாகச் செயல்படுகிறது.

பயிர்க்காப்பீட்டுக்கான இழப்புத் தொகை என்பது ஒரு வருவாய் கிராமத்தில் அல்லது வட்டார அளவில் ஒரு குறிப்பிட்ட பயிர் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு முழுவதும் 75 விழுக்காட்டுக்குமேல் சேதம் அடைந் திருந்தால் இழப்பீடு வழங்கப்படும் என்ற விதி உள்ளது. ஒரேயொரு உழவரின் பயிர்-வேகமாகக் காற்று வீசுவ தால் வாழை மரங்கள் முற்றிலும் முறிந்து வீழ்ந்து விடுவதுபோல்-முழுவதும் பாழ்பட்டாலும் பயிர்க் காப்பீடு வழங்கும் நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் உழவர் களுக்கு இழப்பீடு கிடைக்கக் கூடாது என்பதற்காகவே உள்ள நிர்வாகத் தடைகளை நீக்க வேண்டும்.

# மூடநம்பிக்கையால் அய்ந்து அகவைச் சிறுமிக்குத் தண்டனை வழங்கிய சாதிப் பஞ்சாயத்து

— செங்கதிர்

புல்லட் இரயில், டிஜிட்டல் இந்தியா, எட்டுவழிச் சாலை முதலான திட்டங்கள் மூலம் அறிவியலில் இந்தியாவை அமெரிக்காவுக்கு இணையாகத் தூக்கி நிறுத்தப்போவதாக பிரதமர் நரேந்திர மோடி நாள் தோறும் முழங்கிக் கொண்டிருக்கிறார். அதேசமயம் பா.ச.க.வும் அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.-ம் மற்றும் அதன் கிளை அமைப்புகளும் ‘‘பாரதக் கலாச்சாரத்தைக் கட்டிக்காப்போம்’’ என்கிற பெயரால் அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன.

பா.ச.க.வின் முன்னைய அவதாரமான ஜன சங்கம் 1951இல் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதலே இராஜஸ்தான் மாநிலத்தில் அது செல்வாக்குடன் இருந்து வருகிறது. நீண்டகாலமாக அம்மாநிலத்தில்ல ஆட்சி யிலும் இருந்து வருகிறது. அதனால் இந்த இந்துத்து வச் சக்திகள் பகுத்தறிவுச் சிந்தனை வளருவதற்குப் பெரும் தடையாக இருந்து வருகின்றன.

2018 சூலை 3 அன்று இராஜஸ்தான் மாநிலம், பண்டி மாவட்டம், அரிபுரா எனும் ஊரில் சாதிப் பஞ்சாயத்தினர் (Khap Panchayat) கூடி அய்ந்து அகவைச் சிறுமிக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தனர். மூன்று நாள் களுக்கு அச்சிறுமி அவருடைய வீட்டிற்குள் செல்லாமல், வீட்டின் பின்புறம் உள்ள தொழுவத்தில் இருக்க வேண்டும் என்பதே சாதிப் பஞ்சாயத்து விதித்த தண்டனையாகும்.

அச்சிறுமி செய்த கொடிய குற்றம் என்ன? ஒரு முட்டையை உடைத்துவிட்டாள் என்பதே அவள் மீதான குற்றச்சாட்டு. நிலத்தில் முட்டையிடும் ஒருவகையான பெரிய குருவி இராஜஸ்தானில் ஹதோதி பகுதியில் வாழும் இந்துக்களால் புனிதமானதாகக் கருதப்படுகிறது. மார்ச்சு முதல் ஆகத்து மாதத்திற்குள் மேடான நிலப் பகுதியில் இக்குருவி முட்டையிடுவதை வைத்து தென் மேற்குப் பருவமழை எப்போது வரும் என்று கணிக்கும் மூடநம்பிக்கை அவர்களிடம் இருக்கிறது. அதனால் அக்குருவியையும் அதன் முட்டைகளையும் புனிதமான தாகவும் தெய்வீகமானதாகவும் மக்கள் கருதுகின் றனர். பருவமழை என்பது உலக அளவில் நிலவும் சூழலியல் நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பதைப் பள்ளிப் பாடநூல்களில் படித்தாலும், பறவை முட்டையிடுவதே பருவ மழையைத் தீர்மானிக்கிறது என்கிற மூட நம்பிக்கையைக் கைவிடாமல் காப்பதே பாரதக் கலாச்சாரம் என்று சங்பரிவாரங்கள் சொல் கின்றன. அதனால்தான், மனித உடலில் யானையின் தலையை வைத்துத் தைத்த ‘‘பிளாஸ்டிக் அறுவை’’ வேத காலத்திலேயே இருந்தது என்று மருத்துவர் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

தண்டிக்கப்பட்ட அந்த அய்ந்து அகவைச் சிறுமி சூலை முதல் நாள் தான் பள்ளியில் சேர்ந்தாள். சூலை 2 அன்று பள்ளியில் பகல் உணவாக வழங்கப்படும் பாலை வாங்குவதற்காக வரிசையில் நின்றிருந்த போது கால் தவறி அக்குருவியின் கூட்டில் இருந்த முட்டையை உடைத்துவிட்டாள். இப்புனித முட்டையை உடைத்ததற்காகத்தான் அச்சிறுமியைச் சாதிப் பஞ்சா யத்தினர் தண்டித்தனர். இத்தண்டனையை அச்சிறுமி யின் தந்தை எதிர்த்ததால், 3 நாள் தண்டனையை 11 நாள் தண்டனையாக உயர்த்தியது சாதிப் பஞ்சாயத்து.


சுட்டெரிக்கும் வெய்யிலில் அச்சிறுமி நாள் முழு வதும் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தவாறு கதறி அழுது கொண்டேயிருந்தாள், அச்சிறுமியின் தந்தை உக்கம் சந்த் நாய்கர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்துபவர். மேல்சாதி நாட்டாண்மைக்காரர்களின் தீர்ப்பால் தம் பிஞ்சுக் குழந்தைக்கு விதிக்கப்பட்ட கொடிய தண்ட னையைக் கண்டு தாயும் தந்தையும் செய்வதறியாது அழுது புலம்பினர்.

இக்கொடுமை 11-7-2018 அன்று வெளியுலகிற்குத் தெரியவந்தது. அதன்பின் வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் தலையிட்டு அச்சிறுமியை அவளுடைய வீட்டிற்குள் அனுப்பி வைத்தனர். அப்போது கூட, சாதிப் பஞ்சாயத்தினர் அச்சிறுமிக்குத் தீட்டுக் கழிக்கும் புனிதச்சடங்கைச் செய்த பிறகே அவளுடைய வீட்டிற்குள் நுழைய அனுமதித்தனர். அய்ந்து அகவைச் சிறுமிக்குத் தண்டனை விதித்த சாதிப் பஞ்சாயத்தினர் பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிகார வர்க்கத்திலும் நீதித் துறையிலும் இருப்பவர்களில் பெரும்பாலோர் இதுபோன்ற மூடநம்பிக்கை கொண்டவர் களாக இருப்பதால் கைது செய்யப்பட்டவர்கள் தண்ட னையின்றி வெளியே வந்துவிடுவார்கள். பகுத்தறி வைப் பிரச்சாரம் செய்ததற்காக தபோல்கர், கோவிந் பன்சாரே, கல்புர்கி, கவுரி லங்கேஷ் முதலானோர் கொல்லப்பட்ட இந்த இந்துத்துவ ஆட்சியில் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

# “பிரதமரைக் கேள்வி கேட்டேன்”

**வே.ஆனைமுத்து அவர்களுடன் ‘ஆனந்த விகடன்’ இதழின் தமிழ்மகன், விஷ்ணுபுரம் சரவணன் நிகழ்த்திய நேர்காணல்**

வெண்தாடி, கறுப்புச்சட்டை, தடித்த கண்ணாடி... என உருவத்திலும் பெரியாரைப் பின்பற்றுபவராக வரவேற்கிறார் வே. ஆனைமுத்து. மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் ‘ஈ.வே. ரா. பெரியார் சிந்தனைகள்’ எனும் தலைப்பில் மூன்று தொகுதிகள் இவரது கடும் உழைப்பில் வெளிவந்தன. பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டைக் கொண்டுவர டெல்லி நாடாளுமன்றக் கதவுகளைத் தட்டிய போராளி. சமீபத்தில் தனது 94-ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். மழைபெய்து கொண்டிருந்த மாலை நேரத்தில் அவரைச் சந்தித்தோம்.




**“பெரியாரை முதன்முதலாகச் சந்தித்தது எப்போது?”**

அந்த நாள் உட்பட எல்லாமும் நினைவில் இருக்கிறது. 28.10.1944. பரமத்தி வேலூரில் நான் படித்துக் கொண்டிருந்த போது, திராவிடர் கழகத் தொடக்க விழாவுக்குப் பெரியார் வந்திருந்தார். அன்று அவர் பேசியதைக் கேட்டதிலிருந்து இன்றுவரை நான் சுயமரியாதைக்காரன். ஆனால், 1940ஆம் ஆண்டு முதலே பெரியார் கருத்துகள் அறிமுகமாகியிருந்தன. என்னுடைய வகுப்பு ஆசிரியர் கணபதி பெரியாரியல் கருத்துகளை வகுப்புகளில் சொல்வார். குடியரசு இதழ்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்வார்.

**“இயக்கத்தில் இணைந்து வேலை செய்யும் எண்ணம் எப்படி வந்தது?”**

சின்ன வயதிலிருந்தே இலக்கியம் படிப்பது ரொம்பப் பிடிக்கும். பள்ளி விழாக்களில் நன்றாகப் பேசுவேன். 47ஆம் வருஷத்திலிருந்தே சுயமரியாதைத் திருமணங்களில் பேச ஆரம்பித்துவிட்டேன். அப்போது நான் பேசி, கல்யாணம் செய்தவர்களின் பேரன், பேத்தியெல்லாம் கூட வந்து இப்போ பார்த்துட்டுப் போகிறார்கள் (சிரிக்கிறார்).

**“பெரியாருடன் பயணித்த அனுபவங்கள் பற்றி?”**

1963இல் பெரியார் திருச்சியில் குடியிருந்தார். அப்போது நான் டுட்டோரியல் காலேஜ் நடத்திக் கொண்டிருந்தேன். திருச்சியைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு அவர் எங்கு சென்றாலும் என்னையும் அழைப்பார். நானும் ஆர்வத்துடன் செல்வேன். ‘இந்து மதத்தை விட்டு வெளியேறுங்கள்’ எனப் பெரியார் சொல்வார். ஆனால், ‘மதம் மாறாமல் அது முடியாது; நாத்திகராக இருந்தாலும் இந்துதான்’ என்று சொன்னேன். ‘என்ன காரணமென்று சொல்லு?’ எனப் பெரியார் கேட்டார். நான் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள பிரிவுகளை வாசித்துக்காட்டி விளக்கினேன். அதைக் கேட்டதும், ‘அப்படியென்றால், எங்கூடவே வந்து கூட்டங்களில் அதைச் சொல்லு’ எனப் பல இடங்களில் பேச வைத்தார். ‘இந்த விஷயம் ஆனைமுத்துதான் எனக்கு விளக்கமாகச் சொன்னார்’ என்று திருச்சியில் நடந்த விருந்து ஒன்றிலும் குறிப்பிட்டுப் பேசினார்.

**“பெரியார் இறந்த போது உடனிருந்தீர்கள் அல்லவா, அந்த நாளைப் பற்றி?”**

வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் பெரியார். நானும் திருச்சி நண்பர்களுடன் சென்றிருந்தேன். பெட்டில் கால் நீட்டிப் படுத்திருந்தார். பக்கத்தில் அவரின் உதவியாளர் இமயவரம்பன், ஈ.வி.கே. சம்பத்தும் மற்றவர்களும் நின்றுகொண்டிருந்தார்கள். ராத்திரி பத்து மணி இருக்கும்... படுத்தபடியே கையை நீட்டி, ஈ.வி.கே. சம்பத் கையை இறுக்கிப் பிடித்தார்.

அதுதான் பெரியாரின் கடைசி இயக்கம். பிறகு, ஆக்சிஜன் மாட்டிவிட்டார்கள். நாங்கள் வெளியே வந்துவிட்டோம். ஆனால், 'அய்யாவின் முடிவு எப்ப வேணாலும் நடக்க லாம்' என்ற எண்ணம் வந்துவிட்டது. ஜன்னலுக்குப் பக்கத்திலேயே விடிய விடிய உட்கார்ந்திருந்தோம். காலையில் மறுபடியும் உள்ளே போனோம். எழு நாற்பதுக்கு 'ஹா' என்று முணகினார். அதுக்கப்புறம் உயிர் பிரிந்துவிட்டது.

**"பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை டெல்லி வரைக்கும் கொண்டு சேர்த்த கதையைச் சொல்லுங்களேன்?"**

அம்பேத்கர் 1950-களில் அரசியல் சட்டத்தை எழுதிய போது, இடஒதுக்கீடுக்குத் தகுதியானவர் களாகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினரையும் உள்ளடக்கியிருந்தார். 50-இல் பட்டியல் வகுப்பினருக்கும் 51-இல் எஸ்.டி.க்கும் இட ஒதுக்கீடு தந்தனர். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை. பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் யார், யார் வருவார்கள் என அம்பேத்கர் ஒரு விதி உருவாக்கியிருந்தார். அதற்கான கமிஷன் உருவாக்கப்பட்டதே தவிர, அதன் அறிக்கை வெளி யிடப்படவில்லை. பிறகு வெளியிடப்பட்டது. அதை நிறைவேறவிடாமல், தொடர்ந்து தடைகள். இந்த நிலையில்தான் 1978-இல் உத்தரப்பிரதேசத்தில் மாநாட்டை நடத்தினோம். அதன் பலனாக பீகாரில் மாநில அரசு சார்பில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இந்திரா காந்தி, மொரார்ஜி தேசாய், சரண்சிங் எனப் பலரையும் சந்தித்து, இட ஒதுக்கீட்டுக்கான நியாயத்தை வலியுறுத்தினேன். மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்த வி.பி. சிங் வரை கொண்டுசெல்ல முடிந்தது.

**"முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டீர்களாமே?"**

23.3.1979-இல் டெல்லியில் நடந்த பேரணிக்கு ஜெக்ஜீவன் ராம் வந்திருந்தார். மொரார்ஜி தேசாயை 25-ஆம் தேதி சந்தித்தேன். கறுப்புச் சட்டையோடு என்னைப் பார்த்ததும், 'தமிழ்நாட்டிலிருந்து வருகிறாயா?' எனக் கேட்டு, என் கோரிக்கைகளைப் பார்த்து, 'உன் வேண்டுகோளை டிமாண்ட் என்று ஏன் வைக்கிறாய்?' எனக் கேட்டார். அதற்கு நான் 'உங்கள் தேர்தல் அறிக் கையில், நீங்கள் அதிகாரத்துக்கு வந்தால் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தருவதாகக் கூறி உறுதி அளித்திருக்கிறீர்கள்' எனச் சொன்னேன். 'தேர்தல் அறிக்கையில் உள்ளவற்றை அனைத்தையும் எல்லோரும் நிறைவேற்றி விடுகிறார்களா?' என அவர் கேட்க, 'அப்படியெனில் மக்களை முட்டாளாக்குவதற்காகவா அந்த அறிக்கை' எனக் கேட்டேன். 'ஓ! என்னை மறைமுகமாக முட்டாள் எனச் சொல்கிறீர்களா?' என்று கேட்டார். நான் அமைதியாக இருந்தேன். இப்படிக் கேட்ட தால்தான் கமிஷன் அறிக்கை வந்தது... அமல்படுத்து கிறேன் என இறங்கி வந்தார். அப்போதைய இல்லஸ்ட் ரேட்டட் வீக்லியில், நான் டெல்லி பஸ்ஸில் பயணிக் கும் போட்டோவைப் போட்டு, 'இந்த எளிய மனிதர் தான் பிரதமரைக் கேள்வி கேட்டவர்' என முதல் பக்கத்திலேயே செய்தி போட்டிருந்தார்கள்.

**"பெரியார் பிற்படுத்தப்பட்டோருக்கான தலைவர் எனும் கருத்தைச் சிலர் திரும்பத் திரும்ப முன் வைப்பதில் எந்த அளவு நியாயம்... எந்த அளவுக்கு நியாயமில்லை?"**


1934இல் குடியரசு நாளேட்டிலேயே தெளிவாக எழுதியிருக்கிறார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு எட்டு விழுக்காடுதான் கொடுத்திருக்கிறார்கள். விகிதாசாரப்படி போதுமானதல்ல. பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பட்டியல் சாதியினருக்கும் விகிதாசாரப்படி இடஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தார். அவர் பிற் படுத்தப்பட்டவர்களுக்கான தலைவர் என்ற வாதம் தவறானது.

**"திராவிட இயக்கம் தலித்துகளுக்காகச் செய்த முக்கியமான பங்களிப்பு என்றால் எதைச் சொல்வீர்கள்?"**

தீண்டாமைக்கு எதிரான கருத்துகளைப் பரப்பியது; ஈரோடு, திருச்சி உள்ளிட்ட ஊர்களில் பட்டியல் சாதி யினரை அழைத்துக் கொண்டு கோயில் நுழைவுப் போராட்டங்களை நடத்தியது உள்ளிட்ட பலவற்றைக் கூறமுடியும். 'பறையன் பட்டம் போகாமல், சூத்திரன் பட்டம் போகாது' என்பதைத் தொடர்ந்து வலியுறுத் தினார், பெரியார். பட்டியல் சாதியினரைத் தனியாகக் குடியமர்த்துவதை ஒருபோதும் அவர் ஆதரித்தது இல்லை. தனிக் கிணறு, தனிக் கோயில் இல்லாமல் பொதுக் கோயில் என்பதில் தெளிவாக இருந்தார்.

**"பெரியாரியல் என்பது ஒரு தத்துவமே இல்லை என்று தமிழ்த் தேசியவாதிகள் சொல்வது பற்றி?"**

(சிரித்துக் கொண்டே) "பெரியாரியல் என்ற தலைப் பில் இரண்டு தொகுதிகள் நானே எழுதியிருக்கிறேனே! பெரியாரியம் என்பது சூத்திரன் பட்டத்தை ஒழிப்பது- மோடி, கருணாநிதி உள்ளிட்டோரையும் அரசியல் சட்டம் சூத்திரன் என்று தானே இன்றும் சொல்கிறது. அதற்கு எதிரான வேலைகளைச் செய்வதுதான் பெரி யாரியம். ஆணும் பெண்ணும் சமம். ஆணுக்கு உள்ள அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று சொல்வது பெரியாரியம். அது தத்துவம் இல்லையா?"



**“திராவிடக் கட்சிகளைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினர் கோயிலுக்குச் செல்வது தொடர்பாக, தொடர்ந்து கேள்வி எழுப்பப்படுகிறதே?”**

அண்ணா, ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என ஏற்றுக்கொண்டார். அதனால், அவர்களைக் குறை கூறி ஒன்றும் நடக்கப் போவதில்லை. கடவுள் எதிர்ப்பை மையப்படுத்தி தி.மு.க.வை அளவிட வேண்டாம். இந்தி எதிர்ப்பு என்னாச்சு, மாநில சுயாட்சி என்னாச்சு, வர்ணாசிரமம் ஒழிப்பு என்னாச்சு, தீண்டாமை ஒழிப்பு என்னாச்சு… அதையெல்லாம் கேளுங்கள். என்னைப் பொறுத்தவரை திராவிட இயக்கத்தின் மூலக் கொள்கைகளுக்கான செயல்பாட்டில் பெரும் பின்னடைவில் இருக்கிறோம். அவ்வளவுதான்.

**“மு.க. ஸ்டாலின் ஸ்ரீரங்கம் சென்றபோது, வரவேற்பில் பூசப்பட்ட திருநீற்றை அழித்ததற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பி.ஜே.பி.யினர் சொல்வது பற்றி?”**

இதற்குப் பெரியாரே பதில் சொல்லியிருக்கிறார். குன்றக்குடி அடிகளார் ஒருமுறை பெரியாருக்குத் திருநீறு பூசினார். அதை ஏன் ஏற்றுக்கொண்டீர்கள் எனப் பெரியாரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, ‘நான் திருநீறு பூசிக்கொண்டது அவருக்கு கௌரவம் கொடுக்கும் என நினைத்தார். அதனால் நான் தடுக்கவில்லை. வெளியே வந்தபிறகு அதை நான் அழித்ததிலிருந்தே அதை ஏற்றுக்கொள்ளவில்லை எனப் புரியவில்லையா?’ என்றார். இந்தப் பிரச்சனைக்கும் அதேதான் பதில்.

**“திராவிடம் பேசியதால்தான் தமிழ்த்தேசியம் இங்கு வளரவில்லை என்று சொல்லப்படுகிறதே?”**

அப்படியென்றால் கேரள தேசியம் வளர்ந்துவிட்டதா? ஆந்திர தேசியம் வளர்ந்துவிட்டதா? கன்னட தேசியம் வளர்ந்துவிட்டதா?

**“உங்களின் செயல்பாடுகளுக்கு குடும்பம் எந்தளவுக்கு உதவியாக இருக்கிறது?”**

சொத்து ஏதும் சேர்த்து வைக்கவில்லை. என் மனைவி, மார்க்ஸ் மனைவி ஜென்னி மாதிரி வறுமை, தனிமை, துன்பம் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டார். எங்களுக்கு நான்கு ஆண்கள், இரண்டு பெண்கள். இவர்களையும் முறையாகப் படிக்க வைக்கவில்லை. இதோ இவர் (மகன் பன்னீர்செல்வத்தைக் காட்டி) நல்லா படிப்பார். ஆனால், நான் படிக்க வைக்கவில்லை. என் பெண்ணை மட்டும் ‘நல்லா படி, படி’ எனச் சொல்லிட்டே இருந்தேன். ஆனாலும் இவங்க எல்லாம் என்னை நன்றாகப் பார்த்துக் கொள்கிறார்கள். குடும்பத் தலைவன் என்கிற முறையில் என் கடமையை நான் சரியாகச் செய்யவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

நன்றி : **ஆனந்த விகடன் 11-7-2018**

**பொது மருத்துவமனையில் தா.பாண்டியன் அவர்களை வே.ஆனைமுத்து நலம் உசாவினார்**

சென்னை அரசு இராசிவ் காந்தி பொது மருத்துவமனையில் மருத்துவம் பெற்றுவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் அவர்களை தோழர்கள் வே.ஆனைமுத்து, வடக்கு மாங்குடி பா.மோகன், தி. துரை சித்தார்த்தன், புதுவை இரா.திருநாவுக்கரசு, ஆனை. பன்னீர்செல்வம், ப.ஆசுபள் ஆகியோர் சந்தித்து உடல்நலம் குறித்து உசாவினர். தா.பாண்டியன் ஆர்வமுடன் தோழர்களிடம் உரையாடினார். நலம் பெற்று வருகிறார்.

# மாநில உரிமைகளைப் பறிக்கும் இந்திய உயர்கல்வி ஆணையச் சட்டம் 2018

- குட்டுவன்

**ஒரே** நாடு ஒரே மதம் ஒரே மொழி ஒரே வரி என்ற முழக்கங்களை முன்வைத்த பாஜக மோடி அரசு, தற்போது ஒரே கல்வி என்ற திட்டத்தை இந்திய உயர்கல்வி ஆணையச் சட்டம் 2018 என்ற பெயரில் திணிக்க முற்பட்டுள்ளது. அவசர அவசரமாக இந்த சட்ட வரைவு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதற்கான அடையாளம் இச்சட்டத்திருத்தத்தின் வடிவமைப்பிலேயே காணப்படுகிறது. முதன்முதலில் வரைவுச் சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதற்கு பிறகுதான் சட்டவடிவைப் பெற முடியும். ஆனால் இணையத்தில் ஆங்கிலத்தில் இந்த வரைவினை (Higher Education Commission of India (Repeal of University Grants Commission Act, 1956) சட்டம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இது தில்லிப் பேராதிக்க அரசின் ஆணவமா? அறியாமையா?

இச்சட்டம் பல்கலைக்கழக மானியக் குழுவைப் (University Grants Commission (UGC))_புதைக் குழிக்கு அனுப்புகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஏ.லட்சுமணசாமி முதலியார், டாக்டர் ஜாகிர் உசேன், டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் போன்ற புகழ்மிக்க கல்வியாளர்கள் அளித்த பரிந்துரையின்படித்தான் பல்கலைக்கழக மானியக்குழுச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்டது. இந்த பல்கலைக்கழக மானியக் குழு சிறந்த பரிந்துரைகளை வழங்கி இந்தியாவின் பல மாநிலங்களில் இயங்கி வரும் பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளில் உயர்கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகிறது. உயர்கல்வித் தொடர்பாகத் தொடர்ந்து பல வல்லுநர் குழுக்கள் அவ்வப்போது அமைக்கப்பட்டு உயர்கல்வி ஆய்வு மையங்களின் கருத்துரிமை, சுயாட்சி உரிமை, ஜனநாயக உரிமை, ஆசிரியர்-மாணவர் உரிமை பாதுகாக்கப்பட்டு வருகிறது. பல தலைசிறந்த கல்வியாளர்கள் இக்குழுவின் தலைவர்களாகவும் மற்ற கல்வி வல்லுநர்கள் உறுப்பினர்களாகவும் இருந்து உயர்கல்விக்கு, பல அரிய ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் பாடத்திட்டங்களை அளிக்கும் கல்வி மேம்பாட்டு அறிக்கைகளையும் (Curriculum Development Reports) இம்மானியக்குழு பல வல்லுநர் குழுக்களின் வழியாக வழங்கியுள்ளது. மாணவர்களின் உயர் ஆய்வு வளர்ச்சிக்காக மானியக்குழு உதவித் தொகையும் (UGC Junior Research Fellow (UGC-JRF)) வழங்கி வருகிறது.

இக்கட்டுரையாசிரியர் 1971இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவராக இருந்த போது பல் கலைக்கழக மானியக்குழுவின் உதவித் தொகையை நான்காண்டுகள் பெற்றுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த கல்வி நெறிக் காவலர் நெ.து.சுந்தரவடிவேலு இந்த மானியத் தொகை உதவிகளை ஏழை எளிய தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பெருமளவில் அளித்து உதவி செய்தார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. உதவித் தொகை அளிக்கும் அதிகாரத்தையும் தில்லி ஏகாதிபத்திய அரசு பல்கலைக் கழகங்களிடமிருந்தும் துணைவேந்தர்களிடமிருந்தும் பறித்துவிட்டது.

தற்போது மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் இடம் பெறுவதற்கு எப்படி நீட் நுழைவுத் தேர்வு உருவாக்கப்பட்டதோ அதே போன்று, 20 ஆண்டுகளுக்கு முன்பு நெட் (NET) என்ற தேர்வு உருவாக்கப்பட்டது. இந்த நெட் தேர்வின் மோசமான எதிர்விளைவுகளை இக்கட்டுரையாசிரியர் நெட் தேர்வுக்குழுவின் உறுப்பினராகச் சில ஆண்டுகள் செயல்பட்டதால் தெரிந்து கொள்ள முடிந்தது.

பொதுவாகத் தேர்வு எழுதும் மாணவர்கள் தங்களின் மதிப்பெண்களின் சாதனைப்படி தேர்ந்தெடுக்கப்படுவோம் என்று நம்பித்தான் இத்தேர்வுக்கு கடினமாக உழைத்து எழுதுவார்கள். ஆனால் ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் 10 அல்லது 14 விழுக்காடு என்ற உச்ச வரம்பை ஒன்றிய அரசின் இணைச் செயலர் முடிவு செய்வார். குறிப்பிட்ட பாடப்பிரிவுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்கூட இந்த உச்சவரம்பால் நெட்தேர்வில் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். தகுதி திறமை என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்த வரும் மாணவர்கள் பெருமளவில் இம்முறையால் புறக்கணிக்கப்படுகிறார்கள். இவ்வாறு படிப்படியாகப் பல்கலைக்கழக மானியக் குழுவின் தன்னாட்சி உரிமையையும், அதன் வழியாகப், பல்கலைக்கழகங்களின் தன்னாட்சி உரிமையையும் ஒன்றிய அரசு காலப்போக்கில் எடுத்துக்கொண்டது. இப்படிப்பட்ட நிலையை உரிய முறையில் ஆய்ந்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கும் சூழலும் இதுவரை ஏற்படவில்லை. சமூக நீதித் தகுதித் தேர்வு என்ற பெயரில் குலைக்கப்படுகிறது என்பதற்கு இந்த நெட் தேர்வும் ஒரு சான்றாகும். பல்கலைக்கழக மானியக்குழுவால் உயர்கல்வித் துறை பெற்ற சில முதன்மையான ஆக்கப்பூர்வமான திட்டங்களைக் காணலாம்.

1. கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு திறன் மேம்பாட்டுப் புத்தாக்கப் பயிற்சி (UGC Sponsored

Refresher Courses for College Teachers) ஆண்டு முழுவதும் கலை அறிவியல் உட்பட பாடப்பிரிவுகளில் பல்கலைக்கழகங்களால் மானியக் குழுவின் முழு அளவிலான நிதியுதவியோடு நடத்தப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் இக்கட்டுரையாசிரியர் பொருளியல் துறைத் தலைவராக இருந்த போது 4 புத்தாக்கப் பயிற்சி வகுப்புகளை (21 நாள்கள்) நடத்தியுள்ளார். இப்பயிற்சியைப் பெற இந்திய முழுவதிலிருந்தும் கல்லூரிகளில் இருந்து ஆசிரியர்கள் வருவார்கள். அதே போன்று 40க்கு மேற்பட்ட சிறந்த கல்வியாளர்களும் பல்துறை வல்லுநர்களும் பயிற்சியளிப்பார்கள். மேலும் பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டவர்களுக்கு அறிமுகத் திறன் பயிற்சி (Orientation Programme) மானியக்குழு உதவியுடன் அளிக்கப்படுகிறது.

2. கல்லூரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த பிறகு, பல ஆண்டுகள் கழித்துத் தங்கள் ஆய்வுத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக முனைவர் (Ph.D) போன்ற ஆய்வுப் பட்டங்களைப் பெறுவதற்கு மூன்றாண்டுகள் கல்லூரியில் இருந்து விடுவிக்கப்பட்டு முழு நேர ஆய்வாளர்களாகப் பல்கலைக் கழகங்களில் இணைவார்கள் (Faculty Improvement Programme (FIP)). இவர்களது மூன்றாண்டு ஊதியத்தை மானிக்குழு முழுமையாக ஆசிரியர்களை அனுப்பும் கல்லூரிகளுக்கு அளித்து, அங்கு தற்காலிக ஆசிரியர்களை நியமனம் செய்ய இம்முறை உதவியது. இரண்டு வழிகளில் ஆசிரியர்கள் பயனடையவதற்கு இத்திட்டம் உதவியது.

3. வாஜ்பாய் பிரதமராக இருந்த போது, முரளி மனோகர் ஜோஷி ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பொறுப்பில் இருந்தார். அப்போதிலிருந்து சமசுகிருதத்தைத் திணிப்பதும் சோதிடங்களை பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளில் பாடமாகக் கற்பிப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. பல பல்கலைக்கழகங்கள் எதிர்ப்பு தெரிவித்த பிறகும், பாஜக ஆட்சி செய்த மாநிலங்களில் மேற்கூறிய அறிவியலுக்குப் புறம்பான பாடத்திட்டம் பின்பற்றப்பட்டது. காவிமயக்கொள்கையைப் பல்கலைக் கழக மானியக்குழுவில் திணிப்பதற்காக ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்களின் ஆதரவாளர்களை தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்படும் போக்கு தொடங்கப்பட்டு தற்போது பல பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களாக சங் பரிவாரங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். சான்றாக தமிழ்நாட்டின் டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தகுதிவாய்ந்த பல தமிழர்கள் இருந்தும், தமிழரல்லாத ஆர்.எஸ்.எஸ். தொடர்புடைய ஒருவரை ஆளுநர் நியமனம் செய்தார். மோடி அரசு அமைந்த காலத்தில் இருந்து பல்கலைக்கழக மானியக் குழுவின் தன்னாட்சி உரிமையைப் பறிக்கும் செயல்கள் முழுமையாக நடைபெற்று வருகின்றன.

பல்கலைக்கழக மானியக் குழு ஆசிரியர் ஊதிய உயர்வு தொடர்பாக பத்தாண்டுகளுக்கு ஒரு முறை வல்லுநர்குழு அறிக்கைகளைப் பெற்று, கல்லூரி பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வை அளித்ததனால் இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் கல்லூரிப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சிறப்பான, கல்வியை வழங்கவும் பாதுகாப்பான வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்ளவும் முடிந்தது. பல்கலைக் கழக மானியக்குழு பரிந்துரையின்படி அளிக்கப்பட்டு வரும் ஊதிய உயர்வு இனிமேல் தொடராது. மேலும். இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே பல்கலைக் கழகங்களில் புதிய ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்றும் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

மோடி அரசு அமைந்த பிறகு கடந்த நான்காண்டுகளில் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு 2015-16 கல்வி யாண்டில் ஒன்றிய அரசு அளித்த ரூ.9315 கோடியில் இருந்து, 2016-17 நிதியாண்டில் ரூ.4887 கோடியாகக் குறைக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியக்குழு அமைக்கப்பட்டு 62 ஆண்டுகளில் ஒரே ஆண்டில் 55 விழுக்காடு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தது பெரும் அவலமாகும். உயர்கல்விக்குச் செய்யப்பட்ட அநீதியாகும். இந்த நிதிக்குறைப்பால் மேற்குறிப்பிட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள் எல்லாம் முழுமையாக முடக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியக்குழுவை மாற்றியமைக்கும் புதிய வரைவுச் சட்டம் மிக மோசமான விளைவுகளை உருவாக்கும். பல்வேறு மொழிகள், பண்பாட்டுக் கூறுகள், மதங்கள்ப் பல இனங்களின் ஒட்டுமொத்த பெரும் கூட்டமைப்பாக உள்ள இந்தியாவில், ஒரே விதமான கல்வி முறையைத் திணிப்பது பெரும் தீய விளைவுகளை ஏற்படுத்தும். இந்த வரைவுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் பிரிவு:

1. Less Government and More Governance: இந்தச் சட்டத்தின் முதல் இலக்கே முரண்பாடாக உள்ளது. ஏற்கெனவே வணிக மயமாக்கப்பட்ட கல்வித்துறையில் அரசினுடைய பங்கு குறையுமானால், மாணவர்களிடமிருந்து சுயநிதிக் கல்லூரிகளும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களும் அதிக அளவில் கட்டணங்களை உயர்த்தி சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி உரிமைகளைப் பறித்துவிடும்.




பல்கலைக்கழங்களின் உயர்கல்வி மீது தமிழ்நாட்டு அரசுக்கு உள்ள உரிமைகளைப் பறிக்கும் இந்திய உயர்கல்வி ஆணையம்

2. Separation of Grant Function: மாநிலங்களில் இயங்கி வரும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மானியம் அளிப்பதைக் குறைக்கும் முயற்சியே இதுவாகும். அதிகார வர்க்கம் தில்லியில் நிலவுகிற அரசியல் தட்பவெப்ப நிலைக்கு ஏற்பத் தங்கள் கட்சிக்கு ஆதரவளிக்கும் மாநில அரசுகளுக்கும் தங்கள் கட்சி ஆளும் மாநில அரசுகளுக்கும் அதிக நிதியை ஒதுக்கி, கல்வியில் ஒரு சமனற்ற நிலையை உருவாக்கிவிடும். சான்றாக தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை நிதிப் பற்றாக்குறையால் பெரும் சரிவைச் சந்திக்கும் சூழல் உருவாகும். தற்போது தமிழ்நாட்டில் 69 விழுக் காட்டு இடஒதுக்கீட்டுக் கொள்கையை பின்பற்றுவதால் 128 அரசுக் கலை அறிவியல் கல்லூரிகளிலும் 162 அரசின் உதவிப் பெறுகிற கல்லூரிகளிலும் பிற்படுத் தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் உயர் கல்வியைப் பெற்று வருகிறார்கள். மேலும் 1200க்கும் மேற்பட்ட தனியார் சுயநிதிக் கலை-அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. உயர் ஆய்வு மேற்கொள்ளப்படும் 22 பல்கலைக்கழகங்களும் 29 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் இயங்கி வருகின்றன. அதிக எண்ணிக்கையில் உயர் கல்வியில் மாணவர்கள் பட்டங்கள் பெற்று வருவதால், தமிழ்நாடு இந்திய மாநிலங்களிலேயே உயர்கல்வியில் முதலிடத்தில் உள்ளது.

3. End of Inspection Raj: கண்காணிக்கும் முறை முடிவுக்கு வருகிறது என்ற தலைப்பின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைக்கும் தலைப்பிற்கும் எதிர்மறையான தொடர்பே உள்ளது. கல்வித் தகுதி, வெளிப்படையான நிர்வாகம் உயர் கல்வியில் தொடர வேண்டுமானால் ஒன்றிய, மாநில அரசுகளின் கட்டுப்பாடும் ஒழுங்குப் படுத்தும் சட்ட உரிமைகளும் இருக்க வேண்டும். இதை முடிவுக்குக் கொண்டு வந்தால் உயர் கல்வியில் ஊழலும் வணிகமயமும் அதிகரிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

4. Focus on Academic Quality : கல்வித் தரம் உயர்த்தும் நோக்கம் உயர் கல்வி ஆணையம் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் கற்றல் முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, கல்வித் தொழில்நுட்பத்தை அதிகரிப்பது என்பன முக்கிய நோக்கங்களாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளைத் தற்போதுள்ள பல்கலைக்கழக மானியக் குழு நல்ல முறையில் கல்வியாளர்களின் துணையோடு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. துணைவேந்தர்கள் பேராசிரியர்கள் கல்வி வல்லுநர்கள் ஆகியோர் கொண்ட குழுக்களை ஐந்தாண்டுகளுக்கு, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அனுப்பி கல்வித் தரத்தையும் கல்விச் சூழலையும் கல்வி நடவடிக்கைகளையும் கல்விக் கட்டமைப்பையும் ஆய்ந்து சிறந்த பரிந்துரைகளைப் பல்கலைக்கழக மானியக் குழு ஒன்றிய அரசிற்கு அனுப்பி நிதியுதவியும் அளித்து வருகிறது. இது அரசுத் துறையின் கீழ் இயங்குமானால் கல்வியாளர்கள் வல்லுநர்களின் பங்கு நீக்கப்படும் சூழல் ஏற்படலாம். ஒன்றிய அரசில் அமையும் கட்சியின் கொள்கைக்கு ஏற்பக் கல்விக் கொள்கையில் தலையீடு இருக்க வாய்ப்பு பெருகுகிறது. இதன் காரணமாக கல்வியின் சுதந்தரமும் தன்னாட்சி உரிமையும் சிதைக்கப்படும் சூழல் ஏற்படுகிறது.

5. Powers to Enforce : நடைமுறைப்படுத்தும் அதிகாரம்: - தரத்தில் குறைந்த நிறுவனங்களையும் போலியான கல்வி நிறுவனங்களையும் மூடுவதற்குரிய அதிகாரம் இப்பிரிவில் சுட்டப்படுகிறது. ஏற்கெனவே உள்ள பல்கலைக்கழக மானியக் குழுவில் பல தரமற்ற கல்வி நிறுவனங்களையும் போலி நிறுவனங்களையும் ஆய்வு செய்து மூடுவதற்கு உரிய நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது பல்கலைக் கழக மானியக் குழு அறிவிக்கைகளை நாளேடு களிலும் இணையத்திலும் வெளியிடுகிறது. இந்த உயர் கல்வி நிறுவனங்களை நெறிப்படுத்தும் அதிகாரம் கல்வியாளர்களிடமும் கல்வி வல்லுநர் களிடம் இருந்தால்தான் உயர் கல்வித் துறையில் ஆய்வுகள் பெருகும். ஆனால் அரசின் கட்டுப்பாட் டிற்குள் அந்த அதிகாரம் வந்துவிட்டால் ஏற்கெனவே ஊழலில் ஊறித் திளைக்கும் அரசியல்வாதிகளின் குறுக்கீடுகள் அதிகரித்து உயர் கல்வி பாழாய்ப் போய்விடும்.

உயர்கல்விக்கான நிதியைக் குறைத்துக் கொண்டு மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் இந்தச் சட்ட வரைவு, இந்திய ஒருமைப்பாட்டிற்கே உலை வைத்து விடும் என்று பல கல்வி வல்லுநர்கள் கருத்துத் தெரி வித்துள்ளனர். திருவனந்தபுரத்தில் பல கல்லூரி பல்கலைக்கழக ஆசிரியர்கள் பெருமளவில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தி இந்த வரைவுச் சட்டத்திற்கு கண்டனத் தைத் தெரிவித்துள்ளனர். ஒன்றிய அரசு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் ஒரு விழுக்காட்டிற்கு குறை வாகதான் கல்விக்காகச் செலவிடுகிறது. 2013-14ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 0.63 விழுக்காடே செலவிட்டது. மோடி அரசு அமைந்த பிறகு மெல்ல மெல்ல ஒன்றிய அரசின் நிதிப்பங்களிப்பு குறைந்து கொண்டே வருகிறது. தற்போது 2017-18ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் 0.47 விழுக்காடே கல்விக்காக செலவிடப்படு கிறது. இந்த குறைவான தொகையில் 90 விழுக்காடு ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குகிற ஒன்றிய அரசின் பல்கலைக்கழங்களே நிதியைப் பெற்றுக் கொள்கின்றன. 10 விழுக்காடு நிதியைக்கூட 29 மாநிலங்களில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் பெறுவதில்லை. உயர்கல்வி வளர்ச்சிக்காக வருமான வரி நிறுவன வரி, ஆகிய வரிகளின் மீது கூடுதல் 2 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. இதன் தொகை 2017-18இல் ஒரு லட்சம் கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்த நிதியையும் மாநிலங்களில் இயங்கி வரும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்காமல் ஒன்றிய அரசே எடுத்துக்கொண்டு மாநிலங்களின் கல்வி உரிமையை பறிப்பது நாட்டுவிரோதச் செயலே என்றே குறிப்பிடலாம். இத்தகையச் சூழலில் இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்கள், ஒன்றிய அரசின் வேண்டு கோளுக்கிணங்க 29 மாநிலங்களில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் சென்னைப் பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்கள் சிறப்பு நிதி ஒதுக்கீட்டிற்காகத் தங்களின் சிறந்த கல்வி சாதனைகளைக்காட்டி 1000 கோடி நிதி அளிக்குமாறு ஒன்றிய அரசின் கல்வித் துறைக்கு ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒரு கோடி ரூபாய் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி மனுக்களை அளித்தன. ஆனால் கட்டடம் ஆசிரியர் நியமனம், கட்ட மைப்பு வசதிகள் போன்ற எவ்வித அடிப்படை வசதி களையும் அளிக்காத உருவாக்கப்படாத அம்பானியின் ஜியோ உயர்கல்வி அமைப்பிற்கு 1000 கோடி ஒன்றிய அரசின் நிதியைப் பெறும் தகுதி பெற்றுள்ளது என்று கூறுவது மோடி அரசின் நான்காண்டு சாதனையா? அல்லது மோசடியா?

எனவே இந்த உயர்கல்வி வரைவுச் சட்டத்தை திரும்பப் பெறுவதுதான் இந்தியாவின் ஒற்றுமைக்கும் பன்முகத்தன்மைக்கும் வலிமையைச் சேர்க்கும். ஒன்றிய அரசு இந்தியாவின் வலிமையை உறுதி செய்யப்போகிறதா? அல்லது உருக்குலைக்கப் போகிறதா? என்பது எல்லாக் கல்வியாளர்களின் முன்னும் உள்ள வினாவாக தற்போது உள்ளது.

## எட்டுவழிச் சாலைக்கு எதிராகப் போராடிய காஞ்சி மாவட்டத் தோழர்கள் கைது

எட்டு வழிச் சாலை என்ற பெயரில், பயிர்த் தொழில்- நீர்நிலைகளை அழித்து சென்னை முதல் சேலம் வரை சாலை அமைக்க இந்தியஅரசும் தமிழக அரசும் தீவிரமாகச் செயல்படுகின்றன. விவசாயிகள் மற்றும் மக்கள் இயக்கங்கள் இச்சாலை அமைப்பதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். போராடும் மக்களை மிகக் கடுமையாகத் தமிழக அரசு ஒடுக்குகிறது.

காஞ்சிபுரத்தில் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு பின் சார்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்து துண்டறிக்கை கொடுக்க வேனில் சென்ற தோழர்களை வழியிலேயே மடக்கி மாகரல் வெங்கச்சேரியில் வேனுடன் 19 தோழர்களைக் கைது செய்து வேலூர் மத்தியச் சிறையில் அடைக்கப் பட்டனர்.

தோழர் தீனன் தலைமையில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பாசறை அ செல்வராஜ், காஞ்சி அமுதன், மகேஷ், ஜெஸ்ஸி, ரேச்சல், தாண்டமூர்த்தி, இரவிபாரதி பழனி, முரு கானந்தம், ஜெயராமன் உலக ஒளி, வெற்றித்தமிழன், பரமசிவம், அல்லி, சாந்தி, ஆனந்தி, சுப்பிரமணியன், வேன் ஓட்டுநர் எழிலரசன்,அரவிந்தன் ஆகியோர் மீது கொலை முயற்சி உள்ளிட்ட கடும் சட்டப்பிரிவுகளைச் சுமத்தி கைது செய்து வேலூர் சிறையில் அடைக் கப்பட்டனர்.

வேலூர் சிறையில், மா.பெ.பொ.க. தோழர்கள் சா. குப்பன், காளியப்பன், தசரதன் ஆகியோர் மேற்கண்ட தோழர்களை சிறையில் சென்று சந்தித்தனர், காஞ்சியில் மா.பெ.பொ.க. தோழர்கள், கைதான தோழர்களின் இல்லங்களுக்குச் சென்று ஆறுதல் கூறினர்.

# 'மனிதன் என்பவன் சிந்திப்பவன் என்ற குரல்' தூங்கவிடாமல் செய்தது!

**- மனுஷ்யபுத்திரன்**

'கண்டதையும் கற்றவன் பண்டிதனாவான்...' என்பது வாசிப்பு குறித்து இதுவரை சொல்லப்பட்டதிலேயே மிகச்சிறந்த சொல். எனது வாசிப்பும் மிக இளம் வயதிலிருந்தே அப்படித் தான். இருந்தது. காமிக்ஸ், செய்தித்தாள், குடும்பக் கதைகள், வரலாற்றுப் புதினங்கள், துப்பறியும் கதைகள், மாயாஜாலப் பேய்க் கதைகள், கவிதைகள், சமய நூல்கள், பொது அறிவு - அறிவியல் புத்தகங்கள், பாலியல் கதைகள் என எனது எட்டு வயதில் தொடங்கி 16 வயது வரைக்கும் கையில் கிடைத்ததை யெல்லாம் வாசித்துக் கொண்டிருந்தேன். புரிந்தும், புரியா மலும் அறிந்தும் அறியாமலும் பல்வேறு விதமான குழப்ப மான, துண்டு துண்டான எண்ணங்கள் என்னை ஆட் கொண்டிருந்தன. யார் எதைத் திறமையாகச் சொன்னாலும் அது முழு உண்மை போன்று தோன்றும் கருத்து மயக்கம் மிகுந்திருந்த காலம் அது. அப்போதுதான் என் சிந்தனை களை ஒழுங்குபடுத்தி அவற்றிற்கு ஒரு அடித்தளத்தையும், குவி மையத்தையும் அளிக்கக்கூடிய ஒரு ஆசிரியர் வந்தார். அவர்தான் தந்தை பெரியார்.

**வே.ஆனைமுத்து அவர்கள் தந்தை பெரியாரின் எழுத் தையும் பேச்சையும் பொருள்வாரியாக கால வரிசைப்படுத்தித் தொகுத்த 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' என்ற தலைப்பி லான தொகுதிகளை நான் முதன்முதலாகக் கையிலெடுத்துப் பார்த்தபோது எனக்கு வயது 17. எங்கள் ஊர் அரசுப் பொது நூலகத்தில் இருந்து நண்பர் ஒருவர் அந்தத் தொகை நூல்களில் ஒரு தொகுதியைக் கொண்டுவந்து படிக்கக் கொடுத்தார். பெரியார் என்ற பெயரை மட்டுமே கேள்விப் பட்டிருந்த நான், அந்தத் தொகுதியின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கிய சில மணிநேரத்தில் பெரும் பதட்டமும், குழப் பமும் என்னை ஆட்கொண்டது. பெரியார் அதுவரைக்கும் எனக்கு விடை தெரியாத பல கேள்விகளுக்கு விடையளித்துக் கொண்டிருந்தார்.** கடவுள்களைப் பற்றி, மனிதர்களைப் பற்றி, சாதி-மத அமைப்புகளைப் பற்றி, மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் சக்திகளைப் பற்றி, மூடத்தனங்களைப் பற்றி, அறிவியலைப் பற்றி, சுயமரியாதையைப் பற்றி, மரபுகளைப் பற்றி, பெண் விடுதலையைப் பற்றி, சிந்திப்பதின் பயன் பற்றி, அச்சமின்மையைப் பற்றி, எல்லாவற்றையும் பற்றி, அவர் பேசிக்கொண்டே இருந்தார். அந்தத் தொகுதி யை திரும்பத் திரும்பப் படித்தேன். அதற்குப் பிறகு அந்தத் தொகை நூல்களில் மற்ற தொகைகளையும் ஒரு ஆறு மாதக் காலத்தில் தொடர்ச்சியாக வாசித்து முடித்தேன். பெரியார் எனக்குள் ஒரு சிந்தனா முறையை உருவாக்கினார். அவர் என்னுடைய நம்பிக்கையின் வேர்களை அசைத்தார். மனிதனுக்கு நேரும் அவமானங்கள் இழிவுகள் எல்லாமே மனிதனால் உண்டாக்கப்பட்டவையே. மனிதர்கள் உரு வாக்கிய அமைப்பை மாற்றியமைப்பதன் மூலமாக மனித குலத்தை விடுதலை அடையச் செய்ய முடியும் என்றஒரு மகத்தான செய்தியை என்னுடைய இளம் வயதில் பெரியார் எனக்கு ஊட்டினார். அந்தப் பொறி பெரும் நெருப்பாக என் இளம் வயதில் பற்றி எரிந்தது.



மனிதன் என்பவன் சிந்திப்பவன் என்ற பெரி யாரின் குரல் தூங்க விடாமல் செய்தது. அந்தத் தொகுதியைத் திரும்பத் திரும்பப் படித்தேன். அதி லிருந்து குறிப்புகளை என்னுடைய நோட்டுப் புத்தகத்தில் எழுதினேன். சில சமயம் பெரியாருடன் இரகசியமாகச் சண்டை யிட்டேன். 'நான் சொல்வ தற்காக எதையும் ஏற்றுக் கொள்ளாதே...' என்ற பெரியாரின் குரல் தான் அப்படி சண்டையிடுவதற்கான உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று பெரியார் சொன்னபோது எனக்குள் கடும் கோபம் ஏற்பட்டது. ஆனால் பெரியார் எதையும் போகிற போக்கில் சொல்பவர் அல்ல. அவர் எதைச் சொன்னாலும் அதற்குப் பின்னால் ஒரு தர்க்கம் இருக்கும். 'நீ உன்னுடைய மொழியின் மூலமாகப் புராணங்களையும், பக்தியையும் வளர்த்தாயே தவிர, வேறு என்ன செய்தாய்...' என்பதுதான் பெரியாருடைய கேள்வி யின் அர்த்தம். 'ஏன் நீ உன்னுடைய மொழியில் அறிவிய லையும் தத்துவத்தையும் வளர்க்க வில்லை?' என்பதுதான் பெரியாருடைய கேள்வி. மொழி சார்ந்த நம்முடைய உள் ளார்ந்த விருப்புகளைத் தாண்டி பெரியாரின் கருத்தை யோசித்த போது, அவர் தமிழை அடுத்தக் கட்டத்திற்கு கொண்டு செல்வதற்குத்தான் இந்த முரட்டுக் கேள்வியைக் கேட்டார் என்பது தெளிவாகிறது.

இயற்கை மருத்துவம், பாரம்பரியம் சார்ந்த விஷயங்களை உயர்த்திப் பிடிக்கிற ஒரு போக்குக்கு மாறாக பெரியார் ஒரு கேள்வியை ஒரு இடத்தில் எழுப்புகிறார். 'சரி, உன்னுடைய இயற்கை உணவும், பாரம்பரிய மருத்துவமும்தான் உன்னத மானது என்றால் ஆங்கில வைத்தியமுறை வருவதற்கு முன்பு ஏன் மனிதனின் சராசரி ஆயுள் வெறும் 35 ஆக இருந்தது. ஆங்கில மருத்துவமுறை வந்த பிறகு அது எப்படி 60, 70 ஆகிறது?' என்ற கேள்வியை எழுப்புகிறார்.

இதெல்லாம் சில உதாரணங்கள். பெரியார் ஒரு நவீன தத்துவ ஆசான். ஒரு நவீன சமூகப் புரட்சியாளர். ஒரு நவீன அரசியல்வாதி. 20ஆம் நூற்றாண்டின் அனைத்து முற்போக்குக் கோட்பாடுகளினுடைய மையப் புள்ளியாக பெரியார் இருந்தார். அவரே என் இளமைக் கால முதல் ஆசிரியராக இருந்தார் என்பதை என் வாழ்நாளெல்லாம் நன்றாக நினைப்பேன். அந்த வகையில் என்னை வார்த்த புத்தகம் பெரியார் சிந்தனைகளுடைய தொகுதிகள் எனலாம்.

பெரியார் புனிதங்கள் அனைத்தையும் உடைத்த நம் காலத்தின் மகத்தான புனிதர்.

நன்றி : 'அந்திமழை' சூலை 2018

# ஜசியா வரி

- இராமியா

ஜசியா வரியைப் பற்றி நமது பார்ப்பன ஆதிக்கக் கல்வி முறை தவறான கருத்தை மக்களிடையே பரப்பி வைத்து இருக்கிறது. அதன் சுருக்கம் இது தான். இந்துக்களைக் கொடுமைப்படுத்துவதற்கு என்றே பாபர் இந்துக்கள் மீது ஜசியா வரி எனும் வரியை விதித்தார். இவ்வரி இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தும். இஸ்லாமியர்கள் இவ்வரியைச் செலுத்தத் தேவை இல்லை. அவருக்குப் பின் வந்த அக்பர் இக்கொடுமை யைக் களைய ஜசியா வரியை நீக்கினார். ஆனால் அவுரங்கசீப் தன் மூன்று சகோதரர்களைக் கொன்று, தன் தந்தையைச் சிறைப் படுத்தி ஆட்சியில் அமர்ந்த பின், இவ்வரியை மீண்டும் விதித்தார். ஏனெனில் அவரங்கசீப் சகிப்புத்தன்மை இல்லாத ஒரு இஸ்லாமிய மதவாதி. இது போன்ற கருத்தை மதவாதிகள் மட்டும் அல்லாமல் அரசின் கல்வித் துறையே பரப்புவது வேதனைக்கு உரியது. ஆனால் உண்மை என்ன?

பாபர் முதன் முதலாக முகலாய அரசை நிறுவியபோது, ஆட்சியை நடத்துவதற்காக மக்களிடம் இருந்து வரி வசூல் செய்யும் திட்டத்தை வகுத்தார். இஸ்லாமிய மதச் சட்டத்தின் படியே வரிகளை விதிக்க அமைச்சர்கள் ஆலோசனை கூறிய போது பாபர் அதை மறுத்தார். இஸ்லாமிய மக்களிடம் இஸ்லாமியச் சட்டப்படி வரி வசூலிக்கலாம் என்றும், இந்துக்கள் மீது இஸ்லாமியச் சட்டங்களைத் திணிப்பது முறையல்ல என்றும், வேறு வழிகளைக் காணும் படியும் அவர் கூறினார். இதன்படி தோன்றியது தான் ஜசியா வரி. அதாவது ஜசியா வரி என்பது இந்துக்களைக் கொடுமைப்படுத்த அல்ல; மாறாக இந்துக்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கும் வகையில் தான் ஜசியா வரி விதிக்கப்பட்டது.

இவ்வரி அவருடைய மகன் ஹுமாயூன் காலத்திலும் தொடர்ந்து அக்பரின் காலத்திலும் இருந்தது. அக்பர் பல பழக்க வழக்கங்களில் பலவீனமானவர். குறிப்பாகப் பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீனமானவர். இந்த இடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். இந்த மண்ணில் ஆரியர்கள் புகுந்து நிலைபெற்ற காலத்தில் இருந்து அதிகார மையங்களில் பார்ப்பனர்களே நிரம்பி வழிகின்றனர். அது முஸ்லீம்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி; வெள்ளைக்காரர்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி. ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இணைப்பாய் இருந்து அதிகாரம் செய்து ஆட்டிப் படைத்தவர்கள் பார்ப்பனர்களே.

இவ்வாறு அதிகார மையங்களில் இருந்த பார்ப் பனர்கள் அக்பரின் பலவீனங்களைப் பயன் படுத்திக் கெண்டு, தங்களுக்குச் சாதகமாகப் பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டனர். அவ்விதம் நிறைவேற்றிக் கொண்ட ஒரு திட்டம் தான் ஜசியா வரி நீக்கம். அவருக்குப் பின் வந்த ஜஹாங்கிரும், ஷாஜஹானும் கேளிக்கை களிலும் பொறுப்பற்றும் காலம் கழித்தனர். அவர்கள் ஜசியா வரி பற்றியோ, அதன் நீக்கம் பற்றியோ தெரிந்து கொள்ளவே இல்லை. இந்நிலையில் ஷாஜஹானின் களியாட்டங்கள் எல்லை மீறிக் கொண்டு போவது குறித்து அவருடைய மகன்களில் ஒருவரான அவுரங்கசீப் மிகவும் கவலை கெண்டார். இதைப் பற்றித் தன் சகோதரர்களிடம் பேசினார். தந்தையை ஆட்சிப் பொறுப்பில் இருந்து நீக்கி விட்டு, மூத்த சகோதரனின் தலைமையில் நல்லாட்சி நடத்த வேண்டும் என்றும் கூறினார். ஆனால் மற்ற மூன்று சகோதரர்களும் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அது மட்டும் அல்ல. அவுரங்கசீப்பைத் தந்தையிடம் காட்டிக் கொடுக்கவும் முனைந்தனர். இதனால் வெகுண்டு எழுந்த அவுரங்கசீப் தன் மூன்று சகோதரர்களையும் கொன்றுவிட்டுத் தன் தந்தையைச் சிறை வைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் ஆய்வு செய்த போது முஸ்லீம்கள் மட்டுமே வரி கட்டுவதையும், இந்துக்கள் வரி கட்டாமல் இருப்பதையும் கவனித்தார். அதைச் சரி செய்யும் பொருட்டே இந்துக்கள் மீது ஜசியா வரியை மீண்டும் விதித்தார்.

அவுரங்கசீப் மதச் சகிப்புத் தன்மையே இல்லாத மத வெறியர் என்றும், இந்துக்களைப் பலவிதங்களில் கொடுமைப்படுத்தினார் என்றும் அவர் மீது இன்னொரு அபாண்டமான குற்றச்சாட்டும் உண்டு. ஆனால் அவரு டைய படைப் பிரிவில் முக்கியத் தளபதியாக இருந்தவர் ஜெய்சிங் என்ற இந்துதான். இவருக்குக் கீழ் தான் முஸ்லீம் தளபதிகள் இருந்தனர். அவருக்குக் கீழ் இருந்த அப்ஸல்கான் செயிஸ்டகான் ஆகிய தளபதிகள் சிவாஜி யைப் பிடிக்கப் போய்த் தோல்வி அடைந்த பின், ஜெய்சிங்தான் சிவாஜியைச் சிறை பிடித்து வந்தார். அவுரங்கசீப் இந்துக்களைச் சகிப்புத் தன்மை இல்லாமல் நடத்தி இருந்தார் என்றால், ஒரு இந்துவை மேல்நிலைத் தளபதியாகவும், முஸ்லீம் தளபதிகளை அவருக்குக் கீழும் வைத்துக் கொண்டு இருந்திருப்பாரா? மேலும் அவர் இந்துக்களை எதிரிகளாகவே நினைத்து இருந்தால் ஒரு இந்துத் தளபதி சிவாஜியைச் சிறைப் பிடித்து அவரிடம் ஒப்படைத்து இருப்பாரா?

**அது மட்டும் அல்ல. தமிழ் நாட்டில் இருந்து சென்ற, சைவ சித்தாந்த ஞானியான குமரகுருபரருக்கு மடம் கட்டக் காசியில் இடம் அளித்து இருப்பாரா? காசியில் அவுரங்கசீப் அளித்த அந்த இடத்தில் குமரகுருபரர் கட்டிய மடம் இன்றும் இயங்கிக் கொண்டு இருக்கிறதே?**

## கல்வியைக் கார்ப்பரேட் மயமாக்கும்

# உயர்கல்வி ஆணையம்

- க. முகிலன்

கூட்டுறவுக் கூட்டாட்சி (Co-operative Federalism) என்பதே பா.ச.க. ஆட்சியின் குறிக்கோள் என்று ஒரு புறம் சொல்லிக் கொண்டு, மறுபுறம் அரசமைப்புச் சட்டத்தால் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பறித்து நடுவண் அரசில் குவிக்கும் நடவடிக்கைகளை நரேந்திர மோடி அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

இத்தன்மையில் பல்கலைக்கழக மானியக் குழுவைக் கலைத்துவிட்டு உயர்கல்வி ஆணையம் என்பதை அமைப்பதற்கான சட்டத்தை (Higher Education Commission of India (Repeal University Grants Commission Act) Act 2018) இந்த சூலை மாதம் தொடங்கிய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றிட வேண்டுமென்று நடுவண் அரசு முனைந்துள்ளது.

1947இல் இந்தியாவில் 20 பல்கலைக்கழகங்களும் 500 கல்லூரிகளும் இருந்தன. சுதந்தர இந்தியாவில் சவகர்லால் நேரு தலைமையிலான இந்திய அரசு, "அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பத்தாண்டுகளுக்குள் 14 அகவைக்குட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவயக் கல்வியை அரசு அளிக்க வேண்டும்" என்று அரசமைப்புச் சட்டம் வகுத்திருப்பதைச் செயல்படுத்துவதில் வேண்டுமென்றே முனைப்புக் காட்டவில்லை. மாறாக, பார்ப்பனர் மற்றும் பிற மேல்சாதியினரின் பிள்ளைகளுக்கு உதவும் வகையில் உயர்கல்வியை ஊக்குவித்தது. எனவே, உயர்கல்வி நிறுவனங்கள் அமைவதற்கான ஏற்பிசைவு வழங்குதல், உயர்கல்வியின் தரத்தைக் கண்காணித்தல், உயர் கல்விக்கு நிதியைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளைச் செய்வதற்காக 1956இல் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் பல்கலைக்கழக மானியக் குழு (UGC - யு.ஜி.சி.) என்பது ஏற்படுத்தப்பட்டது.

இந்திரா காந்தியின் நெருக்கடி நிலை கால ஆட்சியின் போது, 1976இல், மாநில அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வி, பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதன்மூலம் உயர்கல்வியில் மாநிலங்கள் பெற்றிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டது. இன்று உயர்கல்வியில் உள்ள சீர்கேடுகளுக்கும் ஊழல்களுக்கும் கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதே மூல காரணமாக இருக்கிறது.

மற்ற உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள முதன்மையான வேறுபாடு - மனிதன் மட்டுமே உற்பத்தி செய்கிறான்; கருவிகளைக் கொண்டு, தன் உழைப்பைச் செலுத்தி, இயற்கையில் உள்ள பொருள்களைப் பயன்படுத்தித் தன் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்கிறான். மனிதகுல வரலாற்றில் மனிதனின் அறிவாற்றலால் கருவிகளில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தித் திறனிலும். உற்பத்தியின் பெருக்கத்திலும் பாய்ச்சலான முன்னேற்றங்களை உண்டாக்கியுள்ளன. இந்த உற்பத்திப் பெருக்கத்தின் பயன்களில் பெரும் பகுதியை நாட்டின் மக்கள் தொகையில் சிறிய விழுக்காட்டினராக உள்ள மேல்தட்டு ஆளும் வர்க்கத்தினரே துய்க்கும் வகையிலான அரசமைப்பும் ஆட்சி முறையும் இருந்து வருகின்றன.



2018 சூலை 20 அன்று சென்னை ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில்

இத்தன்மையில் 1980களில் மேலை நாடுகளில் தகவல் தொழில் நுட்பம் (Information Technology-IT) வேகமாக வளர்ந்தது. உற்பத்தித் துறையிலும் இதன் பயன்பாடு மிகுந்தது. பன்னாட்டு முதலாளிய நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பத்தைக் கொண்டு மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களையும் மக்களின் உழைப்பை மலிவான கூலியிலும் சுரண்டுவதற்காக, வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளின் மூலம் தாராளமயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கையைக் 'காட்' ஒப்பந்தம் மூலம் உருவாக்கின. உலக வணிக அமைப்பின் மூலம் மூன்றாம் உலக நாடுகள் மீது இக்கொள்கைகளைத் திணித்தன. 1991இல் பி.வி. நரசிம்மராவ் பிரதமராகவும், மன்மோகன் சிங் நிதி அமைச்சராகவும் ஆட்சியில் அமர்ந்ததும் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டன. இதற்காக தொழில்கள், வணிகம், மருத்துவம், கல்வி முதலானவற்றின் மீதான அரசின் பொறுப்புகளும், கட்டுப்பாடுகளும் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டன.

இவ்வாறு தனியார்மயமாக்கப்பட்ட சூழலில், முதலாளிய நிறுவனங்களுக்கு, தகவல் தொழில் நுட்பத்




தில்லியில் பல்கலைக்கழக மானியக் குழு தலைமையகம்

தைத் தொழில்களிலும், சேவைப் பிரிவுகளிலும் (Service Sector) வணிகத்திலும் பயன்படுத்துவதற்காக, இதில் பட்டமும் பயிற்சியும் பெற்ற இளைஞர்கள் தேவைப்பட்டனர். இந்தப் பின்னணியில்தான் தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 1990 முதல் புற்றீசல்கள் போல் முளைத்தன. தற்போது தமிழ்நாட்டில் மட்டும் 550-க்கும் மேற்பட்ட சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. இந்தியாவில் இதுபோல் இருக்கின்ற மொத்த தனியார் பொறியியல் கல்லூரிகளில் பாதிக்கும் மேற்பட்டவை தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களில் உள்ளன. இவற்றுடன் வணிகவியல் (B.Com.), வணிக மேலாண்மையியல் (B.B.A; M.B.A.) படிப்புகளில் தனியார் கல்லூரிகள் உருவாயின.

முதலாளிய உற்பத்தியின் உயர் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலைகளில் சேருவதற்கு ஆங்கில வழியில் படித்திருக்க வேண்டும் என்கிற கருத்து ஆளும் வர்க்கத்தால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. இதன் விளைவாக இந்தியா முழுவதும் மழலையர்பள்ளி முதல் கல்லூரிக் கல்வி வரை ஆங்கில வழியில் கற்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்வி வணிகமயமாகி கொழுத்த இலாபம் தரும் தொழிலாகக் கோலோச்சுகிறது. இப்போக்கிற்கு இந்திய அரசும், மாநில அரசுகளும் எல்லா வகையிலும் துணை நிற்கின்றன.

இதனால் தாய்மொழிவழிக் கல்வி அடியோடு புறக்கணிக்கப்பட்ட கொடுமை நேர்ந்துள்ளது. கடந்த கால் நூற்றாண்டாக தத்தம் தாய்மொழியில் முறையாக சிந்திக்கவும், பேசவும், எழுதவும் தெரியாத இளந்தலைமுறையை உருவாக்கியிருப்பதற்காக நாம் நாணித் தலைக்குனிய வேண்டும். "செந்தமிழே உயிரே நறுந்தேனே, உயிரினை - மூச்சினை உனக்களித்தேனே" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். ஆனால் இன்று ஆங்கிலம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. நம் தாய்மொழியான தமிழரையும், பிற தேசிய இனங்களின் தாய்மொழிகளையும் ஆங்கிலம் எனும் திமிங்கலம் விழுங்குவதிலிருந்து மீட்க வேண்டுமானால், முதலாளியச் சுரண்டலின் வடிவங்களான தாராள மயம், தனியார் மயம், உலக மயம் என்கிற ஏகாதிபத்தியக் கொள்கையை வீழ்த்தியாக வேண்டும்.

பொறியியல் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி அளித்தல், கண்காணித்தல் முதலான பணிகளை மேற்கொள்வதற்கென இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) இருக்கிறது. இதேபோல் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக இந்திய மருத்துவக் குழு (MCI)வும், சட்டப்படிப்பு தொடர்பாக சட்டக்கல்விக் குழுவும் (BCI), ஆசிரியர் பயிற்சிக் கல்விக்காக என்.சி.டி.இ. (NCTE) என்கிற அமைப்பும் மற்றும் மருந்தியல், செவிலியர், கட்டட அழகியல் ஆகிய கல்வி நிறுவனங்களுக்காகத் தனித்தனியாகக் குழுக்களும் இருக்கின்றன. இவை அனைத்தும் பல்கலைக்கழக மானியக்குழுவின் (யு.ஜி.சி.) கீழ் இயங்கும் அமைப்புகளாகும்.

2016-2017ஆம் ஆண்டின் கணக்கின்படி இந்தியாவில் 864 பல்கலைக்கழகங்களும், 40,026 கல்லூரிகளும் உள்ளன. 1991 முதல் இந்திய அரசும், மாநில அரசுகளும் உயர்கல்வி நிறுவனங்களை அமைக்கும் பொறுப்பிலிருந்து கிட்டத்தட்ட முழுமையாக விலகிக் கொண்டன. தனியார் கல்வி நிறுவனங்களுக்குக் கதவைத் திறந்துவிட்டன. எனவே தனியார் கல்வி நிறுவனங்களை அமைக்க அனுமதி பெறல், உரிய உள்கட்டமைப்பு வசதிகளும், தகுதி சான்ற ஆசிரியர்களும் இல்லாமல் நடத்துதல் ஆகியவற்றுக்காக யு.ஜி.சி.யில் உள்ளவர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பெருந்தொகை கையூட்டாகத் தரப்படுகிறது.

மருத்துவக் கல்விக் குழுவின் தலைவராகப் பத்து ஆண்டுகள் இருந்த குசராத் பனியாவான கேத்தன் தேசாய் வீட்டில் ஆயிரம் கோடிக்குமேல் பணமும், நூறு கிலோ தங்கமும் வருமான வரித் துறையால் கைப்பற்றப்பட்டன. ஆனால் கேத்தன் தேசாய் சுதந்தரமாக நாட்டில் நடமாடிக் கொண்டிருக்கிறார். முதலில் தனியார் கல்லூரியாகத் தொடங்கி, கல்வி வணிகக் கொள்கையால், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக 150 நிறுவனங்கள் ஊழல் மூலம் உயர்த்திக் கொண்டன. இக்காரணங்களால் உயர்கல்வியின் தரம் தாழ்ந்தது. சட்டிப்பானை விற்பது போல் பட்டங்களை விற்கும் கடைகளாகவே பெரும்பாலான உயர்கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன.

உயர்கல்வித் துறையின் சீரழிவுகள், முறைகேடுகள், ஊழல்கள் குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து பெரும் விவாதத்தைக் கிளப்பின, 2006ஆம் ஆண்டு நடுவண் அரசு உயர்க்கல்வித் துறையின் சீர்கேடுகளைக் களையவும், கல்வித் தரத்தை மேம்படுத்தவும் பேராசிரியர் யசுபால் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 2009இல் யசுபால் குழு அரசிடம் தன் அறிக்கையை அளித்தது.

யசுபால் குழு அறிக்கையில், நிதியைப் பகிர்ந் தளிக்கும் பொறுப்பு மட்டும் யு.ஜி.சி.யிடம் இருக்க வேண்டும். பாடப் பிரிவு, பாடத் திட்டம், கல்வியின் தரம் முதலானவற்றைக் கண்காணிக்க உயர்கல்வி ஆணையம் என்கிற தனியான ஒரு அமைப்பை ஏற் படுத்த வேண்டும். பொறியியல், மருத்துவம், சட்டம் முதலானவற்றின் கல்வி தொடர்பாக உள்ள அமைப்பு களைக் (AICTE, MCI) கலைத்துவிட வேண்டும். உயர்கல்வி என்பது எல்லாத் துறைகளையும் தழுவிய தாக-ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களையும் உள்ளடக்கிய தாக இருக்க வேண்டும். இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (IIT) போன்றவற்றில் கலை-அறி வியல் படிப்புகளும் இடம்பெற வேண்டும். நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தந்தை வேந்த ராகவும், ஒரு மகன் இணை வேந்தராகவும், இன் னொரு மகன் துணைவேந்தராகவும் உள்ள கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்று யசுபால் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கல்வியாளர் கள் இதை வரவேற்றனர். ஆனால் 2014 வரையில் ஆட்சியில் இருந்த மன்மோகன் சிங் அரசு இதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகள் கழித்து நரேந்திர மோடி ஆட்சி, இதன் அடிப்படை நோக்கத்திற்கு எதிரான வகையில் அதிரடியாக நடவடிக்கை எடுத்துள்ளது.

28-6-18 அன்று நடுவண் அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்-யு.ஜி.சி.க்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ள உயர்கல்வி ஆணையத்திற்கான சட்ட வரைவை வெளியிட்டது. இதுகுறித்து சூலை 7ஆம் நாளுக்குள் பொதுமக்கள் கருத்துரைக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டது. நீண்டகால நோக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உயர் கல்வி ஆணையம் குறித்து பத்து நாள்களுக்குள் கருத்துக் கூறவேண்டும் என்று அரசு ஏன் அவசரம் காட்டுகிறது என்று கல்வியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதன்பின் இந்தக் கால அளவு சூலை 20 வரை என்று நீட்டிக் கப்பட்டிருக்கிறது.

உயர்கல்வி ஆணையச் சட்ட வரைவில் உள்ள முதலாவது பெரிய தீமை என்பது, யு.ஜி.சி.யிடம் 1956 முதல் இருந்து வந்த நிதி நல்கும் அதிகாரத்தை மனித வள மேம்பாட்டு அமைச்சகம் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்வது ஆகும். யு.ஜி.சி. குறைந்த அளவிலேனும் தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இயங்கி வந்தது. நிதி வழங்கும் அதிகாரம் மனிதவள மேம்பாட்டு அமைச்ச கத்திடம் செல்லுமானால், நடுவண் அரசில் ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சியின் தலையீடு நிதிப் பகிர்வில் அதிகமாக இருக்கும். எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங் களின் உயர்கல்விக்குக் குறைவாக நிதி ஒதுக்கப்படும். எனவே உயர் கல்வி மேலும் சீரழியும்.

இந்த வரைவில், ‘‘இந்திய அரசால் தேசிய அளவில் முதன்மையானவை என்று அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் தவிர்த்து, நாடாளுமன்றத்தின் எந்த வொரு சட்டத்தின் கீழும், மாநிலச் சட்டமன்றத்தின்



உயர்கல்வி ஆணையச் சட்டத்திற்கு எதிராக 18.7.2018 அன்று தில்லியில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

எந்தவொரு சட்டத்தின் கீழும் நிறுவப்பட்ட அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்’’ என்று கூறப்பட்டுள்ளது. எனவே தமிழகச் சட்டமன்றத் தில் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலமாக நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம், அறிஞர் அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம், கோவை வேளாண் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் மீது தமிழக அரசுக்குள்ள உரிமைகள் புதிய உயர்கல்வி ஆணையத்தின் மூலம் பறிக்கப்படும்.

தமிழ்நாட்டில் உயர் கல்வியில் ஆராய்ச்சிக்குத் தேவையான நிதியை யு.ஜி.சி. இதுவரை அளித்து வந்தது. இனி மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திடம் இதற்காகக் கையேந்தி நிற்க வேண்டும் என்பது ஏழரைக் கோடித் தமிழர்களை இழிவுபடுத்துவதாகும். அதேபோன்று, பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை கிடைப்பதும் அரசியல் தலையீடு கொண்டதாகி விடும்.

போதிய உள்கட்டமைப்புகளோ, தகுதி சான்ற ஆசிரியர்களோ இல்லாத உயர்கல்வி நிறுவனங்களின் பட்டியலை ஆண்டுதோறும் யு.ஜி.சி. வெளியிட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கைக்குத் தடைவிதித்துள்ளது. உயர்கல்வி ஆணை யத்தின் வழிகாட்டி நெறிகளை மீறினால் அபராதம் விதிக்கப்படும். அபராதத்தைக் கட்டத் தவறினால் இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் மூன்றாண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்கப் படும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் விதிகளை மீறும் உயர்கல்வி நிறுவனங்களை மூடுகின்ற அதி காரமும் ஆணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

தடையற்ற-சுதந்தரமான சிந்தனை வளர்ச்சிக்கும், புதிய அறிவுத் தளங்களை உருவாக்குவதற்கும், பன்முகக் கண்ணோட்டங்களுக்கும் இடமளிப்பதற்கும்,

புதிய ஆராய்ச்சி முறைகளை உருவாக்குவதற்கும் வாய்ப்பளிக்கும் இடமாக உயர்கல்வி நிறுவனங்கள் விளங்க வேண்டும். ஆனால் உயர்கல்வி ஆணையமோ எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஒரே வார்ப்பில் வடிக்கப்பட்டது போல் இயங்காவிட்டால், தண்டிக்கப் படும் என்று எச்சரிக்கிறது. நடப்பில் உள்ள இருப்பைக் கேள்வி கேட்டு ஆய்வுக்கு உட்படுத்தியதன் மூலமே எல்லாத் துறைகளிலும் அறிவு அடுத்த கட்டத்தை நோக்கி உயர்ந்தது என்கிற இயங்கியலை, பழமையை நிலைக்க வைக்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்ட பா.ச.க. ஆட்சியிடம் எதிர்க்க முடியாது தான்! ஆனால் இதை எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

உயர்கல்வி ஆணையத்தின் அமைப்பில் ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர் மற்றும் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் நடுவண் அரசு அமைக்கும் ஒரு குழுவால் தேர்வு செய்யப்படுவார்கள். இந்த ஆணையத்தின் தலைவரையோ, துணைத் தலைவரையோ, உறுப்பினர்களையோ ஒன்பது காரணங்களின் பேரில் நீக்குவதற்கு நடுவண் அரசுக்கு அதிகாரம் உண்டு. இதில் ‘‘மோசமாக நடந்து கொள்ளுதல்’’ (Misbehavior) என்பதும் ஒன்றாகும். இது ஆணையத்தின் உறுப்பினர்களை அச்சுறுத்தி அடங்கி நடக்குமாறு செய்யும். ஆணையமே சுதந்தரமாகச் செயல்பட முடியாத போது, அதன்கீழ் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் எவ்வாறு தன்னாட்சி அதிகாரம் கொண்டவைகளாக இயங்க முடியும்? மேலும் விதி 25இல் நடுவண் அரசின் கொள்கை முடிவுகளை ஆணையம் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், ஆணையத்திற்கு மாறுபட்ட கருத்து இருந்தாலும் நடுவண் அரசின் முடிவே இறுதியானது என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே உயர்கல்வி ஆணையம் நடுவண் அரசின் ஓர் அடிமையாகவே செயல்படும்.

இந்திய அளவில், பள்ளிக் கல்வியில் பாதிக்கு மேலும், கல்லூரி நிலையில் 80 விழுக்காடு அளவுக்கும் தனியாரிடம் உள்ளன. இத்தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடோ, சமூக நீதிக் கண்ணோட்டமோ இல்லை. பணம் கொடுத்தால்தான் படிப்பு. இதனால் உயர்கல்வி ஏழைகளுக்கு எட்டாக் கனியாகி விட்டது. இந்நிலையில் உயர்கல்வி ஆணையம் உயர் கல்வியை மேலும் தனியாரிடம் தாரைவார்க்கிறது. தகுதி-திறமை என்கிற சமூக நீதிக்கு எதிரான மோசடிக் கொள்கையை நிலைநாட்டுகிறது. மாநிலங்களின் உயர்கல்வி உரிமையைப் பறிக்கிறது. உயர்கல்வி அதிகாரம் முழுவதையும் நடுவண் அரசில் குவிப்பதன் மூலம் முதலாளியச் சுரண்டல் சிந்தனையும், இந்துத்துவப் பற்றும் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கூடங்களாக உயர்கல்வி நிறுவனங்கள் மாறிவிடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

எனவே உயர்கல்வி ஆணையத்தை முழுமூச்சுடன் எதிர்த்துத் தடுப்போம். யு.ஜி.சி.யின் சீர்கேடுகளைக் களைந்து மேம்படுத்துவதே சரியான தீர்வாக அமையும். கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்ப்பதே தேசிய இனங்களின் கல்வி உரிமையை நிலைநாட்டும்.


# திருமண அழைப்பிதழ்

மணமகன் :

**கோ.விவேக், B.E., P.G.D.B.F.**

Asst. Manager, Andhra Bank.

மணமகள் :

**சீ.மாலதி, B.E.,**

க.சீனிவாசன்-சீ.பத்மாவதி,
சோளிங்கர்.

மணநாள் :

**23.08.2018 வியாழக்கிழமை**

நேரம் :

**காலை 7.30 மணிக்குமேல்**

இடம் :

**V.P.N.மஹால்**

தக்கான்குளம் அருகில்,
கொண்டபாளையம் ரோடு, சோளிங்கர்.

எங்களது அன்பு மகனின் திருமண விழாவிற்கு
குடும்பத்துடன் அனைவரையும் வருக வருக
என அன்பும், அக்கறையும் கொண்டு
தோழமையுடன் அழைக்கும்

**தீ.கோபாலகிருஷ்ணன்**

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக்கட்சி

**வே.ஆ.செந்தாமரை,**

முதுகலை பட்டதாரி அரசுப்பள்ளி ஆசிரியை.

அனுப்புநர்:

**கோபால் இன்சினியரிங் ஒர்க்ஸ்**

எண்.14, நெல்லுக்காரத்தெரு,
காஞ்சிபுரம் - 631 502.
94448 22007
77085 57474

# ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைப் பலிவாங்கிட கொலைகார மோடி அரசும், உச்ச அறமன்றமும் வகுத்திட்ட 'நீட்'

இரா. பச்சமலை

சமூகத்திலும் கல்வியிலும் ஒடுக்கப்பட்டவர்களாக வைக்கப்பட்டிருந்த பிற்படுத்தப்பட்ட மக்கள், பட்டியல் குலத்தினர், பழங்குடியினர் அரசு அதிகாரங்களில் பங்கீடு பெற்றிடும் வகையில் அரசு வேலைகளில் இட ஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்து அம்பேத்கர் அரச மைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்தார். இது 1950-லிருந்து நடைமுறைக்கு வந்து, வேலையில் இடஒதுக் கீட்டினால் முழுமையாகப் பயனடைந்திட வழியில்லாமல் கல்வியில் இடஒதுக்கீடு வழங்கப்படாமலிருந்ததைச் சுட்டி, போராடி, பெரியார் அரசமைப்புச் சட்டத்தை முதல்முறையாகத் திருத்திடச் செய்து கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெற்றுத் தந்தார்.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோருக்கு மய்யரசுப் பணிகள், வேலைகள், கல்வியிலும் இடஒதுக்கீடு அளித்திட அரசமைப்புச் சட்டத்தில் வழிவகையிருப்பினும் மய்ய அரசும், உயர் அறமன்றங்களும் இவ்வெகுமக்களுக்கு வஞ்சகமாக வழங்க மறுத்து வந்ததைத் தன் நுண் ணறிவுத் திறனாலும், அரசமைப்புச் சட்டம் பற்றிய நுட்பமான ஆய்வுக் கண்ணோட்டத்துடனும் அணுகி தக்க செயல் திட்டங்கள் வகுத்து தோழர் வே. ஆனைமுத்து, அவர்தம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் முதன்மையான வேலைத் திட்டமாகக் கொண்டு சேலம் சித்தையன், சீர்காழி முத்துசாமி, அரியலூர் அ.செ. தங்கவேலு, தாதம்பட்டி எம்.இராசு, பீகார் இராம் அவதேசு சிங், சேதிலால் சேட் போன்றோர் இன்னும் பல ஆயிரம் கட்சித் தொண்டர்கள் துணைகொண்டு மய்ய அரசைப் பணிய வைத்து மண்டல் குழு அமைத் திடச் செய்தார்.

அக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நாடாளுமன்றத்திலும் வைத்திட வழிகண்டார். பின் இடஒதுக்கீட்டின்பால் பற்றுள்ள அரசியல் கட்சிகள், அரசியல் அமைப்புகள், ஆனைமுத்து அவரது மா.பெ. பொ.க.வின் இடைவிடாத உழைப்பின் பயனாய் மய்ய அரசுப் பணிகள், வேலைகளில் பிற்படுத்தப்படோருக்கு இடஒதுக்கீட்டுக்கான திட்டம் நிறைவேற இறுதியில் விசுவநாத் பிரதாப் சிங் (வி.பி. சிங்) மய்ய அரசுப் பணிகள் வேலைகளில் மட்டும் ஒதுக்கீடு அளித்து, 1990இல் மய்ய அரசு ஆணை பிறப்பித்து வரலாறு படைத்தார். இதன்படி இந்திய வரலாறு மண்டலுக்கு முன்னர், மண்டலுக்குப் பின்னர் என்ற இருபெரும் பிரிவுகள வகுத்தெடுத்திட வழிகோலிய தோழர் ஆனைமுத்து, மய்ய அரசுக் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெற்றிடும் பணியையும் தொடர்ந்து பிற கட்சிகள், அமைப்புகளின் துணைகொண்டு போராடி அதையும் வென்றெடுத்தார்.

ஆனால் இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் சிதைத்திட என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அவற்றையெல் லாம் மய்ய அரசும், உயர், உச்ச அறமன்றங்களும், இடஒதுக்கீட்டின் வழியான முழுப் பயன்களும் ஒடுக் கப்பட்ட வகுப்பு மக்களுக்குக் கிடைத்திடாதபடி ஆவன வெல்லாம் செய்து வருகின்றனர்.

மய்ய அரசுப் பணிகள், வேலைகளில் 1943லிருந்து பட்டியல் குலத்தினர் இடஒதுக்கீடு பெற்று வருகின்ற போதும், 1950லிருந்து பழங்குடியினரும், 1994 லிருந்து பிற்படுத்தப்பட்டோர் பெற்று வருகின்ற நிலை யிலும் 22.5 விழுக்காட்டு மக்கள் தொகை கொண்ட பட்டியல் குலத்தோர் பழங்குடியினர் ஆகிய இரு பிரி வினரும் சேர்ந்து உயர் பணி, வேலைகளில் இன்னும் 10 விழுக்காடு கூடப் பெறாமலும், 57 விழுக்காட்டுக்கு மேலான பிற்படுத்தப்பட்டோர் (மதச் சிறுபான்மை களாக உள்ள பி.ப. உள்ளிட்ட) வெறும் 5 விழுக்காடு அளவில்தான் இடஒதுக்கீடு பெற்றுள்ளனர் என்ற இழிநிலைதான் உள்ளது.

அதன் நீட்சிதான் மோசடி மோடியின் மய்ய அரசால் உச்ச அறமன்றத் துணையுடன் கொண்டுவரப்பட்ட 'நீட்' (NEET) எனும் தேசியத் தகுதிகாண் நுழைவுத் தேர்வு. அதன்படி இந்திய ஒன்றியத்தில் (Indian Union) உள்ள அனைத்து மாநிலங்களில் (சில விதிவிலக் குடன்) உள்ள மருத்துவப் பட்டப் படிப்பு இடங்களுக்கு நாடு முழுவதிலுமிருந்து 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளோருக்கு ஒரு பொது நுழைவுத் தேர்வை நடத்தி, அதில் அவர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் இடங்கள் நிரப்பப்படும். இதனால் தமிழகத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி 4000 இடங்கள், தமிழ்நாட்டு மாணவர்களால் நிரப்பப்பட்டு வந்ததை நீர்த்துப்போக வைத்து, இங்கு பொதுத் தகுதி, திறமை என்ற பெயரில் மாநிலங்களின் அதிகாரங்களை அடியோடு அடித்து நொறுக்கிவிட்டனர். இந்திய ஒன்றியத்தின் அடிப் படைத் தத்துவமான கூட்டாட்சித் தத்துவத்திற்கு (Federalism) மரண அடி கொடுத்துவிட்டது, மோசடியான மோடி அரசு.

தென்னாப்பிரிக்காவின் இனவெறி ஆட்சியை எதிர்த்து நீண்ட நெடிய போராட்டத்தை நடத்தி, அதை ஒழித்துக் கட்டி அந்நாட்டின் குடியரசுத் தலைவராகிய பின் நெல்சன் மண்டேலா, மண்டலுக்குப் பின்னால் இந்தியா

வந்தபோது மண்டல் ஒதுக்கீடு பற்றிக் கருத்துக் கேட்கப் பட்டது. அதற்கு அவர் பெருமிதத்துடன் இது உலகிற்கே ஓர் முன்காட்டு என்று கூறினார். மேலும் இது மக்கள், தம்மைத் தாமே ஆண்டுகொள்ள வேண்டுமென்ற கோட்பாட்டின் வடிவம் என்றார். பொதுத் தகுதி, திறமை என்ற பெயரால் வெகுமக்கள் வஞ்சிக்கப்பட்டு வந்த வெற்றுக் கோட்பாட்டுக்குக் கொடுத்த மரண அடி என்றும் வெகுமக்களாகிய நாங்கள் முட்டாள்கள் என்று எவர் கருதுகின்ற போதிலும், நாங்கள் முட்டாள்களாகவே இருந்து எங்களுடைய ஆட்சியை வேறொருவன் செய்யும் வெற்றுத் தகுதித் திறமையைப் புறம் தள்ளிவிட்டு, எங்களுடைய தகுதி திறமையுடன் அமைத்துக் கொள் கிறோம் என முழங்கினார்.

இப்போது வரை தகுதி, திறமை எனக் கூறிவரும் உச்ச அறமுன்றமும் பார்ப்பனப் பிடிக்குள் மண்டிக் கிடக்கும் மோசடியான மோடி அரசும் ஒரு நூற்றாண் டுக்கு முன் வெள்ளையனின் குடியேற்ற அடிமை நாடாக இருந்த காலத்தில் அன்னியனின் தகுதி, திறமை தத்து வத்தை அன்று பெரிய படிப்பாளிகள், அறிவாளிகள் என்று பீற்றிக்கொண்ட பார்ப்பனக் கூட்டம் எப்படி மறுதளித்தது என்பதை நினைவு கூரவேண்டும்.

அப்போது, இந்தியக் குடிமைஇயல் பணிக்கு (இ.கு.ம. ICS) இந்தியாவில் எவனும் தகுதியற்றவன் எனக் கூறி, அதற்கான தேர்வு எழுத அனுமதிக்கப்படாமல், வெள்ளையர்கள் மட்டுமே தகுதியுள்ளவன் எனக்கூறி, அப்பதவிகளில் அவர்கள் மட்டுமே அமர்த்தப்பட்டனர். பின் இந்தியர்களும் (பார்ப்பனர்களும்) அனுமதிக்கப் பட்ட போதும், இந்தியாவில் எங்கும் தேர்வு மய்யம் இல்லை. இலண்டனில் மட்டும் எழுதலாம் என்றனர். அதன்பின் இலண்டன் செல்லப் போதிய வசதியற்ற வர்கள் என இந்தியாவின் சில பெரும் நகரங்களில் மட்டும் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். வெள்ளையருடன் போட்டியிடும் அளவில் தகுதியில்லை எனக்கூறி, இந்தியர் களுக்கு ஒதுக்கீடு பெற்றனர். அந்தத் தேர்விலும் தகுதி காண் மதிப்பெண் பெற இயலாது. ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்குக்கூட தேர்வு பெற முடியவில்லை எனச் சொல்லி, தகுதிகாண் மதிப்பெண் அளவைக் குறைத்துப் பெற்றனர். இதிலிருந்து அந்தக் காலக்கட்டத்தில் உழைப்பை மறுத்து, படிப்பது ஒன்றுதான் அவர்கள் வேலை யென்றிருந்த பார்ப்பனர்கள் ஒப்பீட்டளவில் தகுதியற்ற வர்களாகத்தான் இருந்திருந்தனர். ஆனால் நாடு விடுதலையடைந்ததும், பெரியார் சொன்னதுபோல் 3 விழுக்காடு பார்ப்பனர்கள் இந்திய ஆட்சி அதிகாரத்தைத் தங்களுக்கு மாற்றிக்கொண்டு உழைக்கும் உற்பத்திச் சாதியாக, படிப்பு மறுக்கப்பட்டவர்களாக இருந்த 97 விழுக்காட்டு வெகுமக்களை இந்திய ஆட்சிப் பணிக்கு ஏற்ற தகுதி திறமை குறைந்தவர்கள் எனக்கூறி பொதுப் போட்டியில் அவர்கள் வெற்றி பெற விதிகள் வகுத்துக் கொண்டனர். இந்தப் பின்புலத்தையெல்லாம் ஆய்வுக் குட்படுத்தி சென்னை மாகாணமாக இருந்த தமிழ் நாட்டின் ஆட்சியைப் பிடித்த திராவிடக் கட்சி, 1920 களிலேயே வெகுமக்களாகிய ஒடுக்கப்பட்ட அனைவருக்கும் அன்றி பார்ப்பனர்கள் போன்ற மேல்சாதிக்காரர்களுக்கும் அரசுப் பணியில் ஒதுக்கீடு அளித்தது. அடுத்து விடுதலை வெற்ற இந்திய ஒன்றியத்தில் ஒடுக்கப்பட்ட மக்களான பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசமைப்புச் சட்டத்திலும், ஆட்சி அதிகாரத்திலும் பங்கீடு அளிக்கும் வகையில் அம்பேத்கர் வழிவகை செய்திட்டார். இதன்வழி கிடைக்க வேண்டிய பயன்கள் கிடைக்கப் பெறாவகையில் ஒதுக்கீடு 50 விழுக்காட்டுக்கு மிகக்கூடாது. வளமடைந்த பிற்படுத்தப்பட்டோரை, இடஒதுக்கீட்டு வளையத்தி லிருந்து நீக்குவது, பதவி உயர்வு பெறுவதில் கடைப் பிடிக்கப்பட்ட இடஒதுக் கீட்டை ஒழிப்பது என்று திட்ட மிட்டு பார்ப்பன மய்ய அரசு, உச்ச, உயர் அறமன்றங் களின் செயல்களையும் மீறி ஒடுக்கப்பட்ட மக்கள் படிப் பிலும் வளர்ந்து வருவதைத் தடை செய்யும் வகையில் தான் ‘நீட்’ (NEET) ஐப், புகுத்தி அவ்வகுப்பினரை நிலைகுலைய வைத்துவிட்டனர்.

இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்ட அடிப்படை விதிகளில் அளிக்கப்பட்டுள்ள சமூக நீதியின் முதன்மைக் கூறான இடஒதுக்கீட்டுக் கொள்கைகளைப் பன்னெடுங் காலமாகப் பல்வேறு வழிகளில் நீர்த்துப்போக வைத் துள்ள இந்த 3 விழுக்காடேயுள்ள பார்ப்பனக் காலிக் காவிக் கூட்டம், 70 ஆண்டைய விடுதலை பெற்ற நாட்டில் மய்ய அரசையும், பல மாநில அரசுகளையும் பணிகளையும் உயர் கல்விகளையும் முற்றுரிமை பெற்றது போல் அனைத்துத் தளங்களிலும் 70 விழுக் காட்டுக்கு மேலும் சூறையாடிக் கையகப்படுத்திக் கொண்டு அவர்கள் மட்டுமே வளம் கொழிக்கும் வாழ்வைத் தொடர்ச்சியாகத் தக்கவைத்துக் கொண்டு வெகுமக் களை முற்றிலும் வஞ்சித்துவிட்டனர். இவர்களின் தகுதி திறமையின் கொடும் விளைவுகளைக் கீழே யுள்ள சிலவற்றைக் காணலாம்.

* 20 கோடி மக்களுக்கு ஒருவேளை மட்டும் உணவு (உணவு வேளாண்மை நிறுவனம் FAO)
* 30 கோடிக்கு மேலான மக்களை நாளும் இரவு உணவு கிடைக்காதவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்.
* 35 கோடி மக்களுக்கும் மேலானவரை படிப்பறிவு இல்லாதவர்களாக.
* நாட்டிற்கே உணவு தரும் உழவர்கள் பல இலட்சக் கணக்கில் தற்கொலை செய்து கொள்பவர்களாக.
* 100 கோடி மக்களுக்கும் மேலானோருக்கு முறை யான வேலை வழங்கப்படாதவர்களாகவும், அமைப்பு

சாரா அன்றாடக் கூலி உழைப்பாளிகளாகவும், பெரும் பகுதியினர் நாள் கூலி ரூ.100 கூடப் பெறாதவர்களாக.

* வறுமையில் வாடும் சோமாலியா, ..... போன்ற ஆப்பிரிக்க நாட்டு மக்களின் ஊட்டச்சத்துக்கும் குறைவான அளவே பெறும் நிலையில் இந்திய ஒன்றிய மக்கள்.

* 173 உலக நாடுகளுள் மனித வள மேம்பாட்டுக் குறியீட்டு அளவின்படி 137 ஆட்சியிடம்.

* உலக நாடுகளுள் ஒப்பீட்டளவில் மருத்துவ வசதியில் 195இல் 145ஆம் இடம். (உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் மிகவும் குறைவாக 1.0 விழுக்காடு மட்டுமே) அண்டை நாடுகள் சீனா 48, இலங்கை 71, வங்கநாடு 133 என்ற நிலை.

* இதேபோன்று கல்விக்கென்று வெறும் 2 விழுக்காடு என குறைந்த அளவில். தேவை 6 விழுக்காடு ஒதுக்கீடு.

இப்படியெல்லாம் வெகுமக்களின் வாழ்வையெல்லாம் சூறையாடிவிட்டு, இந்தப் பார்ப்பனப் பனியாக் கொள்ளைக்கூட்டம் எவ்வாறு கொழுத்துச் செழிக்கிறது.

ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்குப் பல இலக்க ரூபாய் அரசுச் செலவில் 12 இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்களில் 70 விழுக்காட்டிற்குமேல் படித்துப் பட்டம் பெறுவோர் பார்ப்பன பனியா மாணவர்கள் என்பதுடன் வெகுமக்கள் வரிப்பணத்தை இவர்கள் படிப்பு என்ற பெயரில் கொள்ளை கொண்டு இந்த நாட்டு மக்களுக்கு எவ்விதப் பயனுமின்றி அவர்களுள் பெரும் பகுதியினர் ஆண்டுக்குப் பல மில்லியன் ரூபாய் ஊதியக்காரர்களாக அயல்நாடுகளுக்குப் பண்ணையடிக்கச் செல்கின்றனர். அதே போன்று, சிறப்பானவை எனக் கருதப்படும் 12க்கும் மேற்பட்ட இந்திய வணிக மேலாண்மைக் கல்வி நிறுவனங்களிலும் இவர்களே 80 விழுக்காட்டினர். இவர்களுள் 80 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் ஆண்டுச் சம்பளம் பல இலக்கம், கோடி ரூபாய் பெற்று அயல்நாட்டில் பண்ணையம் செய்பவர்களாக உள்ளனர்.

மேலே சொன்னதுபோல் இதில் படித்த பார்ப்பனக் கூட்டம் தகுதி திறமை மிக்கவர்கள் எனக் கூறிக் கொண்டு 55 ஆண்டுகளுக்குமேல் படித்து வருகின்றனர். ஆனால் உலக அளவில் இந்த கல்வி நிறுவனங்களில் தரம் வாய்ந்த 200 நிறுவனங்களுள் ஒன்றுகூட இடம்பெறவில்லை. இதுதான் இவர்களின் பீற்றிக் கொள்ளும் தகுதி திறமையின் இழிநிலை. சரி,

இந்த நாட்டில் வெகுமக்கள் வரிப்பணத்தைச் சுரண்டி கொழுக்கும் இவர்கள், நாட்டிற்குப் பயன்தரும் வகையில் பொருளாதாரம், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் வெகுமக்களுக்குப் பயன்தரக் கூடிய எந்த ஆய்வும் முறையாக மேற்கொண்டு நடைமுறைக்கு வந்ததாக இல்லை. இப்படியெல்லாம் மக்கள் நலம் சார்ந்த துறைகளில் அவர்கள் மேம்பாட்டிற்காக முறையான திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்திட கிஞ்சித்தும் முற்படாத இக்கூட்டம் நாட்டின் பல தேசிய இனங்களைப் புறந்தள்ளி ஒடுக்கி ஒரே நாடு, ஒரே வரி, ஒரே பண்பாடு என்றும்; இப்போது ஒரே நுழைவுத் தேர்வு முறை என 'நீட்'டை கொண்டு வந்துள்ளனர். இந்த வந்தேறி கூட்டத்திற்கு ஏது நாடு? ஏது பண்பாடு? ஏது மொழி? ஏது நாட்டுப் பற்று? உழைப்பின்றிப் பிறர் உழைப்பை உறிஞ்சிக் கொழுத்துத் திரியும் காட்டேரிக் கயவர்கள் இவர்கள்.

இவையெல்லாம் போதாதென்று மய்ய அரசு, வேலை, கல்வியிலா ஒதுக்கீடு கேட்கிறீர்கள். உங்கள் தமிழகத்தில் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒதுக்கீட்டுக் கொள்கைக்கே உலை வைக்கிறோம் என்றுதான் மருத்துவப் பட்டப் படிப்புக்கு 'நீட்' தேர்வைக் கொண்டு வந்துள்ளோம் என மய்ய அரசும் அதன் உடனாளி உச்ச, உயர் அறமன்றங்களும் கொக்கரிக்கின்றன. இந்த 'நீட்' தேர்வு அரசமைப்புச் சட்டப் படியோ, தருக்க முறையிலோ, நியாயத்தின் அடிப்படையிலோ, முற்றிலும் முறைகேடானது என்பதைக் காணலாம்.

ஒரே நாடு, மருத்துவப் படிப்புக்கு ஒரேவகைத் தேர்வு என்பது அடிப்படை அற்றது.

வெள்ளையனின் ஒற்றை ஆட்சிக்கு ஏதுவாக 1857இல் இங்கிலாந்து அரசின் நேரடி ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்ட பல்வேறு நாடுகள் மொழி, பல்வேறு இனங்கள், பண்பாடுகள் என்றிருந்தவற்றை ஒன்றிணைத்து, ஒரே அலகாக இந்தியா என்ற சொல்லாட்சியே கையாளப்பட்டது. பெரியார் வரையறுத்துச் சொன்னதுபோல, இந்தியா ஒரு நாடே அல்ல; மேலும் இதை உறுதி செய்யும் வகையில் நாடு விடுதலை அடைந்து அதற்கென்று அரசமைப்புச் சட்டம் இயற்றிக் குடியரசு நாடான பின் "இந்திய ஒன்றியம்" என்ற அரசமைப்புச் சட்டச் சொல்லாட்சி இந்தியா ஒரே நாடல்ல என்பதை எண்பிக்கின்றது. எனவே அரசமைப்புச் சட்டம் சொல்லும் கூட்டாட்சி அமைப்பைக் குலைப்பதற்கே இந்தக் காவிக் கூட்ட மய்ய அரசு உச்ச, உயர் அறமன்றங்கள் துணை கொண்டு 'நீட்'டை அரங்கேற்றுகிறது.

அரசமைப்புச் சட்டம் 14ஆம் விதி வரையறுக்கும் அனைவருக்கும் சம வாய்ப்பு என்பதற்கு முற்றிலும் முரணாக, நாட்டின் மாநிலங்கள் கடைப்பிடித்துவரும் வெவ்வேறு மாநிலப் பாடத் திட்டங்களின்கீழ்ப் பயின்று வரும் பல கோடி மாணவர்களுக்கான சமவாய்ப்பு

உரிமையைப் பறித்துக்கொண்டு, நாடு முழுமையிலும் வெறும் 10 இலக்கம் பேரால் பயிலப்படும் ஒரு மய்ய உயர்நிலைக் கல்வி முறையை மட்டும் அடிப்படை யாகக் கொண்டு நடத்தப்படும் நீட் தேர்வு ஆகும்.

அரசமைப்புச் சட்ட விதி 14க்கு எதிரான 'நீட்' தேர்வும், அத்தேர்வைத் தமிழ்நாட்டு மாணவர்கள் வெளிமாநில மய்யங்களில் எழுதிட வேண்டுமென்ற அரசின் அடாவடித்தனத்தை சென்னை உயர் அற மன்றம் தள்ளுபடிச் செய்து, தமிழகத்திலேயே தேர்வு எழுத மய்யங்கள் அமைத்திட ஆணையிட்டது. ஆனால் விதி 21இன்படி தனிமனிதனின் உயிரையும் அவரின் விடுதலை உணர்வையும் (No person deprived of this life and personal liberty) காத்திட வேண்டிய உச்ச அறமன்றம் மேற்சொன்ன உயர் அறமன்றத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து அளித்த தீர்ப்பும் தேர்வர்கள் அவர் தம் பெற்றோர் அனைவரையும் மாளா இன்னலுக் குள்ளாக்கியதுடன், (மாணவி அனிதா தற்கொலை) வெளி மாநில மய்யத்தில் தேர்வு எழுதிய மாணவர் ஒருவரின் தந்தை மனஉளைச்சலுக்குள்ளாகி உயிரை நீத்திடவும் செய்துவிட்டது.

தமிழ்நாட்டில் 2006 வரை மருத்துவ, பொறியியல் பட்டப் படிப்புக்குச் சேர நுழைவுத் தேர்வு நடத்தியும், நுழைவுத் தேர்வு இன்றியும், மாநிலப் பாடத்திட்டத் தின்கீழ்ப் படித்த மாணவர்கள், மய்ய பாடத் திட்டத்தின் கீழ்ப் படித்தவர்களுக்கும் என 98:2 விகிதத்தைப் பின்பற்றிச் சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என உயர் அறமன்றம் தீர்ப்பளித்தும், பின்னொரு ஆண்டில் 12ஆம் வகுப்பு மதிப்பெண்களையும், நுழைவுத் தேர்வு மதிப்பெண்களையும் ஒருசேரக் கணக்கில் கொண்டு சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அறமன்றம் ஆணையிட்டும், வெறும் நுழைவுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மட்டும் சேர்க்கை என பலவாறான நிலைபாடுகள் மாறி, மாறிக் கடைப்பிடித்து வந்த முறைகளை முற்றிலுமாகக் கைவிட்டு, 2006-லிருந்து நுழைவுத் தேர்வு ஒழிக்கப்பட்டு, 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே மருத்துவ, பொறியியல் பட்டப்படிப்புச் சேர்க்கை நடை பெறும் எனத் தமிழ்நாட்டு அரசு ஆணையிட்டது. இதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் உயர் அறமன்றம், ஊர்ப்புறம், நகர்ப்புறக் கல்விச்சூழல், தரம் மிகப்பெரும் வேறுபாடுள்ளதாகவும், வெவ்வே றான பாட முறைகள் உள்ளதாகவும் நுழைவுத் தேர்வுத் தளம் அனைவருக்கும் சமதளம் இல்லாத நிலை ஏற்படுத்தும் என்ற விளக்கம் அளித்து, அரசு ஆணை சரி என்ற தீர்ப்பு அளித்தது. இதனை எதிர்த்து வழக்கு வந்த போது, உச்ச அறமன்றம், சென்னை உயர் அற மன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து, எந்த வகையிலும் நுழைவுத் தேர்வு தேவையில்லை; பட்டப் படிப்புக் கானத் தகுதித் தேர்வான 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையே போதுமானது எனத் தீர்ப்பளித்தது.

மேலும் 2013-2014இல் இந்திய மருத்துவக் குழு மருத்துவப் பட்டப் படிப்புக்கு இந்திய ஒன்றியம் அனைத்துக்கும் ஒரே தேசியத் தகுதிகாண் நுழைவுத் தேர்வு 'நீட்' (NEET) எழுத வேண்டும் என்று ஆணை யிட்டது. இதனை உச்ச அறமன்றம், இது அடிப்படை யிலேயே அரசமைப்புச் சட்ட இந்திய ஒன்றியக் கூட்ட மைப்புத் தத்துவத்திற்கே எதிரானது போன்ற பல்வேறு காரணங்களைச் சொல்லி 'நீட்' செல்லுபடி யாகாது என்று தீர்ப்பு அளித்தது. ஆனால் அடுத்த 2015இல் இந்திய மருத்துவக் குழு மறுபடியும் இந்திய ஒன்றியத் திலுள்ள அனைத்து மருத்துவப் பட்டப் படிப்புக்கு 'நீட்' கட்டாயம் என்று ஆணை பிறப்பித்தது. இதற்கு எதிராக உச்ச அறமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் மய்ய அரசு நீட் வேண்டுமென்று கருத்துரைத்தது. இந்த வழக்கில் 'நீட்'க்கு எதிராக வலிமையான வாதங்கள் தமிழக அரசாலோ, பிற அமைப்புகளாலோ எடுத்து வைக்கப்படவில்லை. மேலும் உச்சநீதிமன்றம் மருத்து வப் பட்டப் படிப்புச் சேர்க்கையில் தனியார் மருத்துவ நிறுவனங்களின் மாணவர் சேர்க்கைக்கு நிதிக்கொடை என்ற பெயரில் பெரும் அளவு பணம் புழங்குவதாகவும், இதனால் முற்றிலும் தகுதியற்ற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு இடங்கள் விலைபோய்விடுகின்றன என்றும் கூறி, 'நீட்' தேர்வை கட்டாயம் எனத் தீர்ப் பளித்தது. ஆனால் தமிழகத்திற்கு 2016 ஆண்டுக்கு மாணவர் சேர்க்கைக்கு மட்டும் விலக்களிக்கப்படு வதாகவும் ஆணையிட்டது. 2017க்குள் 'நீட்' தேர்வுக் குத் தக்க வகையில் கல்வித் தரத்தை உயர்த்தி, இதில் போட்டியிடுமளவுக்குத் திறம் படைத்த மாணவர்களை உருவாக்க வேண்டும் என்றும் கூறியது. இந்த உச்ச அறமன்றமும், உயர் அறமன்றமும் இதையொட்டிய வழக்கில் தமிழக அரசு 'நீட்' போட்டித் தேர்வை எதிர்கொள்ளுமளவுக்குக் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்றும் கூறியது.

**இவற்றையெல்லாம் உடன் சில ஆண்டுகளுக்குள் நிறைவேற்றிட இயலாது. இவ்வகையில் தமிழக அரசும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இந்த இயலாமைக்கு தமிழக மாணவர்களை உச்சஅறமன்றம் பலிவாங்கியது எவ்வகை அறம் சார்ந்தது?**

2017இலும் 'நீட்'க்கு எதிரான வழக்குத் தொடுக்கப் பட்டு, உச்ச அற மன்றத்தில் தமிழகத்திற்கு 'நீட்' லிருந்து விலக்களிக்க வேண்டுமென்ற தமிழகத்தின் சட்ட வடிவிலான வேண்டுகோளை இந்திய ஒன்றிய மய்ய அரசு வஞ்சகமாக நாடகமாடி வலியுறுத்த

வில்லை என்பதுடன் மாநில அரசும் பல வலுவான, உயிரான அடிப்படை வாதங்களை எடுத்து வைத்து வாதிடாமல் கோட்டைவிட்டு இரண்டு திங்களுக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சி களும் இதனூடே மய்ய அரசு அமைச்சர்கள், மய்ய அரசு எல்லாம் இணைந்து நடத்திய நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து 'நீட்'லிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க முடியாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதையடுத்து ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அனிதா 12ஆம் வகுப்பில் 98 விழுக்காடு என 1200-க்கு 1176 மதிப்பெண் பெற்றமையை முதன்மையான காரண மாகக் கொண்டு அவருக்கு மருத்துவப் பட்டப் படிப்புக்கு 'நீட்'லிருந்து விலக்களித்து இடம் தரவேண்டுமென உச்ச அறமன்றத்தை நாடிய போது, இயற்கை நியதி யைக் கடைப்பிடிக்காமல் அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த வழக்கை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அவருக்கு மருத்துவப் படிப்புக்கு ஒரு இடம் அளித்திருந்தால், உச்சநீதிமன்றத்தின் மாண்பு ஒன்றும் மாசுபட்டுவிடாது எனக் கருதாமல் மனித உயிர் உரிமைக் காப்பாளர் நிலையிலுள்ள உச்ச அறமன்றம் இந்த வழக்கையும் தள்ளுபடி செய்தது. விளைவு அனிதாவின் தற்கொலை. இவ்வகையில் நாடும், நாட்டில் உயர் அறமன்றமும் சட்டத்தின் ஆட்சியைக் (Rules of Law) காப்பாற்றிவிட்டோம் என்று மார்தட்டிப் பெருமை பீற்றிக் கொள்ளலாம். என்னே உயிர் குடிக்கும் மாட்சிமை!

இந்திய ஒன்றியம் ஒரே நாடு என்று நிறுவ, 'நீட்' என்னும் கயமையின் வெளிப்பாடு என்ன! தேசிய மருத்துவக் குழு என்றொன்றிருப்பது நாட்டின் மருத்துவப் படிப்புத் திட்டம் வகுத்திடல், மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படல், மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவ மனைகள் மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் திட்டமிடப்படுவதற்கானதுதான். மருத்துவப் பட்டப் படிப்புச் சேர்க்கைக்கு நாடு முழுவதற்கும் ஓர் தேர்வு என்று சொன்னால், இதைக்கூட நடத்த இயலாத, கையாலாகாத கபோதிகளா மாநில அரசுகள்? இதற்கா கத்தான் பல ஆயிரம் கோடி செலவில் தேர்தல் நடத்தி தன் மதிப்பற்ற, தன்மானமற்ற மாநில அரசுகளை அமைத்திடவா? அதற்கெதற்கு ஒரு பொம்மை முதல மைச்சர்? எதற்குக் கையாலாகாத மாநில அரசு நிருவாகம்? இது அன்னிய வெள்ளையன் குடியேற்ற நாடாக அடிமை அரசுகளைக் காட்டிலும் கேவலமான நிலை நிலவுவதற்கென்றால் எதற்கு விடுதலை? எதற்கு நாட்டிற்குக் குடியரசு? இவையெல்லாம் கூறுவது பித்தலாட்டமல்லவா?

இந்நிலை நீடிப்பது, பெரியார் கூற்றுப்படி விடுதலை என்பது அன்னியனின் ஆட்சிப்பிடியைப் பார்ப்பனியக் கூட்டத்திடம் நாட்டையும் ஆட்சியையும் மாற்றுவதற்கு ஒப்பாகும் என்ற நிலை, 70 ஆண்டுக்காலமும் தொடர்ந்து உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு என்பதை முற்றிலுமாகச் செயலலிழக்க வைத்துவிட்டு, ஒற்றை இந்திய அரசை மட்டும் நிறுவி, அதன் கைத் தடிகளாக, கைக்கூலிகளாக, உளவாளிகளாக முற்றிலும் மாறிடும் நிலைமைக்குத்தான் நீளும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

அறமன்றத்தைப் பொறுத்தவரை பெரியார் அறுதி யிட்டுச் சொன்னவாறு அன்னியன் ஆட்சியின் பெய ரளவில் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசுகள் என்றிருந்த போதும், அதை நிருவகிக்கும் உளவாளிகளாக அமர்த் தப்பட்ட இந்திய ஆட்சிப் பணியினர் ஒருவேளை மனசாட்சியின்படி வெள்ளை ஆட்சியின் கொள்ளை பாதிக்கும்படி இந்திய மக்களுக்கு நன்மை பயக்கும் பணிகள் ஏதும் செய்து விட நேரலாம் எனக்கருதி அறமன்றத் துறைகளில் ஆங்கிலேயர்களை மட்டும் நியமித்து அறம் என்ற பெயரில் மேற்கொள்ள நற்பணி களை முடக்கி வந்தது. அதேபோன்று விடுதலை பெற்றதாகச் சொல்லப்படும் இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஆட்சி மய்யத்திலும் மாநிலங்களிலும் நிறுவப் பட்டாலும் அறமன்றத் துறைகளில் பார்ப்பனியக் கைக் கூலிகள் அமர்த்தப்பட்டு முற்றிலும் பார்ப்பனிய ஆட்சியை நிறுவிவிடுவார்கள் என்ற பெரியார் கூற்று மெய்ப்பிக் கப்பட்டுள்ளது.

நுழைவுத் தேர்வு தேவையில்லை என உச்ச அறமன்றம் 2006இல் எதன் அடிப்படையில் அறுதி யிட்டுச் சொன்னது. பின் முதலில் 2014இல் இந்திய ஒன்றிய தேசிய மருத்துவக் குழு நாடு முழுமைக்கும் மருத்துவப் பட்டப்படிப்புக்கு ஒரே நுழைவுத் தேர்வு என அறிவித்ததைத் தள்ளுபடி செய்த உச்ச அறமன்றம் எதன் அடிப்படையில் 2015இல் 'நீட்' வேண்டும் என்றும், தமிழகத்திற்கு 2016க்கு விலக்கு எனச் சொல்லியும், 2017இல் தமிழகத்திற்கும் இது கட்டாயம் என்று தீர்ப்பு அளித்ததற்கு அடிப்படை என்ன?

மாநிலங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கல்வித் திட்டத்தைக் கடைப்பிடித்து வரும்நிலையில், நாடு முழுமைக்கும் மய்ய உயர்நிலைப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே ஒரே வினாத்தாள், நுழைவுத் தேர்வுக்கு என்பது அரசமைப்புச் சட்டத்திற்கு விதி 14இன்படியான சமவாய்ப்பு, சட்டத்தின் முன் அனை வரும் சமம் என்ற அடிப்படை உரிமை மீறலை மய்ய அரசு செய்ததும், அதை ஏற்று நுழைவுத் தேர்வுச் சட்டத்தை உச்ச அறமன்றம் ஏற்றதும் முற்றிலும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது, மக்களுக்கு இழைத்த கயமைத்தனம், இதனை இன்னும் விரிவாக ஆய்வுக்குட்படுத்தி மய்ய மாநில அரசுகளுக்கெதிரா கவும், அறமன்றங்களின் அறமற்ற செயல்களுக்கெதிரா கவும் களம் காண்போம். 'நீட்'டை ஒழிப்போம்.

# மா.பெ.பொ.க. மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி முடிவு செய்தனுப்பிய, 3.7.2018 நாளிட்ட அறிக்கையின் அடிப் படையில் முதல் கட்டமாகச் சில மாவட்டங்களில் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் 2018, சூலையில் நடந்தன.

**காஞ்சி**

8.7.2018 காலை 11 மணிக்கு காஞ்சி நகரச் செயலர் மு. செயப்பிரகாசு அவர்களின் வீட்டில் நடை பெற்றது. மாவட்டச் செயலர் சி.நடராசன் தலைமையிலும், கட்சியின் தலைமை யிடத்தின் சார்பாகச் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவில் உள்ள க. முகிலன் மற்றும் துணைப் பொதுச் செயலர் சி. பெரியசாமி முன்னிலையிலும் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

சி.நடராசன், ப.பஞ்சாட்சரம், இ.இராஜேஷ் கண்ணா, மா. கோதண்டபாணி, இரா. இராசசேகர், ச. சம்பந்த சிவக்குமார், குறள் அமிழ்தன் மற்றும் அவரது மகள்கள் மீ.சோ. இளவேனில், மீ.சோ. கனிமொழி, சு. நக்கீரன், மு. செயப்பிரகாசு, இரா. நாராயணமூர்த்தி, ந. சீதாராமன், கா. பொன்னப்பன் கலந்துகொண்டு கருத்துகளை வழங்கினர்.

ஒவ்வொரு மாதமும் மாதக்கூட்டம் நடத்துவது என்றும், மறுநாள் ஒரு புதிய ஊருக்குப் பயணித்து, புதிய உறுப்பி னர்களைச் சேர்க்கும் நோக்குடன், தீவிரமாகச் செயல்படுவது என்றும் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்டது.

**திருவண்ணாமலை**

22.7.2018 அன்று கீழ்பெண்ணாத்தூரில் கலந்துரை யாடல் கூட்டம் மாவட்டச் செயலர் பொ. சுப்பிரமணி தலை மையில் நடைபெற்றது.

கட்சியின் தலைமையிடத்தின் சார்பாக சி. பெரியசாமி, துணைப் பொதுச் செயலர் கலந்து கொண்டார்.

தீத்தாண்டப்பட்டு மா. முருகேசன், க. ஆதிமூலம், கோ. கோதண்டராமன், கு. இராமசாமி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினர்.

கட்சியின் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங் களைத் தவறாமல் நடத்துவது என்றும், கூட்டத்திற்கு அடுத்த நாள் களப்பணியாக ஒரு வெளி ஊருக்குக் குழுவாகச் சென்று கட்சிக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது என்றும்,

கட்சிக்கு உறுப்பினர் வரியாகக் குறைந்தது 100/- ரூபாய் அளிப்பது என்றும், இதில் கால் பங்கைக் கட்சியின் தலைமையிடத்திற்கு அளிப்பது என்றும் தீர் மானிக்கப்பட்டது.

**வேலூர்**

கலந்துரையாடல் கூட்டம் 21.7.2018 காலை 10 மணிக்கு வேலூர் சத்துவாச்சேரி ஆர்.ஜே. ரெசிடென்சி விடுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு வேலூர் மாவட்டச் செயலர் மோ.சி. சங்கர் தலைமை ஏற்றார். கட்சித் தலைமை இடத்தில் இருந்து துணைப் பொதுச் செயலர் சி. பெரியசாமி மற்றும் மேல்மட்டக்குழு உறுப்பினர் இரா. பச்சமலை முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மோ.சி.சங்கர், மு.சுகுமார், சா.குப்பன், மு. சுவாமிநாதன், பொ. காளியப்பன், மீ. தில்லிபாபு, கி. இராமச்சந்திரன், மீ.கு. நாகலிங்கம், து. அரங்க நாதன், மா. தசரதன், லோ. இரத்தினக்குமார் மற்றும் ஆதரவாளர் சீ. கர்ணன் கலந்துகொண்டு சிறப்பாகக் கருத்துகளை வழங்கினர்.

மாதாமாதம் மாவட்டப் பொதுக்குழுக் கூட்டத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் நடத்துவது என்றும், அடுத்த நாள் களப்பணியாகக் கட்சிக்குப் புதிய உறுப்பினர் சேர்க்கும் நோக்கில் வெளி ஊர்களுக்குச் செல்வது என்றும்,

கட்சி உறுப்பினர்கள் மாதந்தோறும் கட்சி வரியாக ரூ.100/-க்குக் குறையாமல் கொடுப்பது என்றும், இதில் கால் பங்கைக் கட்சித் தலைமைக்கு அளிப்பது என்றும் தீர்மானிக் கப்பட்டது.



திரு. சீ. கர்ணன், சிந்தனையாளன் புரவலர் நிதியாக ரூ.5,000/-ம், வளர்ச்சி நிதியாக ரூ.5,000/-ம் கொடுத்து மகிழ்ந்து, மகிழ்வித்தார்.

செய்தி : **சி. பெரியசாமி**

## பாலாபுரம் சி.கணேசன் குடும்பத்தினர் வழங்கிய வளர்ச்சி நிதி

திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை ஒன்றியத்தில் ஆந்திராவின் எல்லையையொட்டியுள்ள ஒரு சிற்றூர் பாலாபுரம். பாலாபுரத்தைச் சேர்ந்த சி.கணேசன் ஓய்வு பெற்ற ஆசிரியர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர். இவர் தனித்தமிழ் பற்றும் பெரியார் கொள்கைகளில் ஈடுபாடும் மிக்கவர்.

இவருடைய பெண் மக்கள் க.அமுதுவல்லி-ச.நெடுமாறன், க.அனிச்சம்-வெ.தாமோதரன், க.நெய்தலி-வெ.கோபால், க.முத்துநகை-கோ.மோகன் மற்றும் மகன் க.அதியமான் ஆகியோர் ஒவ்வொரு வரும் ரூ.1000 என ரூ.5000 சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக அளித்தனர். சி.கணேசன்-இராணி இணையரின் மூத்த மகள் அமுதுவல்லி-நெடுமாறன் ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு வே.ஆனை முத்து தலைமையில் நடைபெற்றது.

**கட்டுரைத் தொடர்-60**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



பெரியார் எச்சரித்தவாது சுதந்தரம் என்பதன் பேரால் வடநாட்டு ஆதிக்கம் தமிழகத்தின் மீது திணிக்கப்பட்டது. 1948இல் ஓமந்தூரார் ஆட்சியில் மீண்டும் பள்ளிகளில் இந்தி திணிக்கப்பட்டது. திராவிடர் கழகம் முன்னின்று அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டி போர்க்களம் கண்டது. அது தொடர்பான குடி அரசு இதழின் தலையங்கம்.

### களம் நோக்கி வருக! வருக!!

திராவிடர் கழக மத்திய கமிட்டி இந்த மாதம் 2ஆம் தேதி தலைவர் வேதாசலம் அவர்கள் தலைமையில் சென்னையில் கூடி, இந்தி எதிர்ப்பின் நடவடிக்கைகளை எப்படி எப்படிச் செய்வது என்று செய்திருக்கும் முடிவை நாம் மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

அவைகளுள் பொதுக்கூட்டம் நடத்திப் பிரச்சாரம் செய்தல், வெவ்வேறு முனைகளிலிருந்து இந்தி எதிர்ப்புப் படை புறப்பட்டு, கால்நடையாகவே ஒவ்வொரு ஊரிலும் தங்கிப் பிரச்சாரம் செய்து கொண்டே குறிப்பிட்ட களத்திற்கு வந்து சேருதல், மந்திரிகளைக் காணும் போது பொதுமக்கள் தங்களுடைய வெறுப்பைக் காட்டிக் கொள்வதற்காகக் கருப்புக்கொடி பிடித்தல் ஆகிய மூன்றோடு, குறிப்பிடுகின்ற பள்ளிக் கூடத்தின் முன்பு, இந்தியைப் படியாதீர்கள் என்று மாணவர்களை வேண்டிக் கொண்டு, மறியல் ஆரம்பிப்பது, அதற்கு முதல் சர்வாதிகாரி தோழர் சி.என். அண்ணாதுரை யவர்கள் எம்.ஏ., ஆரம்பிக்கும் நாள் ஆகஸ்டு 10, என்கிற முடிவைக் கேட்டு, எப்போது ஆரம்பம்? எப்போது ஆரம்பம்? என்று ஏக்கத்துடன் காத்துக் கொண்டிருந்த இளங்காளைகள் எல்லாம் தொடை தட்டியிருப்பார்கள். எங்களுடைய உணர்ச்சியையெல்லாம் இப்படியே எத்தனை நாளைக்கு அடக்கி வைத்துக் கொண்டிருப் பீர்கள்? பார்ப்பன அடிமைகளின் பயத்தினால் நம் முடைய உரிமைகள் எல்லாம் நாளுக்குநாள் பறிக்கப் பட்டு வருகிறதே! இந்த நிலைமையிலும் கூடவா அடக்குமுறைக்கெல்லாம் நாம் அடங்க வேண்டும் என்கிற இதோபதேசம்? என்று வாய் விட்டுச் சொல்லியும், சொல்லாமலும் கொதிப்படைந்து குமுறிய வீரர்கள் எல்லாம் இந்த முடிவைக் கேட்டுப் பெரும் எக்களிப்புக் கொண்டிருப்பார்கள். திராவிட உணர்ச்சியுடைய ஒவ்வொரு ஆணும், பெண்ணுமே இந்த முடிவையறிந்தவுடன், ஒரு புழுக்கமான அறையிலிருந்து தூயகாற்று வீசும் படியான வெளியிடத்திற்கு வந்ததைப் போன்ற உணர்ச்சி பெற்று, இனி இறந்தொழிந்தாலும் கவலையில்லை, எப்படியும் இலட்சியத்தை நிறைவேற்றுவோம் என்கிற உணர்வோங்கி நிற்பார்கள் என்பது உறுதி.

இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு, முதல் முதல் நான் பலியாகத் தயார் என்று முன்வந்து, முதல் சர்வாதிகாரி ஸ்தானத்தைப் பெற்றிருக்கும் தோழர் அண்ணாத்துரையவர்களை நாம் பெருமகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம்.

இப்போதைய இந்தி எதிர்ப்பின் அடிப்படை எது என்பதைத் தலைவர் பெரியாரவர்கள் பலமுறை விளக்கி வந்திருந்தாலும், இந்த மாதம் நாலாம் நாள் விடுதலையில் வெளிவந்த அறிக்கையில் திட்டவட்ட மாக விளக்கியிருக்கிறார்கள்.

''இந்தி எதிர்ப்பு வெறும் மொழிப் பிரச்சனை என்பது மாத்திரமல்லாமல் அன்னிய இனப்போராட்டம், அன்னிய கலாச்சாரப் போராட்டம், அன்னிய ஆட்சிப் போராட்டம் முதலிய பல தத்துவங்களைக் கொண்டதாகும்'' என்கிற இந்த விளக்கத்தைக் காங்கிரஸ் திராவிடத் தோழர்களும், பார்ப்பனிய ஆதிக்க மந்திரிசபையும் நல்ல முறையில் விளங்கிக் கொள்ள வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். இந்தி நுழைப்பினுடைய அடிப்படை இந்த நோக்கத்தோடு தான் அமைந்தது என்பதை, 10 வருஷங்களுக்கு முன்பே இன்றைய கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியாரவர்கள் 'இந்தியும் சமஸ்கிருதமும் ஒன்றுதான்' என்று கூறி யிருக்கிறார். அதாவது சமஸ்கிருதத்திற்குப் பதிலாகவே இந்தியைக் கொண்டு வந்தேன் என்று கூறியிருக் கிறார். இப்போது இந்த முறையும் எதிர்ப்பு ஏற்பட்ட பிறகு அந்த எதிர்ப்புக்குச் சவாலாக மயிலையும் மாம்பலமும் கூடிக்கொண்டு, ''சமஸ்கிருதத்தை அகில இந்திய இயக்கமாகக் கொண்டுவரவேண்டும்'' என்று கொக்கரித் திருக்கிறது. மதுரையிலே ஒரு பார்ப்பனர், ''இந்தி எதிர்ப்பை நாம் லட்சியப்படுத்த வேண்டாம்; 2ஆவது மொழியில் இந்தியை மட்டுமே சர்க்கார் பாடத் திட்ட மாக வைக்க வேண்டும்; அந்த ஒன்றையே இந்த நாட்டவர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டும்; அதற்கு நாம் இப்போதே உடனடியாக ஒரு இயக்கம் தொடங்க வேண்டும்'' என்று அபூர்வமான யோசனையை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தி இஷ்ட பாடமாக

வோ, கட்டாயப் பாடமாகவோ எந்த ரூபத்தில் இந்த நாட்டில் புகுத்தப்பட்டாலும், அது சமஸ்கிருத மொழியைப் புகுத்துவதாகவும், சமஸ்கிருத கலாச்சாரத்தைப் புகுத்தி வற்புறுத்துவதாகவும், சமஸ்கிருத இனத்தின் நிரந்தர ஆட்சிக்கு அடிகோலுவதாகவுமே இருக்க முடியும். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல், எதிர்ப்பில் ஈடுபடுவோரின் இலட்சியம், மொழிப் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டது என்று எண்ணும் அவசர வாதிகளையும், ஆழமறியாதோர்களையும் இந்த விளக்கம் கண்களைத் திறக்க வைக்கும் என்றும் நாம் நம்புகிறோம்.

இப்போராட்டம், இந்தப் போராட்டத்திலேயே வெற்றி தோல்வி கண்டு விடவேண்டுமென்கிற முடிவோடு அல்லாமல், எத்தனை போராட்டங்களை நடத்தியாயினும், எந்த வகையான அன்னிய ஆதிக்கத்திலிருந்தும் திராவிடம் விடுபட்டே தீரவேண்டும் என்னும் தெளிந்த முடிவோடு தொடங்கப்பட்டதாகும் என்கிற தலைவரின் போர் விளக்கத்தையறிந்த, பார்ப்பனியமும் - பனியாக் கூட்டமும் பதைபதைக்கும் என்பதும், பதை பதைப்பால் அறிவொளியும் கண்ணொளியும் மழுங்கி, அகங்கார உச்சியில் ஏறி, ஆணவத் திமிர் குலுக்கப் பெரும் ஆட்டம் காண்பிக்கவே செய்வார்கள் என்பதும் உறுதி.

இந்த ஆட்டத்தினுடைய முடிவாக, பலர் அடிபட்டு, கால் கை முறிந்து கீழே வீழ்த்தப்பட்டுப், பலர் சாக வேண்டிய நிலையும் வந்து சேரவே நேரும். இப்படிப் பலர் பலியாவார்களேயானால் அதனுடைய பின் விளைவு எப்படியிருக்கும்? கதைகளிலும், சித்திரங்களிலும் குறிப்பிடக்கூட முடியாதபடி இந்த நாட்டு ஆரியம் ஒழிவதற்கு, ஓடுவதற்கு ஆகாய வழியாகப் போடப்பட்ட பாதை என்று படைத்தலைவர் விளக்கியிருப்பதை குறிப்பாகப் பார்ப்பனியம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறவும் நாம் ஆசைப்படுகிறோம்.

முந்திய இந்தி எதிர்ப்புப் போருக்கும் இப்போதைய இந்தி எதிர்ப்புப் போருக்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது. இப்போது இந்தியை எதிர்க்கும் நாம் பெரும் அளவில் ஆள்பலத்தையும் பொருள் பலத்தையும் பெற்றிருந்தாலும், இப்போராட்டம் நடைபெறவேண்டியதற்கு அவசியமும், நியாயமான காரணமும் இருந்தாலும், நம்முடைய லட்சியம் நிறைவேறவேண்டுமானால் போராட்டக் காலத்தில், போராடுங்களத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பொறுத்துத்தான், நம்முடைய இந்தப் போராட்டத்தின் வெற்றியும் தோல்வியும் அமையும் என்பதைப் போராட்டத்தில் கலந்துகொள்ள ஆசைப்பட்டு துடிதுடிப்பாய் விளங்கும் தோழர்களுக்கும், தோழியர்களுக்கும் நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

பய உணர்ச்சியே, பேய் ஆட்சியாக மாறுகிறதென்றால் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்ப்பனருக்குப் பயப்படும் பய உணர்ச்சியே, நம் மந்திரிகளை பேய் ஆட்சி செலுத்தச் செய்யும் என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. இந்தப் பேய் ஆட்சியைக் கதறக்கதற அடித்துத் துரத்த வேண்டுமானால், எதிர்ப்பில் ஈடுபடும் தொண்டர்கள், ஆட்சியாளர்களுடைய எந்தக் கொடுமைக்கும் கலங்கிவிடாத உள்ள உறுதியும், எத்தகைய அக்கிரமச் செயலையும் தாங்கிக் கொள்ளும் உள்ளப் பொறுமையும், எந்தெந்த நேரத்தில் தனக்கு யார் யார் தலைவர் ஆகிறாரோ அத்தலைவருக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்கும் கடமையுணர்வும் நிரம்பப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். போர் வீரர்களின் ஒழுங்குமுறை பற்றிப் படைத்தலைவர் கூறியிருக்கும் கருத்துக்களை நாம் மற்றொரு பக்கத் தில் தந்திருக்கிறோம். அதைக் கருத்தூன்றிப் படித்து அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படும் தொண்டர்கள் மட்டுமே இந்த நடவடிக்கையில் கலந்துகொள்ள வேண்டும் என்பதை மிக மிக வற்புறுத்திக் கூறுகிறோம்.

"இந்த மாதிரியான எதிர்ப்பு நடவடிக்கை, எப்படியோ நடந்தேயாக வேண்டும் என்று பார்ப்பனியம் ஆசைப்பட்டுவிட்டது. அதன் ஆசைப்படியே நீங்களும் (திராவிடர்களும்) போர்ப்பரணி கொட்டிவிட்டீர்கள்! ஆனால் என்னுடைய தலைமையில், என்னுடைய ஆட்சியில், என் இனத்தவரை நானே அடிக்கச் செய்தேன்; சாகச் செய்தேன் என்கிற பெரும்பழி என்மீது ஏற்படாதிருக்க வழியில்லையா? அதாவது இந்த எதிர்ப்பு நடைபெறாதிருக்க ஒரு மார்க்கமில்லையா?" என்று நம்முடைய பிரதமர் ரெட்டியார் அவர்கள் இப்போது எண்ணுவார்களேயானால், நாம் ஆச்சரியப்பட மாட்டோம். போர் நடந்துதான் வெற்றிகாண வேண்டுமா? என்பதை முடிவுகட்டும் பொறுப்பு எப்படியும் இப்போது பிரதமர் கைவசத்தில் தான் இருக்கிறது என்பதை நாம் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

இந்த நாட்டு மக்களின் மான உணர்ச்சியை யழித்து மிதிப்பதற்காகவே, பார்ப்பனர்கள் சிலர் உசுப்பி விட்ட பிறகு, கல்வி மந்திரியார் அவர்களுடைய மிரட்டலுக்கு அஞ்சி, இந்த இந்தி நுழைப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்கிற உண்மையைப் பிரதமர் உணர்வாரானால் என்ன செய்ய வேண்டும்?

"நான் கல்வி மந்திரியாக ஆவதற்கு இடங்கொடுக்காவிட்டால் கடலில் விழுந்து இறப்பேன்" என்று பய முறுத்தும் தோழர் அவினாசியாரின் பயமுறுத்தலுக்குப் பயப்படுவதை விட்டுவிட வேண்டும். வம்பை விலைக்கு வாங்கும் குறும்புப் போக்கால் விளையும் கேடுகளை நான் அனுமதிக்கமாட்டேன் என்பதை வற்புறுத்தி, முதலில் அவரை கல்வி மந்திரிப் பதவி

யிலிருந்து இறக்கி விட்டுவிட வேண்டும். அந்த இலாகா வைத்தான் ஏற்றோ அல்லது பிறரிடம் கொடுத்தோ, உடனே இந்த இந்தி நுழைப்பு உத்திரவை மாற்றிவிட ஏற்பாடு செய்ய வேண்டும், இந்த ஒரு முறைதான் எந்த ஜனநாயக ஆட்சியிலும் கையாளப்படுமுறை என்பதையுணர்ந்தால் இதைத் தவிர வேறு என்ன வழி என்று கேட்கிறோம்.

"நாளுக்கொரு உத்திரவாகப் போடுவதற்குத்தான் நான் சளைக்கவில்லையே, இந்த உத்திரவை மாற்ற வேண்டும் என்றால் நான் அதற்குத் தயார்" என்று கல்வியமைச்சர் காட்டிக் கொள்வாரானால், அதைப் பிரதமரும் விரும்புவாரானால், ஒன்று அப்படியாவது செய்வதைத் தவிர வேறு என்ன வழி? என்று கேட்கிறோம்.

இந்த இரண்டில் ஒரு வழியைத் தவிர வேறு எந்த வழியாலும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாகக் கூட நிறுத்தப்படமாட்டாதென்பதையும், மானமுள்ள ஒரு திராவிடன் நாட்டில் நடமாடும் நிலைமை உள்ள வரையிலும், இவ்வெதிர்ப்பும் நடந்தே தீரும் என்பதையும் நாம் அவருக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறோம்.

தான் பிரதமராயிருந்து கொண்டு இதை நடப்பதற்கு எப்படி அனுமதிப்பது? இந்த உத்திரவைத் தான் எப்படி மாற்றுவது? என்று மயங்குவாரேயானால், உடனே பிரதமர் பொறுப்பை வேறு பார்ப்பனர்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறி விடுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்க முடியும்?

இந்த வழியையும் பிரதமர் மேற்கொள்ளத் தவறுவாரேயானால், அது அவருக்குப் பெரும் பழியாக- அதாவது அவர் மறைந்து போனாலும் அந்தப் பழி என்றைக்குமே மறைக்கப்பட முடியாத அளவுக்குப் பெரும் பழியாக, உலகம் உள்ளவரையும் நிலைத்து நிற்கும் என்பது அவர் அறியாததல்ல. இந்தக் கடைசி நேரத்தில் அவர் எப்படி நடந்துகொள்ளப் போகிறாரோ? அவரைப் பார்ப்பனியம் எப்படி ஆட்டிவைக்கப் போகிறதோ? யார் கண்டது?

ஆர்வமும் ஆதரவும் அகமும் புறமும் விளங்க, போரொலி கேட்டு, தொடை தட்டி, தோள் உயர்த்தும் தோழர்களே! மறவர்குல மாணிக்கங்களே! தாய் மொழியையழித்துவிட, அதனால் தமிழினத்தை நசுக்கிவிடச் செய்யப்படும் சாகச வேலைகள் எங்களிடமா பலிக்கும்; வாட்போருக்குப் பின்வாங்காத மறக்குடி மகளிரான நாங்களா இந்த அறப்போருக்குப் பின்வாங்குவோம் என்று முழங்கிய தாய்மார்களே! இதோ சர்வாதிகாரியின் தாக்கீது பிறந்துவிட்டது! ஆரம்பமாகிவிட்டது அறப்போர்! களம் நோக்கி அடுத்தடுத்து வருக! வருக!! கட்டாயம் நாமே வாகை சூடுவோம்!

இந்தத் தாக்கீது எங்களுக்கில்லையா? எப்போது நாங்கள் புறப்பட வேண்டும்? என்கின்றனர் சென்னைக்கு - வெளியூர்த் தோழர்கள். பொறுங்கள்! பொறுங்கள்!! படைத் தலைவரின் ஆணைக்கு அடங்கி அழைப்புக்குக் காத்து நில்லுங்கள்! இதோ அழைப்பு எழுதப்படுகிறது! விரைவில் உங்கள் கைக்குக் கிடைக்கும்! புறப்படத் தயார்படுத்துங்கள்; புறப்படுங்கள்!

**- "குடிஅரசு" 7.8.1948**

**- தொடரும்**


**படியுங்கள்... பரப்புங்கள்...**

# சிந்தனையாளன்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் திங்களிதழ்

**ஆண்டுக் கட்டணம் ரூ.180/-**

ஆசிரியர் வே. ஆனைமுத்து
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை-600 050.

அலைபேசி : 94448 04980
தொலைப்பேசி : 044-2625 2119
மின்னஞ்சல் :
Sinthanaiyalantamilmonthly@gmail.com

*****

# நிமிர்வோம்

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்

ஆண்டுக் கட்டணம் ரூ.240/-

தொடர்புக்கு : இரா. உமாபதி 72992 30363
95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைப்பேசி : 044-24980745

*****

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

**ஆண்டுக் கட்டணம் ரூ.200/-**

தொடர்புக்கு : விடுதலை க. இராசேந்திரன்
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
அலைபேசி : 98414 89896
periyarmuzhakkam@gmail.com

# வீரத் தமிழன்னை டாக்டர் எஸ்.தருமாம்பாள்

மரு.க.சோமாஸ்கந்தன்

**பொதுவாழ்வில் பெண்கள்:**

பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். பொருளாசை இல்லாதவர்களா கவும், கொள்கைப் பிடிப்புள்ளவர்களாகவும், புகழாசை அற்றவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் பொது நலத்தொண்டர்கள் மனித நேயம் மிக்கவர் களாகவும், எளிய வாழ்க்கை வாழ்பவராகவும் இருத்தல் வேண்டும். புகழ் பெற எதையும் செய்யத் துணியும் எவரும் நேர்மையானவர்களாக இருக்க இயலாது.



பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடத் தயங்கிய அந்த நாள்களில் டாக்டர். தருமாம்பாள், மேலே சுட்டிய இலக்கணங்களுக்கு இலக்கியமாகத் திகழ்ந்து பொது நலத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தஞ்சை மாவட்டம் கருந்தட்டாங்குடியில் வாழ்ந்த சாமிநாதன் செட்டியார், பாப்பம்மாள் என்ற நாச்சியார் அம்மையார் இணையருக்கு தருமாம்பாள் 1890 ஆம் ஆண்டு திருவையாறில் பிறந்தார். இவருக்கு அவரது பெற் றோரிட்ட பெயர் சரஸ்வதி.பின்னாளில் அவரது பெயர் தருமாம்பாள் என்றழைக்கப்பட்டது.

அவரது தந்தை சாமிநாதன் துணி வியாபாரம் செய்துபுகழுடன் சிறப்பாக வாழ்ந்தவர்.அவரின் நண்பர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த உமாமகேஸ்வரன் பிள்ளை ஆவார்..

குழந்தைப் பருவத்திலேயே, தருமாம்பாள் தன் பெற்றோரை இழந்துவிட்டார்.இவரை இலக்குமி என்ற பெண்மணி தான் வளர்த்து வந்தார். இளம் பருவத்தில் பெற்றோரை இழந்துவிட்டதால், அவருக்குப் பள்ளிக் கல்வி எட்டாக்கனியாயிற்று, என்றபோதிலும் கல்வி கற்கவேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் மிகவும் கொண்டிருந்தார். ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலும் அவரிடம் மிகுந்திருந்தது.ஆதலால் அவர் கல்வி கற்க மிகுந்த ஆர்வத்துடன், வேட்கை சீவகாருண்யம் சுப்ரமணியனார், மணி திருநாவுக்கரசு ஆகியோரிடம் சென்று தமிழ் கற்றார். பண்டித நாராயணி அம்மையாரிடத்தில் தெலுங்கு மொழியைப் பயின்றார், ஆங்கிலம், மலையாள மொழிகளில் ஓரளவிற்குத் தேர்ச்சி பெற்றார்.

அவர் சிறுவயது முதற்கொன்டே கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.சிறப்பாக நாடகக் கலை மீது பற்று மிகக் கொண்டிருந்தார்.அக்காலத்தில் நாடகங்களில் நாயகன் பாத்திரங்களில் நடித்துப் புகழ் பெற்ற நடிகராக விளங்கியவர் குடியேற்றம் முனிசாமி நாயுடு.அவர் தருமாம்பாள் அம்மையாரின் உள்ளம் கவர்ந்த கள்வராக விளங்கினார்.இருவர் மனமும் ஒன்றியதின் விளைவாக, சாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொண்டனர். திரு மணத்திற்குப் பின்னர் சிறிதுகாலம் நாகப்பட்டினத்தில் தன் காதல் கணவருடன் வாழ்ந்தார். பின்னர் சென்னைக்குக் குடிபெயர்ந்து எண் 330. தங்கச்சாலையில் வாழ ஆரம்பித்தார்..

**சித்த மருத்துவர்**

மக்கள் தொண்டு புரிதற்கு மருத்துவத் தொழிலே சிறந்தது என்று உணர்ந்து சித்த மருத்துவம் கற்க ஆர்வங்கொண்டு தானே முயன்று கற்றும், பயிற்சிகள் மேற்கொண்டும் நல்ல சித்தமருத்துவராக விளங்கி சிறந்த முறையில் சேவை புரிந்தார். அவர் சித்தமருத்துவராகப் பணியாற்றத் தொடங்கிய 1930 ஆம் ஆண்டில் அலோபதி மருத்துவர்கள் (மேனாட்டு மருத்துவம் பயின்றவர்கள்) அருகியே காணப்பட்டனர். சென்னை மக்களின் பிணி நீக்கும் பணியில் சித்தமருத்துவர்கள் சிறப்பாகச் சேவை புரிந்து வந்துள்ளனர்.

பெரும் பகுதி மக்கள் சித்தமருத்துவர்களையே தேடி நாடி வந்தனர்.வேப்பேரியில் கங்காதரத் தேவர், சூளையில் முருகேச முதலியார், சித.ஆறுமுகம் பிள்ளை, தியாகராய நகரில் பண்டித எஸ்.எஸ். ஆனந்தம் (இவரது குமாரர். ஆனந்தகுமார் இக்கட்டுரையாளருடன் பயின்றவர்) சைதாப்பேட்டையில் தணிகாசல மருத்துவர் ஆகியோர் புகழ் மேவிய மருத்துவர்களாக விளங்கினர். அந்த வரிசையில் தங்கச் சாலையில் புகழ்பெற்ற மருத்துவராக இருந்தவர் டாக்டர் தருமாம்பாள். பெருஞ்செல்வம் ஈட்டும் தொழிலாக மருத்துவத் தொழிலைக் கருதாமல் ஏழை மக்களின் துயர் போக்கும் சேவையாகவே தனது மருத்துவத் தொழிலை அன்னை தருமாம்பாள் தங்கச் சாலையில் செய்து வந்தார்கள். மருத்துவச் சேவைதான் டாக்டர் தருமாம்பாளுக்கு மக்கள் தொடர்பை அதிக அளவு ஏற்படுத்திக் கொடுத்தது.

சித்தமருத்துவர்களது சிறப்புமிக்க சேவையைக் கண்ட நீதிக்கட்சித் தலைவர்கள், தங்கள் ஆட்சியின் போது நம் நாட்டு மருத்துவப் பிரிவுகள்-(சித்த மருத்துவம், ஆயுர் வைத்தியம், யுனானி மருத்துவம்-) செழித்திட இந்திய மருத்துவப் பள்ளியினை 1925-1926 இல் எக்மோர்

பாந்தியன் சாலையில் அன்றைய சென்னை மாநில முதல்வர் மேதகு பனகல் அரசர் தோற்றுவித்தார். 330 தங்கச்சாலை டாக்டர் தருமாம்பாளின் நிரந்தர முகவரி யாயிற்று. அந்த முகவரியில்தான் அம்மையாரின் வாழ்வில் பல அரிய வரலாற்று நிகழ்வுகள் நடை பெற்றன. அந்த முகவரியிலிருந்து தான் டாக்டர் தருமாம்பாள், சமூக அக்கறையுடன் தன் மருத்துவப் பணியைத் தொடர்ந்தார். அவரது கனிவான சேவையில் மகிழ்ந்தமக்கள், தங்களின் வாழ்வியல் இடர்ப்பாடு களுக்கும் அவரிடம் ஆலோசனைகள் பெற்றனர்; நலம் உற்றனர், பெண்களை அடிமைகளாக நடத்திய சமூகத்தில், ''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டின் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயல் கொம்பே'' என்று பெண்ணடிமை நீங்க அயராது பாடுபட்டவர். பெண் விடுதலைக்குக் கல்வி அவசியம் என்பதை உணர்ந்த டாக்டர் தருமாம்பாள், பல பெண்களுக்குக் கல்வி கற்பதற்கும், கல்லூரிகளில் சேர்ந்திடவும், வேலை வாய்ப்பினைப் பெறுதற்கும் உறுதுணையாக இருந்து அப்பெண்கள் வாழ்வினைச் சிறக்கச் செய்துள்ளார். தமிழ் மாதர் கழகத்தைத் தோற்றுவித்து பெண்கள் முன்னேற் றத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். தமிழ் மாதர் கழகத்தின் தலைவராக, பண்டிதர் நாராயணி அம்மை யாரும், செயலாளராக டாக்டர் தருமாம்பாளும் பொறுப் பேற்றுக் கொண்டு பெண்கல்வியைச் செழிக்கச் செய்தனர். கல்வி அறிவின்றி அறியாமையில் மூழ்கிக் கிடந்த பெண்களிடையே மண்டிக்கிடந்த மூடப்பழக் கங்களை எடுத்துக்கூறி அவர்களிடையே பகுத்தறிவுப் பிரச்சாரமும் செய்தார், பல இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்வித்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்தார். சாதி ஒழிப்பைக் கருத்தில் கொண்டு பல இளையோர்க்குக் கலப்புத் திருமணம் செய்வித்தார். இதன் மூலம் மருத்துவர் தருமாம்பாள் ஒரு சமூகப் போராளியாகவும் திகழ்ந்தார்.

**தேவதாசி ஒழிப்பு**

இந்து மதத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்த பெண்களைப் பொட்டுக்கட்டிக் கோயில்களில் நேர்ந்து விட்டுவிடுவார்கள். அப்பெண்கள் கல்வி, இசை, நாட்டியம் போன்ற கலைகளைக் கற்றுணர்ந்து கோயில்களில் சேவை புரிதல் வேண்டும் என்பது சனாதன இந்துமத முடிவாக இருந்துவந்துள்ளது. அவர்கள் மற்ற பெண்கள் போல் திருமணம் செய்துகொண்டு வாழ்கையின் இனியப் பக்கங்களை அனுபவிக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனாலும் இவர்களைச் செல்வச்சீமான்களும், கோயில் அர்ச்சகர்களும் மதத்தின் பெயராலும் கடவுள் பேராலும் ஆண்டு அனுபவிக்கின்ற கொடுமைகள் நடைபெற்றே வந்துள்ளன. கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்தே இத்தகைய கொடுமைகள் மதத்தின்பேரால் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. இந்த அக்கிரமத்தை, அநியாயத்தை எதிர்த்துப் போராடிட எவரும் முன்வரவில்லை-இந்தத் தேவதாசி முறை ஆண்டவன் அனுக்கிரகம் பெற்றது என்பதாலும், சாஸ்திர சம்மதமானது என்பதாலும் இக்கொடுமையை எதிர்க்க அந்நாளில் எவரும் முன் வரவில்லை போலும். இந்நிலையில் தந்தை பெரியார் தேவதாசி முறையை எதிர்த்துக் களமிறங்கினார். அதேநேரத்தில், சட்டமன்றத்தின் முதல்பெண் உறுப்பி னர் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி 1927 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5 ஆம் நாள் தேவதாசி முறையை ஒழிக்கச் சட்டமுன் வரைவு ஒன்றினைச் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். அதனை எதிர்த்துக் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியும் அவரைச் சார்ந்தவர்களும் குரல் கொடுத்தனர். சட்டமன்றத்துக் குள்ளே டாக்டர் முத்துலட்சுமி தேவதாசி முறையை எதிர்த்துப் போராடிய போது, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார், திருவிக, பெரியார் ஆகியவர்களுடன் டாக்டர் தருமாம்பாள் அவர்கள் போர்க்களம் நோக்கிச் செல்லும் வீராங்கனையைப் போல் புறப்பட்டார்கள். அப்போதுதான் டாக்டர் தருமாம்பாள் அம்மையாருக்குச் சென்னையில் மக்களிடமிருந்த செல்வாக்கு எத்தகையது என்பதை உணரமுடிந்தது. முத்துலட்சுமி ரெட்டியின் அந்த மசோதாவிற்கு அவர்கள் ஆதரவு தேடி வீடுவீடாக ஏறி இறங்கினார்கள். மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்த சத்தியமூர்த்தியின் அணியைச் சார்ந்த பெரிய மனிதர்கள் இல்லங்களிலும் அவரின் குரல் ஒலித்திருக்கிறது, டாக்டர் தருமாம்பாள் எடுத்த முயற்சிகளின் பயனாய், டாக்டர் முத்துலட்சுமி யின் மசோதாவிற்குப் பொதுமக்களின் ஆதரவு பல்கிப்பெருகியது. சட்டமன்றத்திலும் முத்துலட்சுமிக்கு ஆதரவுப் பெருகியது; மசோதா வெற்றிகரமாக நிறை வேறியது.

**பெண்கள் மாநாடு:-**

தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு 13-11-1938 அன்று சென்னை ஒற்றைவாடை நாடக அரங்கில் நடைபெற்றது. இம்மாநாடு திராவிட இயக்க வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற மாநாடாகும்.

**அன்னை தருமாம்பாள், மலர்முகத்தம்மையார், மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் ஆகியோர் மாநாட்டு அமைப்பாளர்கள். மாநாட்டு அலுவலகம் அன்னை தருமாம்பாள் இல்லத்தில் செயல்பட்டது.**

தமிழ் நாட்டுப் பள்ளிகளில் முதல்வர் இராஜாஜியால் இந்திமொழி, கட்டாயமாகத் திணிக்கப்பட்ட சூழ்நிலையில் இம்மாநாடு நடைபெற்றது. இரண்டாயிரத்துக்கும் மேற் பட்ட பெண்கள் மாநாட்டு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தமிழ்க் கொடியை அன்னை மீனாம்பாள் சிவராஜ் ஏற்றினார். மறைமலை அடிகளாரின் மகள்

திருவரங்க நீலாம்பிகை அம்மையார் மாநாட்டுத் தலைவர். மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அதில், திராவிடர் கழகத்தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போது, இனிமேல் ''பெரியார்'', என்றே வழங்க வேண்டும் என்ற தீர்மானம், மிகவும் முக்கிய மானதாகும். அந்தத் தீர்மானம்:

இந்தியாவில் இதுவரையும் தோன்றின சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய இயலாமற்போன வேலைகளை, இன்று நமது தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவரும் இல்லா மையாலும் அவர் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் ''பெரியார்'' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம்மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது. இந்தத் தீர்மா னத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியதில் பெரும் பங்கு ஆற்றியவர் அந்த மாநாட்டின் அமைப்பாளராக இருந்த அன்னை தருமாம்பாள் ஆவார்..

**இந்தி எதிர்ப்புப் போரின் முதல் வீராங்கனை:-**

1938 இல் முதலமைச்சர் இராஜகோபாலாச்சாரியாரால் (இராஜாஜி) பள்ளிகளில் இந்திமொழி கற்பது கட்டாயம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையை எதிர்த்துத் தந்தை பெரியார் போராட்டம் நடத்தினார்.

தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு முடிந்த மறுநாள் 14-11-1938 அன்று அன்னை தருமாம்பாள் தலைமையில் பெண்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் களம் கண்டனர். 10,000 க்கும் மேற்பட்ட பெண்களும் பொதுமக்களும் திரண்டு-''இந்தி ஒழிக! தமிழ் வாழ்க'' என்ற முழக்கத் துடன் ஊர்வலமாகச் சென்று, சென்னை தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன் மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் அனைவரும் கலைந்து செல்லுங்கள் என்று காவல்துறையினர் ஆணையிட்டனர். ஆனால் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அனைவரும் உரத்த குரலில், இந்தி ஒழிக தமிழ் வாழ்க வென்று முழக்கமிட்டு கலைந்து செல்ல மறுத்தனர், அதன் பின் காவலர் பெண்தலைவர்களை கைது செய்தனர் - டாக்டர். தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மலர் முகத்தம்மையார், திருவாரூர் பாவலர் பாலசுந்தரம் மனைவி பட்டு அம்மாள், தருமாம்பாள் மருமகள்-சீதாம்மாள் (தன் இரு குழந்தைகளுடன் நச்சினார்க்கினியன் 3 வயது, மங்கையர்க்கரசி 1 வயது) ஆகியோர் கைதானார்கள். அப்போது அங்கு நின்று உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்த ஆண்களும் பெண்களும் இந்தி ஒழிக, தமிழ் வாழ்க வென உரத்தக்குரலில் முழங்கினர்.

தமிழினத்திற்கு இந்தியால் ஏற்படவிருந்தக் கேட்டினை ஒழித்திடத் தீரமுடன் போராடிய தாய்மார் களின் வரிசையில் முன்னணியில் இருந்தவர் அன்னை தருமாம்பாள்.

**தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழறிஞர் களுக்காகவும் அன்னைதருமாம்பாள் பெரும் அளவில் உதவியுள்ளார். கருந்தட்டாங் குடியிலிருந்த தன் வீட்டை கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.**

தமிழ் நாடு முழுதும் பள்ளியில் பயிலும் மாணவர் களின் தமிழறிவை வளர்க்கவும், அரசுத் தேர்வுகளில் நிறைய மதிப்பெண்கள் பெறவும், பேச்சாற்றல், எழுத் தாற்றலை வளர்த்துக் கொள்ளவும் சென்னை மாணவர் மன்றம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் தலைவராகப் பத்தாண்டுகள் பணியாற்றி னார். பெரும் பொருள் திரட்டி இந்த அமைப்புக்கு சொந்தக் கட்டடம் ஒன்றை உருவாக்கினார். மயிலை சிவமுத்து நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ள அந்தக் கட்டடம் வடசென்னையில் செயல்பட்டு வருகிறது.

1940 க்கு முன்பு வரை தமிழாசிரியருக்கு சமூகத்தி லும், அரசியலிலும் உரிய மதிப்பினை எவரும் தரு வதில்லை. அவர்களை இரண்டாந்தரமாகவே மதிப் பிடுவர். மற்ற ஆசிரியர்களைவிடக் குறைந்த ஊதியமே பெற்றுவந்தனர், இவ்வேற்றுமையைக் களைந்திட வேண்டும் என்று மாநிலத் தமிழாசிரியர் கழகத்தினர் போராடி வந்தனர். அன்னை தருமாம்பாள் தமிழா சிரியருக்கு ஆதரவாகப் போராடினார். தமிழாசிரியர் ஊதியத்தை மற்ற ஆசிரியர்கள் ஊதியத்திற்கு இணையாக உயர்த்தாவிட்டால் பெண்கள் எல்லாம் ஒன்று கூடி இழவு வாரம் கொண்டாடுவோம் என்று அன்னை தருமாம்பாள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். அன்று தமிழக அரசின் கல்வி அமைச்சர் உயர்திரு அவினாசிலிங்கம் செட்டியார். அவர் தமிழாசிரியர், அன்னை தருமாம்பாள் ஆகி யோரின் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, ஏனைய பட்டதாரி ஆசிரியர்களுக்கு இணையாகத் தமிழாசிரியர்களுக்கும் ஊதியம் வழங்க ஆணையிட்டார். இந்தப் போராட்டத்தின் வெற்றி தருமாம்பாள் மூலம் தமிழுக்குக் கிடைத்த வெற்றியாகும்

1940 க்கு முன் தமிழ் நாட்டில் இசை மேடைகளில் தமிழ்ப்பாடல்கள் இசைப்பதில்லை. தமிழில் பாடுதற் கேற்ற இசைப்பாடல்கள் இல்லை என்று இசைவாணர்கள் செப்பினர், இது அப்பட்டமான பொய்க் கூற்றாகும்.

தமிழிலேயேபாட்டெழுதி, தமிழிலேயே பாடித் தமிழிசையை வளர்த்தவர்கள் அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை எனும் மூன்று பெருமக்கள் ஆவர்.

பொதுவாக கருநாடக இசையின் மும்மூர்த்திகள் என்று அறியப்படும் தியாகய்யர், சியாமாசாஸ்திரிகள், முத்துச் சாமி தீட்சிதர் ஆகியோரைவிட, இவர்கள் காலத்தால்

முற்பட்டவர்கள்.

தமிழிசை மூவரே 'கிருதி' என்று அழைக்கப்படும் கீர்த்தனைகளுக்கு வடிவம் கொடுத்தோர். இன்று உள்ள பல்லவி, அனுபல்லவி, சரணம் அல்லது எடுப்பு, தொடுப்பு, முடிப்பு எனும் அமைப்பு இவர்களின் பாடல்களிலேயே காணக்கிடைக்கிறது.

உண்மை இவ்வாறிருக்க, இசைவாணர்கள் தமிழ்ப் பாடலைப் பாடமறுப்பதேன்?

அந்த நாள்களில் பெரும்பாலும் பாடியவர்கள் நால் வருணத்தில் மேல் வருணத்தைச் சேர்ந்தோரே. இசை மேடைகளும் சபாக்களும் அவாள் வசமே இருந்தன. ஆதலால் தமிழ்பாடல்களைப் பாட அவாள் இசைய வில்லை.

தமிழ் நாட்டில் தமிழ்ப்பாட்டு பாடு என்று கேட்க வேண்டியிருக்கிறது என்று சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியார் வருந்திக் கூறினார்.அந்த அளவிற்குத் தமிழில் பாடி மகிழும் உரிமை கூட நமக்கு இல்லாமல் இருந்தது. இப்போக்கை மாற்றவே தமிழிசைச் சங்கம் தோற்றம் கண்டது.தமிழர்களின் உயிர்ப் பகுதியாகிய இசைத் தமிழை வளர்க்கவே இம்முயற்சியில் பல தமிழறிஞர்கள் தலையிட்டனர்.இதில் செட்டிநாட்டு அரசர் இராஜா சர். அண்ணாமலை செட்டியாருடன் அன்னை தருமாம் பாளின் பங்கும் உண்டு

இரண்டாம் தமிழிசை மாநாட்டிற்கு அன்னை தருமாம்பாள் வரவேற்பு குழு உறுப்பினராக இருந்து பணியாற்றினார். இன்று தமிழிசைப்பாடல்கள் மேடை யில் முழங்குகிறது என்றால் அதில் அன்னை தருமாம் பாளின் பங்கும் உண்டு.

**1948 இல் ''இந்துநேசன்'' பத்திரிக்கை ஆசிரியர் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில், எம்,கே. தியாகராஜ பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. டி.ஏ. மதுரம் செய்வதறியாது அன்னை தருமாம்பாளை அணுகினார். இலண்டனி லுள்ள பிரிவியூ கவுன்சிலில் மேல் முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. அன்னை தருமாம்பாள் சென்னை யிலுள்ள பலரை அணுகிப் பொருள் திரட்டி வழக்கினை நடத்தி வெற்றியும் பெற்றார்.கலையுலகம் அன்னை தருமாம்பாளை வாழ்த்திற்று.**

தன் வாழ்நாள் முழுதும் தமிழ்மக்கள், தமிழ் மொழி தமிழிசை ஆகியவற்றின் மேன்மைக்காகவே வாழ்ந்த அன்னை தருமாம்பாளுக்கு 1951 இல் திருவிக தலை மையில் நடைபெற்ற மணிவிழாவில் தமிழறிஞர் டாக்டர் அ.சிதம்பர நாதன் செட்டியார் வீரத்தமிழன்னை என்ற பட்டத்தை வழங்கினார்.

**வீரத்தமிழன்னை பட்டம் பெற்ற அன்னை தருமாம் பாள்தான் ஈ.வெ.ராமசாமிக்கு பெரியார் என்ற பட்டத் தையும். தியாகராஜ பாகவதருக்கு ஏழிசை மன்னர் என்ற பட்டத்தையும், எம்.எம்.தண்டபாணி தேசிகருக்கு இசையரசு என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்புச் செய்தார்.**

மக்கள் தொண்டு புரிந்து வாழ்ந்த அன்னை 1959 ஆம் ஆண்டு தனது 69 வது அகவையில் இம் மண்ணு லகை நீத்தார்.

**புகழாரம்**

கரந்தையில் டாக்டர் எஸ்.தர்மாம்பாளின் நினை வினைப் போற்றும் வகையிலும், அவர்களது தொண்டி னைச் சிறப்பிக்கும் வகையிலும், தமிழக அரசு, இவரது பெயரிலேயே, டாக்டர் தர்மாம்பாள் அரசு பெண்கள் பாலிடெக்னிக் ஒன்றினைத் தொடங்கி நடத்தி வருகின்றது. சென்னை மாணவர் மன்றம் தர்மாம்பாளை நினைவு கூரும் வகையில் ஒரு நடுநிலைப் பள்ளியை நடத்தி வருகிறது. சென்னை மாநகராட்சி இவரது பெயரில் ஒரு பூங்காவை அமைத்துள்ளது.

**வாழ்க அவரது புகழும் தொண்டும்!**

## தமிழினக் களப் போராளி
# பெ. பராங்குசம்
### நூல் வெளியீட்டு விழா

''தமிழினக் களப் போராளி பெ. பராங்குசம்'' என்ற நூல் வெளியீட்டு விழா, புதுச்சேரி மங்கலட்சுமி திருமண நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்மாமணி, புலவர் பூங்கொடி பராங்குசம் வரவேற்புரை ஆற்றினார். புலவர் கி.த. பச்சையப்பன் தலைமை உரை ஆற்றினார். தமிழ் மாமணி புலவர் நாகி முன்னிலை உரை ஆற்றினார்.

**''தமிழினக் களப் போராளி பெ. பராங்குசம்''** என்ற நூலை, மாண்பமை நீதி அரசர் தாவீது அன்னுசாமி வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியர் மாமணி தெ.வே. சஞ்சீவிராயன் சிறப்புரை ஆற்றினார். தமிழ்மாமணி புலவர் துரை. மாலி றையன், பேராசிரியர் இராச. குழந்தைவேலனார் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

எழுச்சித் தமிழ்மாமணி பெ. பராங்குசம் ஏற் புரையும் நன்றியும் கூறினார்.

தேசியக் குழந்தை விருதாளர் கு.அ. தமிழ்மொழி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் ஏராளமான தமிழன்பர்கள் பங்கு கொண்டனர்.

- **பெ. பராங்குசம்,** நிறுவனர்
புதுச்சேரி இலக்கியப் பொழில் இலக்கிய மன்றம்

# மத்திய அரசு நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2500/- வழங்க வேண்டும்! ஏன்?



மத்திய அரசு நெல்லுக் கான ஆதரவு விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.200/- உயர்த்தி அறிவித் துள்ளது.

2018 சூலை முதல் 2019 சூன் வரையிலான பயிர் ஆண்டுக்கு சாதாரண ரக நெல்லுக்குக் குறைந்த பட்ச ஆதரவு விலை ரூ.200/- உயர்த்தி ரூ.1750/- ஆக நிர்ணயிக்கவும், 'ஏ' கிரேடு (சன்ன ரக) நெல்லுக் கான விலையை ரூ.180/- உயர்த்தி ரூ.1770/- ஆக நிர்ண யிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு விவசாயிகளிடையே பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களின் கூலி, டீசல் விலை, இயந்திரத் தளவாடங்களின் வாடகை, உரங்களின் விலையேற்றம், தண்ணீர்த் தட்டுப்பாடு ஆகியவற்றை மத்திய-மாநில அரசுகள் கருத்தில் கொள்ளாததுதான், நெல்லுக்கான விலை நிர்ணயக் குளறுபடிக்கான காரணம். மேலும் சந்தையில் (கர்நாடக) பொன்னி அரிசியின் விலை ஒரு கிலோ ரூ.50/- என விற்பனையாகிறது.

இதன்படிக் கணக்கிட்டால், ஒரு கிலோ நெல்லுக்கு அரசு விலை ரூ.25 என நிர்ணயிக்க வேண்டும். ஆனால் தற்போது ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.17.70 மட்டுமே விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது எந்த வகையில் நியாயம்?

### ஒரு ஏக்கர் நெல் சாகுபடி விவரம்

| | |
|---|---|
| விதை நெல் 30 கிலோ | ரூ. 1000 |
| நாற்று உழவு மற்றும் ஓரம் கட்டக் கூலி | ரூ. 1500 |
| உழவு 5 மணிநேரம் | ரூ. 5500 |
| பரம்பு ஓட்ட | ரூ. 1000 |
| வரப்பு கட்ட 4 ஆள்கள் கூலி | ரூ. 1600 |
| நடவு கூலி | ரூ. 3500 |
| யூரியா 2 மூட்டை | ரூ. 540 |
| டி.ஏ.பி. உரம் 2 மூட்டை வீதம் (2 முறை) | ரூ. 2550 |
| சிங்க் சல்பேட் 10 கிலோ | ரூ. 570 |
| நுண்ணூட்டம் | ரூ. 250 |
| அம்மோனியா சல்பேட் (கதிர் உரம்) | ரூ. 750 |
| பொட்டாஷ் 1 மூட்டை | ரூ. 670 |
| களையெடுக்கும் கூலி ஆள் 7 பேர் | ரூ. 1400 |
| பயிர்ப்பாதுகாப்பு மருந்து மற்றும் மருந்தடிக்க | ரூ. 3000 |
| அறுவடைச் செலவு | ரூ. 2000 |
| மொத்தச் செலவு | ரூ.25830 |

* மொத்தச் செலவு ரூபாய் இருபத்தைந்தாயிரத்து எண்ணூற்று முப்பது.

மேற்கண்ட செலவினங்களில் 4 மாத அறுவடை வரை வயலுக்கு நீர் பாய்ச்சுவது, எலித் தொல்லையைக் கட்டுப்படுத்துவது, வரப்புப் புல் அறுப்பது - இதில் நடவிலிருந்து 3 மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 எனக் கூலி நிர்ணயம் செய்து கணக்கிட ரூ.9000 ஆகும். இதில் விவசாயக் கூலியாள்களுக்குக் குறைந்தபட்சக் கூலியே கணக்கிடப்பட்டுள்ளது.

**நெல் சாகுபடி செலவு ரூ.25830 + விவசாயியின் கூலி ரூ.9000 ஆக ரூ.34830 ஆகிறது. தமிழக அரசின் பண்ணை நிர்வாகத்தில் 2015ஆம் ஆண்டின் போது ஒரு கிலோ நெல்லுக்கான உற்பத்திச் செலவு ரூ.27.50 எனக் குறிப்பிடப்படும் நிலையில் தற்பொழுது மேலும் கூட்டியிருக்க வாய்ப்புண்டு.**

**மேற்கண்ட அனைத்துச் செலவுகளையும் செய்து ஒரு ஏக்கரில் அதிகபட்சமாக 25 முதல் 30 மூட்டை நெல் (77 கிலோ எடை கொண்டது) கிடைக்கும். சற்றொப்ப 20 குவிண்டாலாகக் கணக்கிட்டாலும் மத்திய அரசு அறிவித்துள்ள விலைப்படி ரூ.35400 கிடைக்கும். வேளாண் அறிஞர் எம்.எஸ். சுவாமி நாதன் அறிக்கை விவசாய உற்பத்திச் செலவைவிட விவசாய விளை பொருள்களுக்கு 50 விழுக்காடு கூடுதலாக விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தபடி, கிடைக்கவில்லை.**

மேலும் 2022ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருவாய் இரண்டு மடங்காக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதமர் கூறி வருகிறார். அதற்கேற்ப நெல் விலை உயர்த்தி அறிவிக்கப்படவில்லை. உர விலையை உயர்த்திவிட்டு நெல்லுக்கான விலையைக் குறைந்த அளவில் உயர்த்தியிருப்பது விவசாயிகளை வஞ்சிப்பதாகும். விவசாயிகளின் நிலையைப் புரிந்து கொண்டு மத்திய மாநில அரசுகள் செயல்பட வேண்டும்.

நிகழாண்டு நெல்லுக்கான ஊக்கத்தொகை அறிவிப்பை மறுபரிசீலனை செய்து, மத்திய-மாநில அரசுகள் உயர்த்திட வேண்டும். தமிழ்நாடு அரசும் தம் பங்கிற்கான ஊக்கத் தொகையை உயர்த்தி அறிவித்து நெல் விலையைக் குவிண்டாலுக்கு ரூ.2500 என வழங்கிட வேண்டும், என வேண்டுகிறோம்.

**கு. வரதராசன்**, பூலாம்பாடி

**தனித்தமிழ் இயக்கம் (இலக்கிய, குமுகாயத் தொண்டியக்கம்) அறிவிப்பு**

## தனித்தமிழ் இயக்கம் நடத்தும் தனித்தமிழ்ச் சிறுகதைப் போட்டி
## * பரிசு உருவா 1000/-

*** கதைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 20.8.2018**

கதைகள் சேர வேண்டிய முகவரி : முனைவர் க. தமிழமல்லன், தலைவர் : தனித்தமிழ் இயக்கம்
எண்.66, மாரியம்மன் கோவில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.
தொ.பே. : 2247072, 97916 29979 vtthamizh@gmail.com

**போட்டிக்கான நெறிமுறைகள்**

1. நான்கு பக்கங்கள் அளவில் மிகாத குமுகாயக் கதைகளை 2 படிகள் மட்டும் அனுப்புக.
2. தாளின் ஒரு பக்கம் மட்டும் எழுதுதல் வேண்டும். தாளின் பின்பக்கத்திலோ, முன்பக்கத்திலோ பெயரோ முகவரியோ முத்திரையோ இருக்கக் கூடாது.
3. கதையின் மேல் தனித்தாளில் எழுதியவர் பெயரையும் கதையின் பெயரையும் இணைத்து அனுப்புக.
4. ஆங்கிலம், வடமொழி முதலிய பிறமொழிச் சொற்களையோ பெயர்களையோ கலக்காமல் தனித்தமிழில் கதைகள் அமைதல் வேண்டும்.
5. கதைக்கேற்ற ஓவியங்களை அனுப்பலாம்.
6. ஒருவர் பல கதைகளை அனுப்பலாம்.
7. கதைகளை நூலாக்கும் உரிமை, பதிப்பிக்கும் உரிமை ஆகியவற்றுக்குத் தனித்தாளில் ஒப்புதல் தருக.

**கதைகள் 12.09.2018 வெல்லும் தூய தமிழ் மாத இதழில் தொகுப்பாக வெளியிடப்படும்.**

விரும்பும் அன்பர்கள் 20/- உருபா அனுப்புக.
தனித்தொகுப்பாகவும் வெளியிட முயல்வோம் அதன் முழு உரிமை இயக்கத் தலைவர்க்கு உரியதாகும்.
**1. முதற்பரிசு உருவா 500/- 2. இரண்டாம் பரிசு உருவா 300/- 3. மூன்றாம் பரிசு உருவா 200/-**

## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **வழ. பொற்கொடி** |
| வயது | : | 48 |
| | | சட்டப்படி விவாகரத்தானவர். |
| கல்வித் தகுதி | : | M.A., M.Phil., |
| மகள் | : | திருமணமாகிவிட்டது. |
| எதிர்பார்ப்பு | : | இருப்பிடம் - திருச்சி. கல்வித் தகுதி என்பது முக்கியமானதல்ல. பெரியாரியல் கொள்கையில் முழு ஈடுபாடு உடையவராக இருத்தல் வேண்டும். |
| தொடர்பிற்கு | : | 98655 24094<br>81109 69860 |
| முகவரி | : | பொற்கொடி, வழக்கறிஞர்<br>பெரியார் இல்லம்,<br>M-65, போலீஸ் காலனி,<br>அண்ணா நகர், திருச்சி-26. |

## வாணியம்பாடி கருத்தரங்கம்



வேலூர் மாவட்டம் வாணியம்பாடியில், மா.பெ.பொ.க. மற்றும் புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் 16.7.2018 அன்று மாலை தமிழர் உரிமை மீட்புக் கருத்தரங்கம் மா.பெ.பொ.க. நகரச் செயலாளர் சீனி.பழனி தலைமையில் நடைபெற்றது. நா.மதன கவி வரவேற்புரையாற்றினார். மா.பெ.பொ.க. தோழர்கள் சா.குப்பன், சி.பெரியசாமி, இரா.பச்சமலை, புலவர் அ.சகாதேவன், தமிழக மக்கள் முன்னணியின் தோழர் நா.செவ்வேள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரா.முல்லை, பாலாறு பாதுகாப்பு இயக்கத் தோழர் ஏ.சி.வெங்கடேசன் ஆகியோர் பறிக்கப்படம் தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கு மேற் கொள்ள வேண்டிய செயல்திட்டங்கள் குறித்து உரை யாற்றினர். மா.பெ.பொ.க.தோழர் திருப்பதி நன்றி கூறினார்.

# வே.ஆனைமுத்து அவர்களுடன் தோழர்கள் சந்திப்பு



இடஒதுக்கீட்டுப் போராளி, மண்டல் குழு அமையப் பாடுபட்ட அய்யா ஆனைமுத்து அவர்களின் 94ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 07.07.2018 அன்று தாம்பரத்தில் உள்ள அவரது மூத்த மகன் தோழர்.ஆனை பன்னீர்செல்வம் அவர்களின் இல்லத்தில், கு.தனசேகரன் (வருமானவரித்துறை), சதீஷ் கண்ணா (மணலி பெட்ரோலியம் தொழிற்சாலை), டி.இரவிச்சந்திரன் (இரயில்வே) ஆகிய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் சைதை மா.அன்பரசன் (திமுக பொதுக்குழு உறுப்பினர்) ஆகியோர் அய்யா அவர்களிடம் நலம் விசாரித்து நீண்ட நேரம் உரையாடி மகிழ்ந்தனர். சந்திப்பில் தனசேகரன் அவர்களின் துணைவியார் லதா மற்றும் அவரின் இளைய மகள் இளவேனில் ஆகியோரும் உடனிருந்தனர். அன்பான உபசரிப்பினை அய்யா அவர்களின் குடும்பத்தினர் அளித்தனர். சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக அய்யா அவர்களிடம் மேற்படி தோழர்களால் ரூ.5000/- அளிக்கப்பட்டது.

**கு.தனசேகர்,** பொதுச் செயலாளர்
வருமானவரி பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலப் பேரவை, 9445953388



# பெரியார் பெருந்தொண்டர் விழுப்புரம் சி. அப்பாவு மறைந்தார்

08.08.1976இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி (பெரியார் சமஉரிமைக் கழகம்) தொடங்கப்பட்டவுடன் முதன்முதலாக விழுப்புரம் நகரச் செயலாளர் பொறுப்பேற்ற முது பெரும் பெரியார் பெருந்தொண்டர் சி. அப்பாவு அவர்கள் தம் 82ஆம் அகவையில் 15-07-2018 அன்று மறைவுற்றார். விழுப்புரம் மாவட்ட மா.பெ.பொக செயலாளர் ஆ.கு.ஆறுமுகம், அனைத் திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவைச் செயலாளர் கலசம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தோழர்கள் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர். 28.07.2018 அன்று மாலை 5 மணிக்குத் தொடங்கிய அன்னாரது நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வுக்கு முற்போக்கு ஆசிரியர் த.பாலு தலைமையேற்க, மேனாள் சட்டப்பேரவை உறுப்பினர் கு.பா.பழனியப்பன் படத்திறப்புச் செய்தார். தமிழியக்கச் செயலர் எழில்.இளங்கோ வரவேற்புரை நிகழ்த்திட இரா.இராமமூர்த்தி (இ.பொ.க - மா), இரா.சர்க்கரை (தி.மு.க), ஆ.இரவிகார்த்திகேயன் (மருதம்), கோ.பாபு (உ.த.பே), உலக.துரை (பா.பே), ஆ.ஜோசப் (த.ஆ.மு.ச), ஆ.கு.ஆறுமுகம் (மா.பெ.பொ.க) உள்ளிட்ட பல்வேறு முற்போக்கு அமைப்புகளின் தோழர்கள், விசுவகர்ம ஆபரணத் தொழிலாளர் சங்கத் தோழர்கள் புகழஞ்சலி செலுத்தினர். இறுதியாக சி.அப்பாவு அவர்களின் மூத்த புதல்வரும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றக் கழகத் தலைவருமான அ.வீரமணி நன்றி நவின்றார்.

தோழர் அப்பாவு மறைவு மா.பெ.பொ.க மற்றும் அதன் துணை அமைப்புகளுக்கும், பெரியார் தொண்டர்களுக்கும், அவர் குடும்பத்தாருக்கும் பேரிழப்பாகும்.

- முனைவர் **ஆ.முத்தமிழ்ச்செல்வன்**

## இன்னுமிருப்பீர், இன்னொரு தலைமுறை!



தொண்ணூற்று நான்கைத் தொட்டது கண்டு
தொண்டின் நீட்சியைத் தொழுதிடும் காலம்!
கண்முன் இங்கொரு கருத்தின் உலைக்களம்
கனவாய் விரிவது மானுடச் செம்புலம்
மண்ணின் உறவொடு மலரும் சிந்தனை
மக்களின் விடுதலைக் குற்றதும் செல்வழி
எண்ணில் நூறெனில் இறக்கிச் சொல்வது
இன்னு மிருப்பீர், இன்னொரு தலைமுறை!

கிழவன் படைத்தது கிழக்கின் வெளிச்சமே
கேடென் றுரைத்தவர் ஆடிக் கவிழ்ந்தனர்
அழுகைப் பாடலை அறிவென் றேத்திய
அழிவைத் தூர்த்தவர் முழவை ஏந்தினை
எழுதி எழுதியெம் பழுதை நீக்கினை
ஏறி மேடையில் சீறி முழங்கினை
எழுக! விழி!யென் றெம்மை ஊக்கிட
இன்னு மிருப்பீர், இன்னொரு தலைமுறை!

ஒடுங்கிய உடலில் ஒடுங்கா உள்ளம்
ஓய்வு ஓய்ந்திடும் ஓயா உழைப்பு
நடுங்கா அறிவு நாச்சொல் தெளிவு
நாட்டிய கொள்கையில் பூட்டிய திண்மை
படும் பாடுகளில் அடங்காத் துணிவு
படமாய் விரியும் நெடுவர லாறே
எடுமாப் புகழே! ஏந்தல்! நெடுநாள்
இன்னு மிருப்பீர், இன்னொரு தலைமுறை!

- **சி.ந. சந்திரசேகரன்,** கோவை

## மடல் பகுதி

பெரியார் கண்ட பேரறிஞர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கட்கு, வணக்கம்.

தங்களுக்கு 94ஆம் பிறந்த நாள் வாழ்த்துகள். நலமுடன் நெடிது வாழ வேண்டுகிறேன்.

தமிழகத்தில் சமுதாயத்திற்கு வேண்டிய தரமான சிந்தனைகளைத் தக்காரைக் கொண்டு ஏ4 அளவில் நாற்பத்து நான்கு பக்கங்கள் பதினைந்து உரூபாய்க்கு வெளிவருவது சிந்தனையாளன் மட்டுமே. இப்பெருமை தங்களுக்கே உரியது.

சூலை 2018 இதழில் தமிழேந்தியின் சாட்டையடிகள் கவிதைகள் தலைநிமிர வைக்கின்றன. கட்டுரைகள் அனைத்தும் கனல் கக்குபவை. குட்டுவன் கட்டுரை மோடியின் சீரழிவுச் செயல்களைத் தோலுரித்துக் காட்டுகிறது. தன்மானக் கொள்கை மறவர் ஏ.டி. பன்னீர்செல்வம் வரலாறு இன்றைய இளைஞர்கள் கற்றுணர வேண்டுவது. இன்று உலவும் பன்னீர் செல்வம் பெயர் பெற்றவர்கள் அவர் நினைவால் சூட்டப்பட்டவர்களே என்பதை அறிய வேண்டும். பன்னீர்செல்வம் மகனை நான் காரைக்காலில் பார்த்திருக்கிறேன். அப்பாவைப் போன்றே தோற்றமுடையவர்.

**தாங்கள் தொகுக்கும் தந்தை பெரியார் வரலாறு தங்களால் மட்டுமே இயலும் என்பதைத் தாங்களும் அறிவீர்கள். அதனால் இவ்வரலாற்றை முழுமையாக வெளியிட ஆவன செய்து விரைவில் வெளியிட வேண்டுகிறேன். இதையே நான் மீண்டும் தங்களை வலியுறுத்துகிறேன்.**

உடல் நலனை நன்கு பேணி, இப்பணியையும் நிறைவேற்றித்தர வேண்டுகிறேன். நன்றி.

தோழமையுடன்
முனைவர் அ. ஆறுமுகம்
தலைவர், **திருமழபாடித் தமிழ்ச்சங்கம்**

★★★★★

அன்புடையீர்,

2018, சூலை இதழ் அட்டைப் படத்தில் இலைகளால் மூடியிருந்த சிறுவர்களின் படம் நெஞ்சைப் பிளந்தது. ‘எழுவர் விடுதலை எப்போது’ - என நானும் ஏங்குகிறேன். ‘மனுசங்கடா’ பாடலை நான் பல தெருக்களில் பாடியதை நினைத்து அஞ்சலி செலுத்தினேன். அற்புதம்மாவின் கடிதத்தை ஏற்று மீண்டும் தமிழகம் கொந்தளித்து விடுதலை சாதிக் கப்பட வேண்டும்.

- **தமிழன்**
பெரிய நாயகபுரம்

# வளம் காப்போம்

சோழநாடு சோறுடைத்து என்று புகழ் பெற்ற தமிழகத்தில், பல ஆயிரக்கணக்கான செடிகள், மூலிகைகள், பல உயிரினங்கள் அழிந்துவிட்டன. இப்பொழுது மனிதர்களே வாழத் தகுதியற்றதாக நிலம் மாறிவிட்டது.

இயற்கையாகவே நிலம் வளம் பெற்று நம்முடன் பல உயிரினங்கள் சேர்ந்து வாழ்ந்தபொழுது மட்டுமே. நாமே நம் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொண்டோம். காடுகளையும், புல்வெளிகளையும், அழித்தனர். நீர்வரத்துக் குறைந்தது. இருக்கின்ற நீர்நிலைகள் அரசியல்வாதிகளாலும் வீட்டுமனைத் தரகர்களாலும் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

தரம்மிகுந்த தானியங்களிலிருந்து உணவுப் பொருள்கள் தயாரிக்கும்பொழுதே உணவின் மணம் ஊர் எல்லையைத் தாண்டி மணக்கும். இப்பொழுது உற்பத்தியாகும் உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் அனைத்தும் இரசாயன உரம் போட்டு விளைவிக்கப்படுகிறது. இதே தன்மையில் கோழி, இறைச்சி, மீன் முதலானவை இரசாயனம் கலந்து பயன்படுத்தப் படுகிறது.

நம்மிடையே உள்ள வியாபாரிகள் நுகர்வோர் உடல்நலம் பற்றிக் கவலைப்படாமல் இரசாயனப் பொருள்கள் கொண்டு காய்கறிகள், பழம், பால், மீன், இறைச்சி போன்றவற்றைப் பதப்படுத்தி விற்பனை செய்கின்றனர். இதுபோன்ற உணவு பொருள்களை வாங்கி உண்பவர்களுக்குப் பல நோய்கள் வருகின்றன. விளைவு, நல்ல வளர்ச்சியுடன் குழந்தைகள் பிறப்பதில்லை. இந்த இரசாயனங்கள் புற்றுநோய்க்கு வித்திடுகின்றன.

தமிழகத்தில் இதுபோன்று கேடு செய்பவர்களை ஆளும் அரசும், அதிகாரிகளும் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதில்லை. உழவுத் தொழிலையும் மண்வளத்தையும் காப்பாற்ற ஆடு, மாடு, மற்ற உயிரினங்களையும் அனைத்து நீர் நிலைகளையும் காப்பாற்ற வேண்டும்.

- உழவர் மகன் ப.வ.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஆகத்து-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஆகத்து-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |



## என்.எஸ்.இளங்கோ மறைவு

என்.எஸ்.இளங்கோ தொடக்கத்தில் திராவிடர் கழகத்தில் பணியாற்றி 1949இல் அண்ணாவால் தி.மு.க. தொடங்கப்பட்ட போது அவருடன் இருந்தார். இவர் கட்சியின் முதல் கொள்கைப் பரப்பு செயலாளராக இருந்தவர். மேலும் இவர் தி.மு.க.வின் தஞ்சாவூர் மாவட்ட முதல் செயலாளர். 15.9.1948 அன்று தி.மு.க.தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தயாளு அம்மாள் அவர்களுக்கும் திருமணம் நடைபெற்ற போது சிறப்புரை ஆற்றும் விருந்தினர்களில் அண்ணாவிற்கு அடுத்தப்படியாக இளங்கோ இடம் பெற்றிருந்தார். தற்போது உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இளங்கோ 31.7.2018 அன்று மறைவுற்றார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு மா.பெ.பொ.க. ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**